இதழ் 225

# மண்

ஜேர்மனி / 2024

வைகாசி - ஆனி / May - Jun



சர்வோதய நிறுவனத்தின் ஸ்தாபகரும்


ஸ்ரீ லங்காஹபிமான்ய

## கலாநிதி ஏ. டி. ஆரியரத்ன

(05.11.1931 - 16.04.2024)

**63 வருடங்கள் ஓயாது உழைத்த மாமனிதர்...**

**மனிதநேயப் பெருந்தகையாளர்...**










மண் சஞ்சிகையின் வாசகர் திரு திருமதி சௌந்தரராசா சௌந்தலாதேவி தம்பதிகளின் மகன் செல்வன் கவீசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் மல்லாவி-துணுக்காய் ''ஒளிரும் இல்லப்'' பிள்ளைகளுக்கும் உணவு வழங்கல் 19.02.2024











மண் சஞ்சிகையின் வாசகர் திரு திருமதி மனோஜ்சியான் சூரியா தம்பதிகளின் மகள் செல்வி அமீரா அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் புதுக்குடியிருப்பு ''ஒளிரும் இல்லப்'' பிள்ளைகளுக்கும் உணவு வழங்கல் 18.03.2024

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

015254799233

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

இலங்கை நாடு 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு முகம்கொடுத்தது. அதன் விளைவாக நாடே வங்குரோத்து நிலைக்கு உள்ளானது. அதன் விளைவாக மக்கள் பலவிதமான அசௌகரியங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டனர். அந்த பொருளாதார வீழ்ச்சியின் சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம்கொடுக்க முடியாமல் அன்றைய ஆட்சியாளர்கள் பதவி விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அத்தோடு அப்பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தலைமை தாங்கவென எவரும் துணிந்து முன்வராத இக்கட்டான சூழ்நிலையும் உருவாகி இருந்தது.

அவ்வாறான நெருக்கடிமிக்க சூழலில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையைப் பொறுப்பேற்றார். நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி இப்பதவியை ஏற்ற அவர், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களைப் பரந்த அடிப்படையில் முன்னெடுத்தார். அவை கட்சி நலன்களுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்திய திட்டங்களாக மாத்திரமன்றி மக்களுக்கு மேலும் சுமையாக அமையாத, முற்றிலும் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டங்களாக அமைந்திருந்தன.

அதன் பிரதிபலனாகவும் ஐக்கியநாடுகள் சபை, உலக நாணய நிதியம், ஐரோப்பிய யூனியன், மற்றும் பல நாடுகளின் பேருதவிகளால் இப்பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் குறுகிய காலத்தில் பயனளிக்கத் தொடங்கின. இதன் விளைவாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாடும் மக்களும் முகம் கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. இவை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்கள் குறித்து மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்தின.

தற்போது நாட்டில் அரசியல் குழப்பங்கள், போதைப்பொருள் கொடுமைகள், கட்டுப்படுத்த முடியாத வீதி விபத்துக்கள், உயிரிழப்புகள் மிகக்கூடுதலாக இடம்பெற்று வந்தாலும் நிலைமை முன்னேற்றம் அடைந்திருக்கிறது. நாட்டில் பெரும்பாலும் இயல்புநிலை ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டை மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டங்களின் பயனாகவே நாடு தற்போதைய முன்னேற்றகரமான நிலையை அடைந்திருக்கிறது.

இல்லாவிடில் இலங்கையும் ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த சில நாடுகளைப் போன்று வன்முறைகள் நிறைந்த நாடாகவே மாறி இருக்கும். அந்த நிலையில் இருந்து நாட்டை பாதுகாத்த பெருமை ஜனாதிபதியையே சாரும். அதுவே நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்டவர்களின் கருத்தாகும்.

ஆகவே தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களால் நாட்டில் உண்மையான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதில் மாற்றுக்கருத்தில்லை. அதனை சர்வதேசமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதனால் நாட்டின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் வளர்ச்சிக்காக புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் தாயக மக்களும் இன, மத, மொழி பேதங்களை மறந்து அனைரும் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்க வேண்டும். அப்பொழுதுதான் நாடு சுபீட்சத்தை எட்டும் என்பது யதார்த்தமாகும் . அதுவே இன்றைய தேவையுமாகும்.

**- ஆசிரியர் -**

## எரிக்கப்பட்ட யாழ் நூலகம் 31.05.1981..





ஆசியக் கண்டத்திலேயே தலைசிறந்த நூலகங்களில் ஒன்றாக யாழ்ப்பாணப் பொது நூலகம் கிட்டத்தட்ட 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்தது.31.05.1981

எரிக்கப்பட்ட நூலகத்தில் இருந்த அரிய புத்தகங்கள் சில:

- 1660ல் றொபெர்ட் க்னொக்ச் எழுதிய History of Ceylon
- ஆனந்த கே.குமாரசாமி நூல் தொகுதியில்உள்ள 700 நூல்கள்
- சி.வன்னியசிங்கம் நூல் தொகுதி (100 நூல்கள்)
- ஐசக் தம்பையா நூல் தொகுதி (சமயம்,தத்துவம் பற்றிய நூல்கள் 250)
- கதிரவேற்பிள்ளை நூல் தொகுதி (600 நூல்கள்)
- ஆறுமுக நாவலர் நூல் தொகுதி பைபிள் - முதன்முதலாக தமிழில் எழுதப்பட்ட கையெழுத்துப் படி
- சமயங்கள் பற்றிய கலைக்களஞ்சியம்
- பிரிட்டானியா கலைக்களஞ்சியம் - அமெரிக்க கலைக்களஞ்சியம்
- கொல்லியர்ஸ் கலைக்களஞ்சியம் - மாக்மில்லன் கலைக்களஞ்சியம்
- தமிழகத்தைச் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் எழுதிய அரிய நூல்கள்
- யாழ்ப்பாண வரலாற்று நூலான முதலியார் ராஜநாயகத்தின் பண்டைய யாழ்ப்பாணம்
- தமிழில் முதல் முதலாக வெளிவந்த இலக்கிய கலைக்களஞ்சியமான முத்துத்தம்பிப்பிள்ளையின் அபிதான கோசம்,
- அதன் பின் வந்த சிங்காரவேலு முதலியாரால் தொகுக்கப்பட்ட கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணி,
- சித்த வைத்தியம் சம்பந்தமான பனையோலையில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் என்பன இருந்தன...

**- தொடர்ச்சி 53ம் பக்கம் -**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி....

### கீழ்மை அகற்று...

பள்ளிக்கூடத்தில் பல மாணவர்களுடன் பழகுகின்றாய். அண்டை அயலிலும் பலரோடு பழக்கம் கொள்ள நேரிடும். நீ பழகும் எல்லாருமே நல்லவர்கள் என்று சொல்லிவிட முடியாது. சிலர் சிறப்பான குணநலன்களையும் செயல்களையும் உடையவர்களாக இருப்பார்கள். வேறு சிலர் கெட்ட குணங்களும் கீழான செயல்களும் உடையவர்களாக இருப்பாகள் சில நாள் பழக்கத்திலேயே இதை நீ உணர்ந்து கொள்ளுவாய். ஆகவே கீழ் மக்களாகிய அவர்களுடன் நட்புக் கொள்ளாதே. விலகிவிடு. இவர்கள் சேர்க்கையினால் நீயும் கெட்டுப் போவாய் என்று உனக்கு அற உரை கூறுகின்றார் ஔவைப்பாட்டி. கீழ்மை அகற்று என்று. கீழ்மை என்றால் கீழான - இழிவான குணம் என்று பொருள். உன்னிடமுள்ள இழிவான குணம் செயல்களை நீக்கு என்றும் பொருள் கொள்ளலாம்.

### குணமது கைவிடேல்...

உன் உடல்நிலை பாதிக்கப்படுகின்றது. டாக்டரிடம் போகின்றாய் அவர் உன் நோய்க்கு மருந்து தருகின்றார். இரண்டுவேளை சாப்பிட்டதுமே உடல்நிலை சரியாகி விடுகின்றது. நீ என்ன செய்ய வேண்டும்?.. குணம் அளித்த அந்த மருந்தை விடாமல் தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும். நோய் முழுவதும் குணமாகி நீ பழைய நிலையை அடையும்வரை அம்மருந்தைக் கைவிடக்கூடாது. இதே போலத்தான் உன் வாழ்க்கையில் உனக்குப் பெயரும் புகழும் தரக்கூடிய நல்ல செயல்களைக் கைவிடக் கூடாது. அப்போதுதான் நோயற்ற உடலைப் போல புகழ் பெற்ற வாழ்வைப் பெறலாம்.. இதைத்தான் ஆத்திசூடி ஆசிரியர் குணமது கைவிடேல் என்று போதிக்கின்றார். குணம் - நன்மை, நல்லது தரும் எதையும் விட்டுவிடக் கூடாது.

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## கடமையும் கட்டுப்பாடும்

கடமையைச் சரிவரச் செய்யும்போது, களிப்படைகிறோம்.
கடமையில் இருந்து வராத பணம் காலமறியாமல் கடந்து விடும்.
கருமங்களை காலத்திற்கேற்ப கைகூடக்கற்றுக்கொள்ளுதல்ஒருசிறந்த கலை.
கடமையின் காலங்களில் கண்ணீரும் உண்டு, களிப்பும் உண்டு, கலங்காதே.
கஷ்டம் என்ற நினைப்பு கஷ்டமாகிறது, சுலபம் என்ற நினைப்பு சுலபமாகிறது.
கடந்த காலங்களில் செய்தவற்றையும், செய்யத் தவறியவற்றையும், எண்ணிப்பார்.
கடந்து வந்த நாட்களை பின்நோக்கிப் பாருங்கள், பிழைகளை திருத்தி, திருந்துங்கள்.
கருமங்களை பொறுப்புடன் பார்த்தால், பௌர்ணமியைப் பார்க்கலாம்.
கடந்த காலங்களின் பாடங்களை பாரமாகநினைக்காதே,நல்லபாடமாக நினை.
கட்டிடம் கற்களால் கட்டப்படுகிறது, வாழ்க்கை அன்பால் அமைக்கப்படுகிறது.
கடுமையை அகற்றும்போது, கொடுமையில் இருந்து விடுபட வழி பிறக்கிறது.
கர்வம், கோபம், கடுஞ்சொல், களைந்த காலங்கள் களிப்பானவை.
கட்டுப்படாத மன அலைகள் அடித்துக்கொண்டே இருக்கும்.
கவலை நீக்க கலகம் செய்யாதே, மேலும் கலக்கம் அடைவாய்.
கட்டுப்பாடு இழந்த பழக்க வழக்கங்கள் சீரற்ற நெருக்கடிகளை தோற்றுவிக்கும்.
கட்டுப்பாடுகளை தட்டிக்கழிப்பவர்கள் புற்றுநோய்க்குள் தள்ளப்படுகிறார்கள்.
கட்டுப்பாடு கலைந்து தாறுமாறுகள் நுழையும்போது, துயரத்தில் துடிக்கிறோம்.
கட்டுப்பாடுகள் கஷ்டமாகத் தோன்றினாலும், காலம் பூராவும் காப்பாற்றி வாழ வைக்கும்.
கண்டிப்பு இருக்கலாம் ஆனால் கோபம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை.
கரடுமுரடான எண்ண அலைகள் கஷ்டமான காலங்களைக் கொண்டு வரும்.
கல்வியை கனம் செய்யும்போது, அது உன்னை மேன்மைமிக்கவனாக்கும்.
கனிவான வார்த்தைகளை கவனத்தில் கொள்ளுங்கள் காலம்பூராவும் காப்பாற்றும்.
கண் கதிரவன்போல் கவர்ச்சியானது, எதிலும் நேரான பார்வையாய் இரு.
கணவன் மனைவி வேறுபட்டிராமல் பேச்சிலும், செயலிலும் அன்யோன்யம் அவசியம்.
கடவுளின் நியதிப்படி குழந்தைகள் பிறப்பதற்கு நாம் ஒரு கருவியாக இருக்கிறோம்.
கடவுள் தந்த கண்களையும் காதுகளையும் சரியாகப் பயன்படுத்தி பயன் பெறுங்கள்.
கடவுளின் கட்டுப்பாட்டில் உள்ள காலத்தோடு கருமங்கள் கழிகின்றன.
கடவுளின் காலங்களை கவனமாகக் கழித்துக்கொள் மீண்டும் இக்காலம் காணமாட்டாய்.
கஷ்டங்கள் கூடும்போது கடவுளைத் தேடாமல், காலம் பூராவும் கடவுளை வணங்கு.
கடவுளால் வழிநடத்தப்படாத பகுதி என்று எதுவுமே நம்முன் கிடையாது.

# குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டிய பாதுகாப்பு குறிப்புகள்...

குழந்தைகளுக்கு, ஆபத்து காலத்தில் பாதுகாப்பாக இருப்பது பற்றி கற்றுத்தர வேண்டியது முக்கியமானது. குறிப்பாக, வீட்டில் மின் சாதனங்கள், சமையல் அடுப்பு பயன்படுத்துதல் மற்றும் பிற வேலைகளின்போது, சில நேரங்களில் தீக்காயங்கள் ஏற்படக்கூடும். அத்தகைய சூழ்நிலைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்-டும். அதற்கான சில வழிகளை இங்கு பார்ப்போம்.

விழிப்புணர்வு:

மின்சார வயர்களைச் சுற்றி, எளிதில் தீப்பிடிக்கும் பொருட்களை வைத்து விளையாடுவதைத் தவிர்ப்பது குறித்து, தெரியப்படுத்த வேண்டும். வீட்டில் மின் வயர்கள் சரியான முறையில் சீல் வைக்கப்பட்டுள்ளதா? கேஸ் சிலிண்டர் ஒழுங்காக மூடப்பட்டுள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்-டும். விபத்து ஏற்படுவதற்கு அறிகுறியாக இருக்கும் தீப்பொறிகள், புகை போன்றவை ஏற்பட்டால், அதை உடனடியாகக் கவனிக்கவும். அதை எப்படிக் கையாள்வது என்பதைக் கற்றுத் தந்தால், பெரிய தீ விபத்துகளைத் தவிர்க்கலாம். இது குறித்து உடனடியாக வீட்டில் உள்ள பெரியவர்களுக்குத் தெரியப்படுத்தவும் கற்றுத் தரவேண்டும்.

பாதுகாப்பு விதிமுறைகள்:

திறந்த நிலையில் மின் வயர்கள் இருந்தால், அவற்றில் இருந்து குறைந்தபட்சம் 5 அடி தூரம் தள்ளி இருக்கப் பழக்க வேண்டும். வயர்களை ஈரமான கையாலோ, துணியாலோ தொடுவது, ஒரு ப்ளக்கில் பல உபகரணங்களைப் பொருத்தி சார்ஜ் செய்வது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். ஒரே நேரத்தில் பல கருவிகளை சார்ஜ் செய்தால், அவை அதிக சூடாகி, விபத்-துக்கு வழிவகுக்கும். தேவையில்லாத சமயங்களில் வயர்களை ப்ளக்கில் இருந்து எடுப்பது கூடாது. சுவிட்சுகள் சரியாக அணைக்கப்பட்டுள்ளதா என்பதைக் கவனிப்பதும் அவசியம். ப்ளக்கில் கைத்தொலைபேசி வயர்களைப் பொருத்தியவாறு கைத்தொலைபேசிகள் பாவனை முற்றாகத் தடைசெய்தல் அவசியமானதாகும்.

தப்பிக்கும் வழிமுறைகள்:

வீட்டில், அவசர காலத்தில் வெளியேறும் வழிகளைப் பற்றி குழந்தைகளுக்கு பயிற்சியளிக்க வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறையாவது, தீ விபத்தின்போது எப்படிச் செயல்பட வேண்டும் என்று பயிற்சியளிக்க வேண்டும். தப்பிக்கும் வழித்தடத்தில் குறுக்கீடுகள் இருந்தால் அதை அகற்றிச் சுத்தம் செய்து வைத்திருக்க வேண்டும்.



# முல்லாவின் கதை

ஓர் ஊரில் ஒரு பள்ளி வாசல் இருந்தது. அங்கே தொழுகை நடந்து கொண்டிருந்தது. முல்லா அந்த வழிபாட்டை முன்னின்று நடத்திக்கொண்டிருந்தார். கருணையும் இரக்கமும் மிக்க ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரான அல்லாவின் திருப்பெயரால்... இந்த சமயத்தில் குருநானக் அங்கு வந்தார் அவர் முகத்தில் புன் முறுவல் முல்லாவுக்கு கோபம் வந்து விட்டது. ஏன் சிரிக்கிறாய்? நண்பா! நீ செய்வது தொழுகை அல்ல...அதனால் சிரிக்கிறேன் என்ன சொல்லுகிறாய்? தொழுகை இல்லையா? ஆமாம் உன்னுள்ளே பிரார்த்தனை என்பதே இல்லை முல்லாவின் கோபம் இன்னும் அதிகமாயிற்று. நேராக ஒரு நீதிபதியின் முன்னால் போய் நின்றார். நீதிபதி அவர்களே! இந்த ஆள் நாங்கள் தொழுகிற வேளையில் பள்ளிவாசலுக்குள் நுழைந்தார் அதுமட்டுமல்ல வழிபாடு செய்கிற எங்களைப் பார்த்துச் சிரிக்கிறார்.

இவருக்கு நீங்கள் மரணதண்டனை வழங்க வேண்டும். நீதிபதி குருநானக் பக்கம் திரும்பினார். நிங்கள் சிரித்தது உண்மையா? உண்மைதான் ஏன் சிரித்தீரகள்?அவர் செய்தது பிரார்த்தனை அல்ல...அதனால் சிரித்தேன் அப்படியா ஆமாம்..அவரை நான் சில கேள்விகள் கேட்க தாங்கள் அனுமதிக்க வேண்டும். கேளுங்கள் முல்லா வந்து முன்னால் நின்றார். அவர் கையில் ஒரு புனித குர் ஆனைக்கொண்டு வந்து கொடுங்கள் என்றார் குருநானக் கொடுத்தார்கள். இப்போது சொல்லுங்கள்.. உங்கள் உதடுகள் அல்லாவை உச்சரித்த வேளையில் உங்கள் மனம் வீட்டிலே விட்டு வந்த கோழிகளை நினைத்ததா? இல்லையா? முல்லா கையில் குர் ஆன் இருந்தது. உண்மைதான் என்று முல்லா ஒப்புக் கொண்டார். குருநானக் விடப்பட்டார். குருநானக் முல்லாவை விடவில்லை. நீதிபதி சொன்னார் : முல்லா அவர்களே ! பள்ளி வாசலுக்குப் போய் ஏமாற்றுவதை விட அங்கே போகாமல் இருந்து விடுவது மேல். அங்கே ஒரு வேடதாரியாக இருக்காதீர்கள். கருணைமயமான இறைவனது திருநாமத்தைச் சொல்லும்போது கோழியை நினைக்காதீர்கள் உள்ளே இருக்கிற ஒன்றைத் தேடிச் செல்கிற போது வெளியே இருக்கிற ஒன்று நினைவுக்கு வரலாமா?

# உப்பு மாவிற்கே வெற்றி!...

நூறு மாணவர்கள்கொண்ட பாடசாலை விடுதியில் காலை உணவாக உப்புமா வழங்கப்பட்டது. அதை விரும்பாத 80 மாணவர்கள் உணவில் மாற்றம் வேண்டும் என்று விடுதி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தார்கள். 20 பேர் மட்டும் உப்புமா உணவுக்கு ஆதரவு தெரிவித்தனர். கடைசியில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடாத்துவதென்றும் வெற்றிபெறுபவர்கள் சொல்லும் உணவே மறுநாள் காலையிலிருந்து வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் நாளும் வந்தது வெற்றிகரமாக ஓட்டுப் போடப்பட்டு வாக்கு எண்ணப்பட்டது. ஆச்சரியம் அளிக்கும் வகையில் 80 பேர் எதிராக ஓட்டுப் போட்டும் 20 பேர் ஆதரவுடன் உப்புமா வெற்றி பெற்றது. எப்படி என்றால் 80 பேரும் ஓட்டுப் போட்டும் அனைவரும் ஒருமனதாக ஓட்டுப் போடவில்லை. அதாவது 18 பேர் பூரிக்கும், 16 பேர் தோசைக்கும், 14 பேர் இட்லிக்கும், 12 பேர் பொங்கலுக்கும், 10 பேர் ஊத்தப்பத்திற்கும், 10 பேர் சாம்பார் சாதத்திற்கும் ஓட்டுப் போட்டார்கள்.

கடைசியில் ஜனநாயக முறைப்படி வெற்றி பெற்ற உப்பு மாவே மறுநாள் காலையிலிருந்து வழங்கப்பட்டதாம். இதுதான் ஜனநாயகம். இந்த ஜறநாயக முறைகளையும் பண்புகளையும் மாணவமணிகள் பின்பற்றி வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும்!...

........................................................................................................................

# விடுகதைகளும் விடைகளும்!..

01-பச்சை வண்ணப் பெட்டிக்குள் பளிச்சிடும் முத்துகள் அது எது?..

02-தேகம் சிவப்பு, வாய் அகலம் தகவல் எல்லாம் எடுத்துச் செல்லக்கூடியது எது?..

03-மழை பெய்தால் மலரும் வெயில் அடித்தால் காக்கும் அது என்ன?..

04-உங்க அக்கா குளித்ததும் கருப்பு. எங்க அக்கா குளித்தால் சிகப்பு அவைஎவை

05-அள்ள..அள்ளப் பெரிதாகும் அது என்ன?..

06-துடித்து இடி இடிக்கும் சட சட என்று படபடக்கும் அது என்ன?..

07-ஒற்றை ஓணான் நீண்டதூரம் ஓடும் அது எது?..

08-எங்க அக்கா குள்ளக்கா. அது வைத்தாலும் தூங்கும் அது என்ன?..

09-இளையவன் வீட்டில் நடுவிலான் புற்றில் மூத்தவன் ஆற்றில் இவர்கள் யார்?..

10-பச்சை பச்சை டாக்டர் பால் பால் டாக்டர் குண்டு குண்டு டாக்டர் குதிரைவால் டாக்டர் என்ன இவை?..

விடைகள்:--

(1-வெண்டைக்காய் 2-தபால்பெட்டி 3-குடை 4-கரி, நெருப்பு 5-பள்ளம் 6-வெடி 7-ரயில் 8-அடுப்பு 9-பல்லி, உடும்பு, முதலை 10-வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை)

# நகுலின் குட்டிக் கதைகள் - 5

## உண்மை

உண்மை சொல்வது முக்கியம் என்று உங்களின் அம்மா கூறினார். உங்களின் அம்மா கூறியதை நண்பர்களுடன் சேர்ந்து கதைத்தான். நண்பர்களுடன் சந்தோசமாக , ஆச்சரியமாக விடயங்களை அறிந்து கொண்டான். நண்பர்கள் உலகனின் கருத்துக்களை கேட்டார்கள். மேலும் நண்பர்கள் உலகனிடம் கேள்விகள் கேட்டனர். பின்னர் சந்திரனிற்கு தான் போனது என ஒரு படம் காட்டினான். நண்பர்கள் உலகன் காட்டிய படத்தைப் பார்த்து நீ இங்கு போய் இருக்க மாட்டாய் ஏன் எமக்கு பொய் சொல்கிறாய் எனக் கேட்டனர். அப்போ தான் பொய் சொல்லக் கூடாது என அம்மா சொன்னது நினைவிற்றுகு வந்தது. நண்பர்கள் உலகனைக் கண்டித்தார்கள். இனிவரும் காலத்தில் பொய் சொல்லமாட்டேன் என உலகன் நண்பர்களுக்கு கூறினான்.

சிறிய விடயத்திலும்கூட நாம் பொய் சொல்லக் கூடாது.....

**செல்வன் நகுல் துரையரங்கன்**

..............................................................................................

## சிட்டுக்குருவி

சிட்டுச் சிட்டுக் குருவியே
சின்னஞ் சிறிய குருவியே
வட்ட மிட்டு வானிலே
வந்து தரையில் அமர்கின்றாய்...

கொட்டிக் கிடக்கும் உணவினை
கொத்தித் தின்னும் அழகினை
எட்டி எட்டிப் பார்ப்பதால்
எங்கள் உள்ளம் துள்ளுதாம்...

பட்டுப் போன்ற உடலையும்
பார்க்கும் கண்கள் அழகையும்
தொட்டுப் பார்க்க ஆசைதான்
தோழன் போன்று அருகில்வா...

சுற்றுச் சூழல் கேட்டினால் உன்
சுற்றம் குறைந்து வருவதாய்
மற்றோர் சொல்வார் எங்களை
மதித்து வந்தால் காக்கிறோம்!...

## நாய்க்குட்டி

தோ தோ நாய்க்குட்டி
துள்ளி வா வா நாய்க்குட்டி

வெள்ளை நிற நாய்க்குட்டி
வீரமான நாய்க்குட்டி

அங்கும் இங்கும் ஓடும்
புலியைப் போல பாயும்

திருடன் வந்தால் குரைக்கும்
லொள் லொள் எனக் கத்தும்

வாலை வாலை ஆட்டும்
பாலை நன்றாய்க் குடிக்கும்

நன்றியுள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி!..

# இலங்கையைப் பற்றிய சில தகவல்கள்...

1893- இலங்கையில் முதலாவது தொழில்நுட்பக் கல்லூரி திறக்கப்பட்டது.
1921- லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியுடன் இணைந்தவகையில் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரி உருவாக்கப்பட்டது.
1942- இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியையும் கொழும்பு மருத்துவக் கல்லூரியையும் இணைத்து இலங்கைப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது.
1945- இலங்கையில் இலவசக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது.
1952- இலங்கையில் புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
1956- இலங்கையில் சுய மொழிகள் போதனா மொழியாக்கப்பட்டது.
1960- இலங்கையில் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது.
1978- இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.
1980- இலங்கையில் திறந்த பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது.
1980- இலங்கையில் இலவச பாடநூல்கள் வழங்கப்பட்டன.
1981- மகாபொல புலமைப் பரிசில் திட்டம் உருவாக்கப்பட்டது.
1993- இலங்கையில் இலவச சீருடைகள் வழங்கப்பட்டன.
2001- இலங்கையில் பாடசாலை கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது.
05 - 16 வயது இலங்கையில் கட்டாயக் கல்வி வயது எல்லையாகும்.

- கல்வியலுக்கான தனிப்பீடம் இருக்கும் பல்கலைக் கழகம் கொழும்பு.
- இலங்கையில் 96 கல்வி வலயங்கள் இருக்கின்றன.
- சார்க் வலைய நாடுகளில் கல்விக்காக அதிகம் செலவழிக்கும் நாடு இலங்கை.

# உலகில் மிகப் பெரியவை....

- உலகில் மிகப்பெரிய விலங்கு - திமிங்கிலம்
- உலகில் உயரமான விலங்கு - ஒட்டகம்
- உலகில் உயரமான மலை - இமயமலை
- உலகில் பெரிய கண்டம் - ஆசியாக் கண்டம்
- உலகில் நீளமான நதி - நைல்நதி
- உலகில் ஆழமான ஆழி - மரியானா ஆழி
- உலகில் மிகப்பெரிய நகரம் - லண்டன்
- உலகில் மிகப்பெரிய பாலைவனம் - சஹாராப் பாலைவனம்
- உலகில் பெரிய சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்

## தந்தையும் மகனும்...

செல்வந்தராக வாழ்ந்த நேருவின் தந்தை மோதிலால், சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்றபோது, சிறைச்சாலை உணவு பிடிக்கவில்லை என தம் வீட்டு உணவைக் கொண்டுவந்து சாப்பிட அனுமதி பெற்றுக் கொண்டார். வீட்டுச் சாப்பாட்டை அவர் மட்டும் சாப்பிட முடியுமா?.. தன் நண்பர்களுக்கும் சேர்த்துச் சாப்பாடு கொண்டுவருமாறு வீட்டுக்குச் சொல்லி அனுப்பினார்.. தந்தையாரின் இச்செயலை மகன் நேரு விரும்பவில்லை. தன் கருத்தைப் பலர் முன்னிலையில் தெரியப்படுத்தினார்.

சிறைச்சாலையைச் சிறைச்சாலையாகவே மதித்து, அதை வீடாக நினைப்பது விரோமானது. நாடெங்கிலும் சிறைப்பட்ட சத்தியாக்கிரகிகள் உண்ணும் உணவையே நாமும் உண்ண வேண்டும் என்று கூறினார். . அன்று முதல் மோதிலால் தமக்கென வீட்டிலிருந்து கொண்டு வரும் உணவைத் தவித்துக் கொண்டார். இச் சம்பவத்தின் மூலம் தந்தைக்கு நேர்மையை எடுத்துக் காட்டிய மகன் நேருவின் செயற்பாட்டை அனைவரும் பாராட்டினார்கள்.

## ஆடுகள் கண்டுபிடித்த கோப்பி....

கோப்பியைக் கண்டு பிடித்தது எந்தியோப்பியாவில் இருந்த ஆடுகள் என்று சொன்னால் நம்பமுடிகிறதா?..14ம் நூற்றாண்டளவில் எந்தியோப்பியாவில் ஆட்டு இடையன் ஒருவன் தனது ஆடுகள் ஒரு குறித்த பழத்தை சாப்பிட்டவுடன் ஒரு புதுத் தெம்புடன் துள்ளிக் குதிப்பதை அவதானித்தான். பின்னர் அவன் அந்தப் பழக் கொட்டைகளை சூடாக்கி தண்ணீரில் கலந்து அருந்திப் பார்த்தான்.

அவனுக்குள்ளும் புத்தெழுச்சி ஏற்படுவதை உணர்ந்தான். அவன் அன்று அருந்தியதுதான் உலகின் முதலாவது கோப்பி. (Coffee) இது எந்தியோப்பியா முழுவதும் பரவியது. பால்-சீனி-சர்க்கரை எதுவும் சேர்க்காமல் பருகும் கோப்பியில் கலோரிகள் எதுவும் இல்லை. Black கோப்பிக்கு நம் பசியைப் போக்கும் தன்மை இருக்கிறதாம்.

யப்பான், அயர்லாந்து போன்ற நாடுகளில் யூலை 4ம் திகதி கோப்பி தினமாகக் கொண்டாடப் படுகின்றது. ஜார்ஜ் கன்ஸ்டன்ட் வாஷ ிங்டன் என்ற ஆங்கிலேய வேதியியல் வல்லுநர் 1909ம் ஆண்டு இன்ஸ்டன்ட் கோப்பியை உலகிற்கு அறிமுகம் செய்தார். அதற்கு அவர் வைத்த பெயர் Red Coffee. இன்று கோப்பியைப் பாவிக்காத நாட்டு மக்கள் இல்லை என்றே கூறலாம்...

## சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 43

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 136
## ( வைகாசி - ஆனி 2024 )

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இவ
01-04 கவிச்சக்கரவத்தி என்று அழைக்கப்படுபவர்.
13-14 வீடு கட்டப் பயன்படுவது.
15-16 ஆடு மாடு அதிகமாக உண்பது இது.
வ-இ
08-07 ஆசிரியரை இப்படியும் அழைப்பார்கள்.
12-10 வீட்டில் ஒருவர்.
கீ-மே
10-06 ஊட்டச் சத்துள்ள உணவுப்பொருள்.
13-09 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.
மே-கீ
01-09 இளமையில் இதைப் பெறவேண்டும்.
03-15 சமையலறை உணவுப் பொருள்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## NEWS - செய்தி எவ்வாறு உருவாகியது..

14ம் நூற்றாண்டில்தான் News என்ற வார்த்தை ஆங்கிலத்தில் முதன் முதலாக பழக்கத்தில் வரத்தொடங்கியது. NEW என்பதன் பன்மை வடிவமான NEWS ஐ செய்திகளுக்காகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

ஆனால் நாம் North, East, West, South என நான்கு திசைகளின் முதல் எழுத்தைச் சேர்த்து NEWS என்ற வார்த்தை உருவான கதையைக் கேட்டிருப்போம். உண்மையில் NEWS என்ற வார்த்தையின் ஆதி, திசைகளின் முதலெழுத்தெல்லாம் கிடையாது.

ஆங்கிலத்தில் tidings என்ற வார்த்தைதான் NEWS என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டது. Tidings என்றால் Event, Occurrence,or a piece of news என்று அர்த்தம். திசைகளிலிருந்து வரவில்லை என்றால் வேறு எங்கிருந்து வந்தது. இந்த வார்த்தை?..Nouveau என்ற ( பழங்கால) பிரென்ஸ் வார்த்தையிலிருந்து NEW என்ற ஆங்கில வார்த்தை உருவாகியிருக்கின்றது. பிரென்சிலும் Nouveau வார்த்தையின் பன்மை வடிவமான Nouvelles வார்த்தை " செய்திகள் " என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்படுகிறது.

## காலம் தவறாமை...

காலம் பொன் போன்றது என்பர் பெரியோர். காலத்தின் அருமையினை உணர்த்தும் பொன்மொழி இது ஆகும். "காலம் உயிர் போன்றது " என்றும் ஒரு அறிஞர் கூறுகின்றார். அதாவது உயிர் போனால் திரும்பி வராது. அதுபோல காலத்தை நாம் தவறவிட்டால் திரும்பக் கிடைக்காது. எனவே சிறியவர் முதல் பெரியவர் வரை கடைப்பிடிக்க வேண்டிய நற் பழக்கங்களுள் காலம் தவறாமையும் ஒன்றாகும்.

நாம் எதையும் குறித்த காலத்தில் செய்ய வேண்டும். "பருவத்தே பயிர் செய்" என்று ஔவையார் கூறியுள்ளார். உரிய காலத்தில் செய்யப்படாத பயிர் உரிய பயனைத் தராது. அது போல குறித்த காலத்தில் குறித்த செயல்களை நாம் செய்யாவிட்டால் அவை பயன் தராது.

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயற்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.. காலம் தவறாமல் காரியம் ஆற்றுவது ஓடும் செல்வத்தை ஓடாமல் கட்டும் கயிறு ஆகும். தேவையான சாதனங்களுடன் உரிய நேரத்தையும் அறிந்து செயற்பட்டால் முடியாதவை என்று எவையும் இல்லை என்றெல்லாம் வள்ளுவர் கூறிவைத்துள்ளார்.

மாணவர்களாகிய நாம் எதிலும் நேரம், காலம் போன்றவற்றை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். குறித்த நேரத்தில் குறித்த செயலைச் செய்ய வேண்டும் என்றும் காலம் தவறாமையைக் கைக்கொண்டு நடப்போம். அதன்மூலம் நாம் வாழ்வில் பல நன்மைகளைப் பெற்று நலன் பெறுவோம்!..

## ஒரு சொல் பல பொருள்...

01- வண்ணம் - சாயல், நிறம், வர்ணம்
02- கல்வி - கலை, வித்தை, படிப்பு
03- குடித்தல் - அருந்துதல், பருகுதல், சுவைத்தல்
04- தடாகம் - ஏரி, குளம், பொய்கை, வாவி, கயம்
05- உதயம் - வைகறை, புலர், காலை, விடியல், தோற்றம்
06- உடல் - சரீரம், உடம்பு, மெய், மேனி
07- வண்டு - அறி, கருப்பு, மதுரகம்
08- நீதி - தர்மம், நடு, நியாயம், நெறி
09- நூல் - ஏடு, பனுவல், புத்தகம், பொத்தகம்
10- கணவன் - தலைவன், பதி, நாயகன்
11- இரவு - இராத்திரி, கங்குல், நிசி, இருட்டு
12- உதிரம் - செந்நீர், குருதி, இரத்தம்
13- ஒளி - வெளிச்சம் சுடர், கதிர், பிரகாசம்
14- உணவு - ஆகாரம், ஊண், அடிசில், உண்டி
15- அபாயம் - ஆபத்து, இடர், இடையூறு
16- ஊழியம் - தொண்டு, பணி, சேவை, வேலை
17- அன்பு - நேசம், பிரிவு, இரக்கம், பிரியம்
18- அறிவு - உணர்வு, ஞானம், மதி, விவேகம், புத்தி
19- ஊதியம் - சம்பளம், கூலி, இலாபம், ஆதாயம்
20- காடு - அடவி, கானம், வனம், ஆரணியம்
21- நித்திரை - தூக்கம், உறக்கம், சயனம், துஞ்சல்
22- அழகு - வனப்பு, எழில், வடிவு, கோலம், நிறம், வண்ணம்
23- குழந்தை - மகவு, குழவி, சேய், சிசு, பிள்ளை, மழலை
24- அறிவு - ஞானம், ஆற்றல், விவேகம், புத்தி, வித்தை
25- ஆதி - முதல், ஆரம்பம், தொடக்கம்

---

## எது சிறந்தது..

01- சிறந்த ஆசிரியர் - அனுபவம்
02- சிறந்த புத்தகம் - வாழ்க்கை
03- சிறந்த வருமானம் - உழைப்பு
04- சிறந்த நண்பன் - புகழ்
05- சிறந்த ஆட்டம் - கடமை
06- சிறந்த உணவு - நற்சிந்தனை
07- சிறந்த அணிகலன் - புன்னகை
08- சிறந்த பாதுகாப்பு - நேர்மை
09- சிறந்த ஊடகம் - கல்வி
10- சிறந்த பண்பு - நன்றி

# ஐரோப்பிய கால்ப்பந்தாட்டப் போட்டி - 2024



(செல்வி சாமினா சிவதாசன்)



ஐரோப்பிய கால்ப்பந்தாட்டப் போட்டி (UEFA European Football Championship) ஐரோப்பிய கால்ப்பந்து சம்மேளனத்தின் கட்டுப்பாட்டில் ஐரோப்பிய நாடுகளின் தேசிய ஆண்கள் அணிகளுக்கிடையே நடாத்தப்படும் கால்ப்பந்தாட்டப் போட்டியாகும். 1960ம் ஆண்டு முதல் இப்போட்டி 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது.

அந்த வகையில் இவ்வருடம் ஐரோப்பிய கால்ப்பந்து சம்மேளனம் தனது 17வது போட்டியை 1988ம் ஆண்டிற்குப்பின் இரண்டாவது முறையாக யேர்மனி நாட்டில் நடாத்தவுள்ளது. இப்போட்டியானது 2024 ஆனிமாதம் 14ம் திகதி தொடக்கம் ஆடி மாதம் 14ம் திகதிவரை நடைபெறும்.10 நகரங்களில் நடைபெறும் இப்போட்டியில் மொத்தம் 51 போட்டிகள் இடம்பெறும். இம்முறை தொடக்கப் போட்டி 14.06.2024 அன்று முன்சன் (München) நகரிலும் இறுதிப் போட்டியானது 14.07.2024 அன்று தலைநகர் பேர்ளினிலும் (Berlin) நடைபெறவுள்ளன.

ஏனைய போட்டிகள் Köln, Dortmund, Düsseldorf, Gelsenkirchen, Frankfurt, Hamburg, Leipzig, மற்றும் Stuttgart நகரங்களிலும் நடைபெறவுள்ளன. இவ்வருடப் போட்டியின் அதிகாரபூர்வ சின்னம் ஒரு கரடி (Teddybär) இதற்கு ஆல்பர்ட் (Albärt) என்னும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் ஐரோப்பிய கால்ப்பந்தாட்டப் போட்டியில் 24 நாடுகளின் அணிகள் பங்கேற்க உள்ளன. எங்கள் ஜேர்மனிய நாட்டின் கால்ப்பந்தாட்ட தேசிய அணி 1972ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 14வது முறையாக பங்குகொண்டுள்ள இருக்கின்றது. யேர்மனி நாடு இதுவரை 1972, 1980, 1996 என 3 தடவைகள் இந்தக் கிண்ணத்தை வெற்றிருக்கின்றது. இறுதியாக நடந்த போட்டியில் இத்தாலி நாடு இந்தக் கிண்ணத்தைப் பெற்றது.

ஆனாலும் சிறுதுகாலமாக யேர்மனியின் தேசிய அணியின் திறமை மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் மோசமடைந்திருந்திருந்தபடியால் பல ஆயிரக்கணக்கான யேர்மனிய ரசிகர்கள் மனச்சோர்வடைந்திருந்தனர். ஆனாலும் தற்போது மீண்டெழுந்து பல நாடுகளுடனான சிநேகபூர்வ போட்டிகளில் அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்றபடியால் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றது. போட்டிகளின் முடிவுகளையும் வெற்றியையும் மிகுந்த ஆவலுடன் ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...

### கணக்குப் புதிர்ப்போட்டி முடிவு...

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், இடமிருந்து வலம், வலமிருந்து இடம் கூட்டினால் கூட்டுத்தொகை 10 வரவேண்டும்.
ஒரு பெட்டிக்குள் ஒரு எண் எழுதலாம் மறுபடியும் அதே எண்ணை ஓரே நேர் பெட்டியில் எழுதக்கூடாது.
1 தொடக்கம் 4 வரையிலான எண்களை மட்டும் பயன்படுத்தலாம்.

விடை இன்னொரு பக்கத்தில்....

## அறிந்து கொள்வோம்

ஆபிரிக்காவின் பெரிய நாடு - சூடான்
உலகின் சிறிய நாடு - வத்திக்கான்
உலகில் யானைகள் அதிகமாக உள்ள நாடு - சிம்பாவே
குழந்தை பராமரிப்பில் சிறந்த நாடு - சுவீடன்
உலகில் மிக மகிழ்ச்சியான நாடு - பின்லாந்து
போருக்காக விமானங்களை முதன் முதலில் அனுப்பிய நாடு - இத்தாலி
உலகில் விலை குறைந்த பொருட்கள் விற்பனை செய்யும் நாடு- தாய்லாந்து
உலகில் வருமான வரி இல்லாத் நாடு - குவைத்

**- ஜெயா நடேசன் -**

### உங்களுக்குத் தெரியுமா?..

உலகின் மிகச் சிறிய நாடுகளில் ஐந்து ஐரோப்பாவில் உள்ளன. வத்திகான் நகரம், மொனோக்கோ, சான்மரினோ, லிச்டன்டெயின், மால்ரா ஆகிய ஐந்து நாடுகளும்தான் அவை...

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## இரவல்...

கிழட்டு அணில் மற்ற அணிலைப் பார்த்து... " அடுத்தவர்களின் உழைப்பில் வாழ்வதே சிலருக்கு வாழ்க்கையாகிவிட்டது பார் " என்றது. " ஏன் அப்படிச் சொல்கிறாய் " என்று கேட்டது இரண்டாம் அணில். கிழட்டு அணில் சொன்னது ஓணானைப் பார்த்தேன்...யாரோ ஒரு மனிதன் புது வீடு கட்டிக்கொண்டிருக்கிறானாம்... பக்கத்தில் குப்பை மேட்டில் ஒரு பல்லி இருந்ததாம்.... அது ஓணானிடம் ஏதோ சொன்னதாம். என்னவாம்?... என்றது இரண்டாம் அணில். கிழட்டு அணில் சொன்னது...

**" எனக்குத்தான் வீடு கட்டுகிறான் என்றதாம் பல்லி "**

## இலக்கு...

மைதானத்தின் இரு பக்கங்களிலும் புல்லும் கொள்ளும் பச்சைப் பசேலென்று செழித்திருந்தன. குதிரை ஓட்டப் போட்டி தொடங்கியது. "இந்தக் குதிரைகள் கொள்ளையோ புல்லையோ கொஞ்சம்கூடத் திரும்பிப் பார்க்காமல் ஓடுகின்றனவே " உனக்கு இது வியப்பாக இல்லையா?.. என்று ஓர் ஆடு மற்ற ஆட்டைப் பார்த்துக் கேட்டது. " போட்டிக் குதிரைகள் அப்படித்தான் " என்றது இரண்டாம் ஆடு. பிறகு அது சொன்னது..

**" வெல்லப் பாயும் குதிரை புல்லைப் பார்க்குமா?...<br>கொள்ளைக் பார்க்கமா?...**

# குறளும் பொருளும்...

## மன்னரைச் சேர்ந்தொழுகல்:-

691 - அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

692- மன்னர் விழைய விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

693 - போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

694 - செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.

695 - எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.

696 - குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

697 - வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

698 - இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

699 - கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.

700 - பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

# குறளும் பொருளும்...

## அரசுடன் சேர்ந்து செயலாற்றல்..

691- பகை அரசிடம் பழகும் அமைச்சர் அவரிடம் நெருங்காமலும், விட்டு நீங்காமலும் குளிர் காய்கின்றவர் போல இருக்க வேண்டும்.

692- அரசன் விரும்புவதனைத் தான் விரும்பாமல் இருந்தால், அவ்வரசனால் நிலையான செல்வம் கிடைக்கும்

693- அரசரைச் சேர்ந்துள்ளவர் தம்மிடம் பிழைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஐயம் கொண்ட பின் அவரைத் தெளிவித்தல் அரிதாகும்.

694- பெரியவரிடத்தில் பேசும் ஒருவன் அவருடன் காதோடு பேசுவதையும் முகம் நோக்கிச் சிரித்துப் பேசுவதையும் விட்டுவிட வேண்டும்.

695- அரசர் மறை பொருள் பேசும் பொழுது ஒட்டுக் கேட்பதும், மற்றவர் நீங்கிய பின் கேட்பதும் கூடாது. அவரே சொல்லும் போது கேட்கலாம்.

696- அரசனிடம் பேசுபவன் அவனது மனம் அறிந்து, காலமறிந்து வெறுப்பில்லாது வேண்டுவனவற்றை விரும்பும் வகையில் சொல்ல வேண்டும்.

697- பெரும் பயன் தரும் செயலினை அரசன் கேட்காத பொழுதும் சொல்ல வேண்டும். பயனற்ற சொற்களை அவன் கேட்டாலும் சொல்லக் கூடாது.

698- அரசன் தன்னைவிட இளையவர் என்றும் தனக்கு இன்ன உறவினர் என்றும் அவமதியாமல் அவரின் நிலைக்கு ஏற்றபடி புகழுடன் நடந்துகொள்ளல் வேண்டும்.

699- நிலைபெற்ற அறிவினை உடையவர் யாம் அரசரால் விருப்பப்பட்டோம் என்று எண்ணி அவர் விரும்பாததைச் செய்ய மாட்டார்.

700- நாம் அரசரிடம் முன் பழகியவர் என்று நினைத்துத் தகுதி அல்லாதவற்றைச் செய்வது கேட்டினை உண்டாக்கும்

# குறுக்கெழுத்துப்போட்டி-199
## (வைகாசி - ஆனி 2024)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-05 இலங்கையில் இப்பதவிக்கான தேர்தல் இந்தவருடம் நடைபெறும்.
25-28 பல தரப்பட்ட மேடை நிகழ்வுகள் நடைபெறும் இடம்.
33-34 புலி பசித்தாலும் இதைத் தின்னாது எதை..
44-46 யாழ் மாவட்டத்தில் ஒரு ஊர்.
47-49 வெள்ளை நிறமுள்ள பறவை.
வ-இ
07-05 வீட்டில் ஒருவர்.
14-11 ஒருவகைத் துணியால் செய்யப்படுவது.
21-20 உழைப்போர் அரசுக்குச் செலுத்த வேண்டியது.
33-30 எப்போதும் முகத்தில் இது இருந்தால் அழகுதான்.
41-38 இனிப்பான பழங்களில் ஒன்று
கீ.மே
23-02 பரதநாட்டிய நடன வகைகளில் ஒன்று.
25-11 ஊர்வன ஒன்று.
33-05 மாதங்களில் ஒன்று.
47-33 மரங்களில் காணப்படுவதை இப்படியும் அழைப்பர்.
மே-கீ
01-22 ஆசியா கண்டத்தில் பணக்கார நாடு.
03-24 நாட்களில் ஒன்று.
28-49 இந்த மிருகத்திலிருந்துதான் மனித இனம் தோன்றியது.
29-43 இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்.
30-44 இரு பக்கத்தால் வாசித்தாலும் ஒரே சொல்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# செஞ்சிலுவை....

(ஆரம்பம் 06.05.1858)

- வே புவிராஜ்... நோர்வே -

கண்ணீருக்கும் கதறலுக்கும்
அபயக்குரல் சென்னீருக்கும்
அன்புக்கரம் நீட்டும்
சிலுவை சிவப்பு
இன மொழி மத நிற
என நாங்குவகை
வேறுபாட்டுக்கப்பால்
மனிதம் என்ற நாங்கெழுத்தை
சுமந்து நிற்கும் இரத்தபந்த
சாட்ச்சியம் செஞ்சிலுவை.....

ஈழத்தில் முள்ளிவாய்க்காலில்
இதன் நிறம் தெரியவில்லை .
காசா வெளி பாலைவனத்தில்
இதன் வண்ணம் புரியவில்லை .
ஆதிக்க வர்க்கத்தின்
அடக்கு முறைக்கு இரத்தவாடை
தாழும் பூ வாசம் .
குத்தாது குடையாது
கண்ணையும் உறுத்தாது.
அதர்மம் தலைவிரித்தாடுகையில்
சிலுவையில் இரத்தம்
வடியவில்லை .சிலுவையில்
முள் கிரீடம் பாவம்
சுமப்பவர் யாரோ...

ஓர் இனத்தின்
அடையாள விருத்தி என்பது
மொழி பண்பாடு வரலாறு
என்னும் இந்த மூன்றும்
ஓர் இனத்தின் மூலம் அதை
திட்டம் இட்டு அழித்திட
துணிவர்கள் சிதைப்பது
மொழியைத்தான் எரிப்பது
நூலைத்தான்

மொழி மறந்தவன்
இனம் மறப்பான்
இனம் மறந்தவன்
தன் அடையாளம் மறப்பான்
தன் அடையாளம் மறந்தவன்
தான் யார் என்பதை மறப்பான் .
தான் யார் என்பதை
மறந்தவனுக்கு இனம் ஏது
பண்பாடு ஏது அடையாளம் ஏது
அடிச்சுவடியே அற்றபின்
நிலம் வளம் சூனியம் .

ஏவலின் எடுபிடியாய் மாறியபின்
நீ நாய்க்கு சமாந்தரம் ஆனவன்
இன்னொரு சிலுவை
தூக்கி சுமக்காது சுதந்திரத்தை
கேட்டுப்பெறவோ போராடி
வெல்லவோ தசை நரம்பு
எலும்போடு மனிதர்கள் இல்லை .
நரை மாமிசம் தின்னும்
மனிதப்பேய்களே
அறம் ஓதும் பூதங்கள்
இதில் செஞ்சிலுவைக்கேது
நெஞ்சுளுக்கும் மனசாட்ச்சி ...

# வரிகளால் வாழ்வளிக்கலாமே!

- திரேஸ் மரியதாஸ்
லண்டன்

இன்பமாய் இன்னமு விருந்தாய்
ஈழத்துப் புலவர்கள் வரிசையில்
எட்டுத்திக்கும் பரவ எண்ணற்ற
நல்லபல கவிஞர்கள் வலம்வந்து
வல்லபல கருத்துக்களையும்
அரிய பல பாடல்களையும்
குமுகாயம் மெல்லப் பலம்பெற
நலந்தரும் மருந்தாய் வந்து
தந்துள்ளனர் நாமெல்லாம்
சிறந்த பாக்கியமே பெறவே
வரமாய் வீரமாய்

நவாலி சோமசுந்தரப்
புலவரும் எமக்குக்
கிடைத்த நெடிய தரமான
போற்றுதற்கரிய பெரும் புண்ணி
நதியாய் பல்லாயிரத்திற்கும்
மேற்பட்ட நூல்களையாத்து
மழலைக் குழந்தைகளுக்கான
மகோன்னத பாடல்களையும்
எமக்குத் தந்து எம்மை மனதார
நனைய வைத்து மனையெல்லாம்
நலம்பெற வைத்தாரே
நன்மைக் கீற்றான ஊற்றாய்

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழுங்குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம்
தோழர்களே- - -

சதாசரித்திரத்தில் சிம்மாசனமாய்
சீருஞ்சிறப்புமான சிற்பமாய்
விளங்கித் துலங்கக்
காரணம் சின்னப்பிள்ளைகளுக்கான
சீரிய பாடல்களையும்
இயற்றியதாலோ

என்னமோ இயல்பான நாமமதைத்
துறந்து தங்கத்தாத்தாவென
மங்காத பெயரைக் கொண்டு
இறக்காமலே எம்முடையே
இருக்கிறார் இன்றும் அவரது
எழுத்துகளூடே உயிர்ப்பாய்

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை
கந்தபுராணக்கதை
நல்லை முருகன் சூரியவழிபாடு
போன்ற பல பக்திப் பாடல்களை
நவரசம் ததும்பத் தந்து
எம்மையெல்ராம் இவ்வுலகிலேயே
மறுவுலகைக் காட்டி ஆன்மீகப்
பரவசத்தை மூட்டிவைத்த
பெருமை அவரையும் சாரும்
என்பதில் அளவற்ற ஆனந்தம்

ஈழத்து முத்துக்களான பலரும்
எண்ணற்கரிய பொக்கிஷங்களாய்
நம் தமிழுக்கும் தமிழருக்கும்
கிடைத்த மகத்தான சொத்துக்களே...



# ஏழைத் தாய்...

ஏழைத் தாய் தன் மடியில்
அழுத குழந்தைதனை
அன்போடு அணைத்திருந்தாள்
தனக்கென்று ஏதுமில்லை
உண்பதற்கு உணவுமில்லை
பொத்தல்ச் சேலையிலே
இதமான மெத்தையிட்டு
ஊட்டிடும் தாயவள்...

கண்ணே மணியே என்று
ஆராரோ பாடியவள்
தன் சொல்லாத சோகத்தை
தன் நெஞ்சோடு பூட்டிவைத்து
என்றேனும் ஓர் நாளில்
எமக்கும் ஒரு காலம்வரும்
கவலைகள் நீங்கிவிடும்
காலமகள் கண் திறப்பாள்
கலங்காதே மகனே என்று
தலாட்டுப் பாடிவைத்தாள்...

காலம் மெல்லக் கனிந்துவர
கனவு எல்லாம் பலித்துவர
கஷ்டம் எல்லாம் தீரும் என்று
பாத்திருந்த வேளையிலே
ஏய்த்த விதியை என்ன சொல்ல
தமிழனாய் பிறந்ததாலே
சிறையிலே மகன் வாழ்வு...

சிந்தை கலங்கினாளே தாய்
சிதைந்ததே அவள் கனவு
என்றேனும் ஒரு நாளில்
மகன் வருவான் என்றே
நம்பிக்கை தளராமல்
வழிமேல் வழிபதித்து
காத்திருந்த அன்னை பாவம்...

பார்த்தவிழி பூர்த்துப்போக
காலம் மெல்ல கடந்துபோக
மகன் வந்தான் பெட்டியிலே
ஐயகோ, கயவர் செயல்தானோ
காலச் சதிதானோ மகனே
மாண்டு நீ போனாயே என்றே
கண்ணீரில் கரைந்தாளே தாய்
இனி மீளுமா அவள் சோகம்?....

**சந்திரா....**
**டென்மார்க்....**



## இதுதான் உண்மை...-

- கவி மீனா -

சிவனும் கைலையிலே
முருகனும் பழனியிலே
புத்தனும் மலையிலே
கடவுள் எல்லாம் மலை
ஏறிவிட்டால் அவனியிலே
அவதி உறும் மனிதருக்கு
யார் துணை?
கந்தா கடம்பா கதிர்வேலே
கைலை நாதா
என்று கூப்பிட்டாலும்
யார் வருவார் பாருங்கப்பா
வந்தவர் எல்லாம்
போவதெற்கே என்று
யேசுவும் சிலுவையிலே
மரித்து விட்டார்
கடவுளைப் பற்றி
சொல்ல வந்தவர்கள்
கூட வாழவில்லை
மாயக் கண்ணனும்
மாயங்கள் செய்து
வாழ்ந்து காட்டி மாண்டு விட்டான்
இத்தனை பேரும் போன பின்னே
நமக்கு மட்டும் இங்கு
என்ன வேலை?
இருக்கும் வரை இருந்து விடு
இருப்பதை பகிர்ந்துகொடுத்து விடு
அன்பைக் கொடுத்து அன்பை
வாங்க முடிந்தால்
வாழ்க்கைஇனிக்கும்சுவைத்து விடு
எனக்கோ உனக்கோ ஏதுமில்லை
எடுத்து செல்ல யாதும் இல்லை
கொடுக்கும் வரைதான் உறவு வரும்
கொடுக்க மறந்தால் தனிமை வரும்
எதையும் தாங்கும் மனசு உண்டு
எதிர்த்து நின்று போராடு
வாழ்வே மாயம் என்ற பின்னே
வெற்றி தோல்வி நமக்கேது
இதுதான் உண்மை புரிந்து விடு...

..............................................................................

## உழைப்பு

உழைப்பென்ற மகத்துவத்தை
உயர்வாக மதித்திடுவோம்
உழவர் சேற்றில் கால் புதைத்தால்
உலக மக்கள் வயிறு நிரம்பும்
மழை வெள்ளம் போல் நின்று
மன மடிவு கொண்டோரை
மகிழ்வூட்டும் உழைப்பினிலே
உயர்த்திடுவோம்
அறமெனும் விதையெடுத்து
அன்பெனும் நீர் பாய்ச்சி
அன்றாடம் பணி செய்து
பயிர் செய்வோம்
தனிமரம் தோப்பாகா
கனி தரும் யுத்திகளை
கவனமாய் ஆராய்ந்து
காலமெலாம் உழைத்து
கண்டிடுவோம் மிகு பலனை
செகம் வாழ நமையளிக்க
சிந்திப்போம் செயல்படுவோம்!...

- ஜெயா நடேசன் -

## வேதனையின் உச்சியில்..!

- பசுவூர் கோபி - Holland

முள்ளி வாய்க்கால்..!
2009..மே 18 இது
முள்ளிவாய்க்காலில்
தமிழுக்குக் கொள்ளி
வைத்த நாள்.

சோகத்தை சொல்லியழ
வார்த்தைகளே இல்லை
இதை சொல்லாமல்
நாமிருந்தால்
தமிழர்களே இல்லை.

அன்று..
கல்லும் கூட கரைந்தது
கடலும் கூட அழுதது
முள்ளிவாய்க்கால்
எரிந்தது - உலகம்
முதலைக் கண்ணீர்
வடித்தது.

முப்பது வருடமாய் நடந்தது
முதலில் அகிம்சை
தோற்றது
இப்புவிதன்னில்
தமிழுக்கு-ஒரு
இருக்க இடம்தான் கேட்டது.

அப்பாவித் தமிழரைக்
குவித்து வைத்து
அகிலத்தில் சில நாட்டை
சேர்த்து வைத்து
ஆயுத குண்டாலே
கொட்டித் தீர்த்து
அழித்தாயே வீரனா?
நீயே சொல்லு.

பச்சிளம் பாலக
குஞ்சுகள் ஒரு பக்கம்
பருவமடைந்த
பிள்ளைகள் ஒருபக்கம்
நோயால் வருந்திய
நோயாளர் ஒருபக்கம்
நொந்து போன
ஆச்சியப்பு ஒருபக்கம்

பட்டினியோடு ஒருபக்கம்
குழந்தைகள்-தாய்
பாலின்றி தவித்தது
ஒருபக்கம்
செத்துக் கிடப்போர்
ஒருபக்கம்-மன
சிந்தை இழந்தோர்
ஒருபக்கம்

வெற்று வயிறோடு
ஒருபக்கம்-பல
வேதனையோடு
ஒருபக்கம்
கர்ப்பிணித் தாய்கள்
ஒருபக்கம்.
கதியின்றித் தவித்தோர்
ஒருபக்கம்

இரத்தத்தில் குளித்தோர்
ஒருபக்கம்
இராத்திரி பகல் தெரியா
ஒருபக்கம் ஐயோ..
குடல் அறுந்தவர்
ஒருபக்கம்
கும்பிட்டுக் கிடந்தவர்
ஒருபக்கம்

கை,கால் இழந்தவர்
ஒருபக்கம்
கண் முளி
பிதுங்கியோர்
ஒருபக்கம்.
இப்படி
எட்டுத் திசையும்
கத்திக் கத்தியே
செத்து
மடிந்தது எம்மினம்
செந்நிறமானது-எம்
நிலம்.

புத்தர் கண்ணிலும்
இரத்தம் வடிந்தது
அவர் போதனைகூட
காற்றில் பறந்தது.
வெற்றி,வெற்றியென
கோஷம் எழுப்பினாய்
இந்த
வேதனையனைத்தும்
திரும்பவும் உனக்கே...

## போர்க் கண்கள்...

போர் கண்களுக்கு
வெடி குண்டு மழையில் விருந்து
மனித உடல் சிதறுகையில்
மனித மூளை மருந்து..

தாய்மார்கள்
குழந்தைகள்
மாசற்றவர்கள் பலியாகையில்
போர் கண்களில் பரவசம்..

எல்லைகளுக்காக
கடவுளின் நாடு எங்களுக்காக
ஊனக் கொள்கையில்
சகோதர நாடுகள்
போர்க்கொடி தூக்குகையில்
போர் கண்களில் ஆவேசம்..

உயிர்களுக்கு இறப்புண்டு
துடிக்கும் போர் இதயத்திற்கு
இறப்பில்லை
போரின் கண்களில்
கடவுளுக்கும் இரக்கமில்லை
எந்நாளும் உறக்கமில்லை..

பகிர்ந்து உண்பதில்
நாட்டுத் தலைவர்களுக்குப் பஞ்சம்
உலகைப் பாயாகச் சுருட்டி
படுத்துறங்கவே
வல்லரசுகளின் கோர உடல்
மஞ்சம்..

உலகக் கண்களுக்கு
அறுசுவை விருந்து படைக்கிறது
பாலஸ்தீன்-இஸ்ராயேல் போர்!
மனிதக் கண்களில் வழியும்
குருதிக் கண்ணீரைச்
சோம பானமாகக் குடித்து
மகிழ்கிறது
போர் கண்கள்!

- சத்யா பிரான்சிஸ் -

## முள்ளி வாய்க்கால் தினம்..

வாழ்வு தந்த சொந்த மண்
உயிரோடு புதைந்து உதிரம்
சொரிந்து வலி சுமந்த மண்

கண்டவன் நின்றவன் மீது
வந்த இராணுவம் கொத்துக்
குண்டு வீசி பொத்தெனச்
சிதறிய தினம்

முள்ளிய வாய்க்காலில் நுள்ளிய
ஆக்கிரமிப்பு ,அநியாயம் ,
அக்கிரமம் இனப்படுகொலையே

அள்ளிக் கொடுத்த வல்லரசின்
ஆயுதம் துள்ளியெறிந்த உக்ரைன்
தமிழனுக்குக் கொள்ளி போட்டது

அதுவோ பள்ளிப் பாடம் இதுவோ
ரஷியாவிடம் படித்துப் பட்டம் பெற
செய்வதறியாது துடிக்குது
பல உயிரும் குடிக்குது

முள்ளி வாய்க்காலில் மாண்டவர்
புள்ளியாய் மண்ணில் புதைந்து
விடினும் விதைக்கப்பட்டவரே
விரைவில் விடிவெள்ளியாய்
எழுந்திடுவார் எழுந்திடுவாரே .

திருமதி ராணி சம்பந்தர்

# அன்னையர்தின வாழ்த்து!..

அன்பிற்கும் அறிவிற்கும் அமுதான அன்னையரே
ஆலயத்தின் தெய்வமாய் ஆனந்தமான அன்னையரே
இன்சொல்லால் இல்லத்தை இன்புறச் செய்யும் அன்னையரே
ஈரைந்து மாதம் சுமந்து ஈடிணையற்ற ஈகம்செய்த அன்னையரே
உயிரூட்டி உணவூட்டி உதிரத்தில் கலந்த அன்னையரே
ஊரோடு ஊன்றிடவே ஊறு களைந்திடும் அன்னையரே
எண்ணும் எழுத்தும் எடுத்துரைத்து எழிலாக்கிய அன்னையரே
ஏழ்மை என்னும் ஏற்றத்தில் ஏணியாய் நின்ற அன்னையரே
ஐதிகம்பேணி ஐசுவரியம் நிலையாக ஐக்கியமான அன்னையரே
ஒழுக்கமும் ஒற்றுமையும் ஒருங்கிணைய ஒளி தந்த அன்னையரே
ஓகோவென ஓங்கி வளரவே ஓயாது உழைத்த அன்னையரே
ஔவியம் பேசாது ஔதாரிய குணம் திகழ அறிவூட்டும் அன்னையரே

என்றென்றும் நலமுடன் வாழ்கவென
வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம்!...

உதிரத்தைப் பாலாக்கி உணவூட்டி
உண்மை நீதியினை உளம் சுமந்து
உலகினைப்புரிய வைத்தாள்
உன்னதமான தன்னலமற்ற அலாதியான
உறுதியானது அன்னையவளின் அன்பு
உறங்காத விழிகள் உள்ளம் வெள்ளையானவள்
உயர்த்திடுவாள் ஏணியாகி எம் புகழினை.
உரமான மனம்கொண்ட அன்னை புகழ்
உங்களைவிட உயர்ந்தவர் பாரினில் யாருமிலர்
உன் பாதம் பணிந்து வாழ்த்தி வணங்கிடுவோம்.

**இராஜேஸ்வரி சிவராசா**

..............................................................................................................

## தேர்தல் திருவிழா!..

தேர்தலும் வந்து போகும்
வேட்பாளர்கள் பிரிந்தோடி
கதிரையைப் பிடித்துவிடவே
ஏமாறும் மக்கள் கூட்டம் !..

**- சிவா -**

## அமோகம்!..

ஐஸ் போதைப் பொருட்களும்
ஆட்கடத்தல் சம்பவங்களும்
பெண் துஸ்பிரயோகங்களும்
நாட்டில் அமோகம் வரவுகள் !.

# கார்மேகங்கள்

- இரா . சம்பந்தன் -

ஆழியிலே முகந்த
அமுதத் துளிகளை
அள்ளியே வழங்குவதனால்
ஆகாய மேகங்கள்
வள்ளல்களாய் . . . .

தண்ணீர் மேகங்கள்
தரையைத் தொடாவிடில்
கண்ணீரிலே மிதக்கும்
கவின்மிகு காசினி !

சூல்கொண்ட மேகங்கள்
சிந்திடுந் துளிகளால்
சூல்கொள்ளும் பூமியும்
சுகங்காணு மன்றோ !

உப்புநீரை யுறிஞ்சி
நன்னீரை வழங்குவது
தகவுடைச் சான்றோரின்
தன்னலந் துறந்த செயலாய் .

கார்மேகமே காசினியை
ஈரமாக்கிச் செல்கின்றது
கருப்பு மனிதருளும்
கருணை வழிந்திடலாம் .

கருப்பு மேகங்களே
விருப்புடன் தருகின்றன
வெண்முத்துக் களையென்றும் !

அந்த மேகங்கள்
வாரியிலே கொள்ளையிட்டு
வாரியே வழங்குவதனால்
கொள்ளையராய்த்
தோன்றவில்லை!

மேகங்கள் போலவே
மேதினியில் உலவிடு வோரால்
தாகங்கள் தணிந்து
தலைநிமிரும் தாரணி .

மேகத் துளிகளால்
பசுந்தரைப் புற்கள்
பசுமையாய்ச் சிலிர்ப்பது
கலவியில் களித்த மங்கை
களிப்பினில் மிதப்பதுபோல் .

கார்மேகம் பொழிந்தால்
காசினி சிலிர்க்கும் !
நீர்மேகம் பொழியா
நிலமென முதிர்கன்னி !

மயிற்குலம் மகிழ்ந்தாடும்
மழைமேகங் கவிகையிலே !
மனங்களும் மகிழ்ந்தாடும்
மழைக்காலப் பொழுதுகளில் . . . .

இந்த மேகங்கள்
இடையறாது பொழிந்து
தரையின் பரப்புகளைத்
தண்ணீரில் மிதக்க விடுவதுண்டு . .
. .

நீர்மேகங் காணா
நிலப்பரப்பில் மக்கள்
தண்ணீர் தண்ணீரென்று
தவிப்பது கண்ணுற்றால்
கண்ணீர்த் துளிகள் . . . .

# காற்றின் மொழி!...

- ப.பசுபதிராசா -

பாரதத்தில் பெண்படும்பாடு பெரும்பாடு இன்று என்று
இங்கு பிறந்த பெண்கள் மட்டும் மல்ல சாமி
இந்த நாட்டுக்குள் எதேச்சையாய் வந்த பெண்கள்கூட
நொந்து நொடிந்து போன பெண்கள் என்கிறது இந்தப்பூமி!..

பெற்ற குழந்தைகள் முதல் முதிர்ந்த பெண்கள் வரை
உதிர்ந்த உரோமங்களாக விழுந்து போகும் நரை
பெண்ணாகப் பிறப்பது ஆண் சொல்லலாம் அற்புதம் என்று
பிறந்திருந்தவள் சொல்கிறாள் பேடை என்பது இழிவென்று!...

இருள் சூழ்ந்து கிடக்கிறது பெண் எனும் இன்னல் படிந்த யன்னல்
அதில் முகம் தேய்த்து கிழிந்து கிடப்பவன் அகம் ஒரு ஆழ் கடல்
பொருள் கொண்டு வந்து அருள் தரும் வழிபடும் அம்மன் அவள்
மௌனங்களுக்குள் வானளாவிய வலிச் சுமைகள் தான்!...

அடி பெண்ணே குழந்தையாகப் பிறப்பது கூடவா உனக்குக் குற்றம்
சாக்குப் போக்குச் சொல்லிக் கூட வளரமுடியாத சமூக வாதை
சாக்குப் பைகளிடம் சரணாகதி அடைகிறதே உன் மூச்சை
இன்னும் எத்தனை வேஷ்டித் துண்டுகளிடம் உன் சப்தம் நிசப்தமாகுமோ!..

பெண் என்பவள் ஆண்களின் அடிமைப் பொருள் உரிமை
உறவின் எல்லா வடிவங்களும் உபத்திரிய உருத்து உடமை
அவள் உள்ளக் கொந்தளிப்பு கசிந்து கண்ணீராகும் வழமை
போராட்டமே வாடிக்கையாகிப் போனதொரு கால நிலமை!..

சர்வ அதிகார நாடுகளில்கூடப் பெண்ணைப் பார்த்து வணக்கம் வைக்கும்
இந்தியாவில் பார்க்கும் எதற்கும் பெண்ணின் காதில் பூ சோக்காய் சொருகும்
பெண்ணைப் பாதுகாப்பே வீதியில் நிர்வாணமாகக் கூட்டிவரும்
கொடியில்காயும் பாவாடைகளும் ஆணைக்கண்டால் காற்றின்கையைத் தேடும்

## மண் இதழிலக்கம் 224 இற்கான அட்டைப்படக்கவிதை.




மண்ணை மலர்த்திடும் மாண்பினைப் பெற்றவளாய்
உண்டான சக்திதனை உண்டு- வாழ்வில்
புண்களாய் மாந்தர் பூண்டிட்ட அணிகளையெல்லாம்
பெண்ணே விழிப்பாய்ப் பேண்

அண்டங்களைக் கடந்து ஆண்டிடும் வலிமையில்
கண்வழிநீ காண்பவை யாவிலும் -புவியில்
பண்பாடும் தமிழரின் பண்பாட்டைப் பேணிடவே
எண்ணி எழுவாய் ஏண்

தண்டுக்கால் பரப்பியே தாண்டிடும் உபாயத்தால்
மண்டலமே தகர்த்து மண்டும்- சிதைந்து
துண்டாடிய வாழ்வினைத் தூண்டாமணி விளக்காய்
நண்ணுதலே அறிவின் நாண்

துண்டான ஒற்றுமைதனைத் தூண்டியே உரத்தொடு
தொண்டெத் தூர்ந்ததைத் தோண்டி - நாளும்
திண்டாடும் மக்களின் தீண்டாமையைச் சிதைதைத்து
கொண்டாடு வெற்றி கொண்டு

அண்டியிருந்த அழகிய ஆண்டினையே நசுக்கிடும்
விண்வெளி நிரம்பிய வீண்புகையாக- நம்மை
குண்டுகளால் நெய்திட்ட கூண்டுகளை எரித்திடவே
கண்களை தீயாய் காண்

சண்டாளர் கொடுமையில் சாண்ஏறச் சறுக்குகின்ற
தண்டனையை உறுதியொடு தாண்டு- மண்ணில்
மண்டிய விடுதலைக்காய் மாண்டவர் கனவுகளின்
உண்மையே உனது ஊண்

**- அம்பலவன்புவனேந்திரன் -**



# தங்கத் தாத்தா...

## சோமசுந்தரப்புலவர்

(1876.06.28 - 1953.07.10)

வங்கமே தாலாட்டிடுமெம் ஈழுமணித் திருநாடும்
வடபுலத்து நவாலியூரை வாஞ்சையிலே தேடும்
செங்கதிராய் எழுந்திருந்த சோமசுந்தரரைப் பாடி
செந்தமிழும் பாரெங்கும் பெருமையினைச் சூடும்
தங்கிநின்ற பண்பாட்டுத் தனித்துவத்தை வியந்து
தாடியறுந்த வேடன் கதையை தரணியுமே பாடும்
தங்கத்தாத்தா என்றழைத்த தனிப்பெரும் புகழால்
தமிழுலகில் நூறாண்டாய் தனித்தேபோற்றும் ஏடும்

திங்களதன் குளிர்ச்சியில் தேங்கும்சிறுவ ரிலக்கியம்
தீர்ந்திடாத நூற்பாவாய்த் தேன்தமிழுமே போற்றும்
மங்கா புகழோடுடென்றும் மண்ணிலே வாழுகின்ற
மணக்கும் கத்தரி வெருளியின் மாறிடாத தோற்றம்
எங்கினும் ஆடிப்பிறப்புக்கீதம் இதயத்துள் நிறையும்
எழுந்திடும் மகிழ்ச்சியோடு இனிமையினை ஏற்றும்
பொங்கிடும் கவிப்பெருக்கு பொலிவோடு நிரம்பியே
பொதிந்திடும் சமூகநலத்துக்காய் புரட்டியே மாற்றும்

சங்கத்தமிழில் சமைத்திட்ட பதினைந்தாயிரம் பாவும்
சமையத்தோடு சங்கமித்தே சரித்திரமென மிளிரும்
சிங்கமெனப் பார்வையிலே தேசப்பற்றும் மின்னும்
திறமையுறு தகைமைகளால் தென்றலாய் குளிரும்
பங்களிப்பாய் பதிகள்தோறும் பதிகங்களைப் படைத்து
பலகோடி தமிழர்நாவும் பண்ணிசையைப் பொழியும்
மங்கலமாய் நிறைந்திட்ட மா மகுடமென நிமிர்ந்தே
மண்ணுக்கு வரமாய்வந்த மாணிக்கமாய் ஒளிரும்

- அம்பலவன்புவனேந்திரன் -

# இரட்டை சொற்களுக்கான விளக்கம்..

**குண்டக்க மண்டக்க :**
- குண்டக்க : இடுப்புப்பகுதி,
- மண்டக்க: தலைப் பகுதி,

சிறுவர்கள் கால் பக்கம், தலைப்பக்கம் எது என தெரியாமல் தூக்குவது, வீட்டில் எந்த எந்தப் பொருள் எங்கே எங்கே இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் இருப்பது தான்...

**அந்தி, சந்தி:**
- அந்தி : .மாலை நேரத்திற்கும் , இரவுக்கும் இடையில் உள்ள பொழுது..
- சந்தி: .இரவு நேரத்திற்கும் , காலை நேரத்திற்கும் இடையில் உள்ள விடியல் பொழுது..

**அக்குவேர்,ஆணிவேர்:**
- அக்குவேர் : செடியின் கீழ் உள்ள மெல்லிய வேர்..
- ஆணி வேர்: செடியின் கீழ் ஆழமாகச் செல்லும் வேர்...

**அரை குறை:**
- அரை : ஒரு பொருளின் சரி பாதி அளவில் உள்ளது..
- குறை : அந்த சரிபாதி அளவில் குறைவாக உள்ளது...

**அக்கம், பக்கம்:**
- அக்கம்: தன் வீடும், தான் இருக்கும் இடமும்...
- பக்கம்: பக்தத்தில் உள்ள வீடும், பக்கத்தில் உள்ள இடமும்...

**கார சாரம்:**
- காரம் : உறைப்பு சுவையுள்ளது...
- சாரம்: காரம் சார்ந்த சுவையுள்ளது...

**இசகு பிசகு:**
- இசகு: தம் இயல்பு தெரிந்து ஏமாற்றறுபவர்களிடம் ஏமாறுதல்...
- பிசகு: தம்முடைய அறியாமையால் ஏமாறுதல்...

**இடக்கு முடக்கு:**
- இடக்கு : கேலியாக நகைத்து, இகழ்ந்து பேசுதல்...
- முடக்கு : கடுமையாக எதிர்த்து தடுத்துப் பேசுதல்...

**ஆட்டம் பாட்டம்:**
- ஆட்டம் : தாளத்திற்கு தகுந்தவாறு ஆடுவது...

**அலுப்பு சலிப்பு:**
- அலுப்பு: உடலில் உண்டாகும் வலி...
- சலிப்பு: உள்ளத்தில் ஏற்படும் வெறுப்பும், சோர்வும்,..

**தோட்டம் துரவு: (தோப்பு துரவு)**
- தோட்டம் : செடி, கொடி கீரை பயிரிடப்படும் இடம்...
- தோப்பு : கூட்டமாக இருக்கும் மரங்கள்...
- துரவு: கிணறு...

**காடு கரை:**
- காடு : மேட்டு நிலம் ((முல்லை)...
- கரை : வயல் நிலம் .( மருதம், நன் செய் , புன்செய்)...

**காவும் கழனியும்:**
- கா : சோலை...
- கழனி: வயல்.. (மருதம் )...

**நத்தம் புறம்போக்கு:**
- நத்தம் : ஊருக்குப் பொதுவான மந்தை...
- புறம்போக்கு : ஆடு, மாடு மேய்வதற்கு அரசு ஒதுக்கிய நிலம்...

**பழக்கம் வழக்கம்:**
- பழக்கம் : ஒருவர் ஒரே செயலை பல காலமாக செய்வது...
- வழக்கம் : பலர் ஒரு செயலைப் பலகாலம் (மரபுவழியாக ) கடைப்பிடித்தது செய்வது..

**சத்திரம் சாவடி:**
- சத்திரம் : இலவசமாக சோறு போடும் இடம் ( விடுதி )...
- சாவடி: இலவசமாக தங்கும் இடம்..

**பற்று பாசம்:**
- பற்று :நெருக்கமாக உறவு கொண்டுள்ளவர்கள்...
- பாசம் : பிரிவில்லாமல் மரணம் வரை சேர்ந்து இருப்பது.

**ஏட்டிக்குப் போட்டி:**
- ஏட்டி: விரும்பும் பொருள் அல்லது செய்வது... ( ஏடம் : விருப்பம்)
- போட்டி : விரும்பும் பொருள். செயலுக்கு எதிராக வருவது தான்...

**கிண்டலும் கேலியும்:**
- கிண்டல் : ஒருவன் மறைத்த செய்தியை அவன் வாயில் இருந்து வாங்குவது....
- கேலி : எள்ளி நகைப்பது,..

**அடுத்த இதழில் தொடரும்...**

# தனிக்குணம்.....

தமிழனுக்கு என்று ஒரு தனிக்குணம் நக்கலும் நையாண்டியும்தானே தமிழனுக்கு தெரிந்தது பணத்தையும் அந்தஸ்தையும் கண்டால் வால் பிடிப்பான் அலுவல்கள் முடிய தூற்றிக்கொண்டே போகிறான் படைத்தவனிடம் முறையிடுவதா? யாரிடம்தான் இதைப் போய் சொல்வது? மனிதனை மட்டும்தான் கடவுள் பேசக் கூடியதாகவும் சிரிக்கக் கூடியதாகவும் படைத்தார்,

ஆனால் மனிதன் அடுத்தவனை நக்கல் பண்ணி சிரிக்கவும், அடுத்தவரை மனம் நோக வைக்க நையாண்டி பேசவும், கடும் சொல் பேசவும், பொய் பேசவும்தானே அதிகம் செய்கிறான், சில சமயம் அன்பாக பேசுகிறான் என்றால் அது யாரையாச்சும் ஏமாற்றப் பிளான் பண்ணுறான் என்றுதான் அர்த்தம்.

ஒரு பெண்ணை ஏமாற்ற ஒரு ஆண் காதல் மொழிகளை அள்ளிக் கொட்டுகிறான் காரணம் அவன் உடலுக்குத் தேவையான சுகத்தை அடையத்தான், காலப்போக்கில் அந்த ஆசை தாவிப் போகிறது, நண்பனை ஏமாற்ற ஒரு நண்பன் துரோகியாக மாறுகிறான். கூட இருக்கும் வரை பாசமாகப் பேசிப் பழகிக் கூட இருந்தே குழி பறிக்கிறான்

இந்தக் குணம் மனிதனை விட்டால் வேறு யாருக்கு வரும்? அதிலும் இது தமிழனுக்குள்ள விசேட குணமாச்சே! பறவைகள் கூட்டமாய்ப் பறக்கின்றன கூட்டமாக இருந்தாலும் தனக்கென்று ஒரு ஜோடி யோடுதான் வாழ்கின்றனவாம், மிருகங்களும் சேர்ந்தே வாழுகின்றன. யானைகள் கூட்டமாய் போவதுடன் பெரிய யானை சொல்வதை கேட்டுதான் மற்ற யானைகள் நடக்கின்றதாம், இங்கு மனிதன் மட்டும் தலைவன் என்று ஒருவன் இந்தால் கூட அவனுக்கு எப்படிக் குழி தோண்டலாம் என்றுதான் சிந்திக்கின்றான் சுயநலமும், பொறாமையும்,பொய்யும் புரட்டும் நிறைந்த மனிதர்கள்தான் அதிகமாகப் பூமியிலே உலாவுறாங்கள்.

ஒரு சிலர் இதற்கு விதி விலக்கு அவர்கள்தான் இதைக் கண்டு மனம் நொந்து சாகிறார்கள் இனம் இனத்தை நாடும் என்று கெட்டவனும் கெட்டவனும் சேர்ந்திடுவான் தனித்து விடப்படுவதும், கொடுமைகளைக் கண்டு துன்பப் படுவதும் மிகுதியாக உள்ள ஒரு சிலரே!ஆண்டவன் படைப்பிலே ஆறு அறிவு படைத்த மனிதனால்தான் உலகமெங்கும் துயரம், எனது நாடு, எனது மொழி, எனது மதம், எனது பணம் என்று அடிதடி மல்லுக்கட்டு குண்டு வெடிப்பு கொலை கொள்ளை இவையாவும் நடப்பது யாராலே?

வீடுகளில் துன்பம் யாராலே ? நாடுகளில் யுத்தம் யாராலே?
சிந்தித்து பார் மனிதா? சிந்தித்து பார் மனிதா?

**- கவி மீனா -**

# தொழிலாளர் தினம் - மே மாதம்-1






மே மாதம் தொழிலாளர் தினமும் வந்து போகும் மனிதனுடைய கீழ்ப்படியாமை சோம்பேறித்தனம் என்பற்றால்தான் மனிதன் உழைத்து உண்ணவேண்டும் என்ற நியதியை கடவுள் ஏற்படுத்தினார் போலும் அத்துடன் மணிக்கணக்காய் வேலை செய்து அவர்களுடைய கூலி கிடைக்காமையால் உலமகமெங்கும் பிரச்சினை ஏற்பட்டது படைப்பின் தொடக்கத்திலேயே ஆறு நாட்கள் உழைத்து ஏழாம் நாள் ஓய்ந்து இருங்கள் என்று கட்டளையும் இருந்தது.

உழைக்காதவன் உண்ணலாகாது என்ற அறிவுரைக் கூற்று. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்கிறார் பாரதியார் உழைக்கும் மனிதன் கடவுளை அடைய படைக்கும் தொழில் பங்காளியாகிறான் இன்று மே தினத்தின் இலட்சியம் நோக்கம் என்பன சிதைவுற்று மே தினத்தின் புனிதத் தன்மையும் அர்த்தமும் மறுக்கப்பட்டு வெறும் கொண்டாட்டங்களாகவே மே தினம் மாறி விட்டது.

இன்று மே தினத்தின் வரலாறும் நோக்கமும் அர்த்தமும் பற்றி பேசப் படுவதில்லை மாறாக அரசியல் கட்சிகளின் பிரசாரமும் தொழிற் சங்கங்களின் பிரசாரமுமே மே தினத்தில் இடம் பெறுகின்றன தொழிலாளர் தினமான மே தினத்தில் தொழிலாளர் நலன் தொழிலின் மகத்துவம் முன்னிறுத்தப்பட வேண்டும் முக்கியமாக உலக மக்களின் வயிற்றுப் பசியை தீர்க்கும் விவசாயிகள் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் அரசியல் தலைவர்கள் அக்கறையுடன் செயல்பட்டால் நாடும் நலன் பெறும் மே தினத்தை மகிமை சிறப்பு பெற வேண்டும் இன்று தொழிலாளர் தினத்தந்தையாக இயேசுவின் தந்தையார் புனித சூசையப்பர் தினமும் கொண்டாடுகிறார் என்பதையும் அறிந்துகொள்வோம்..

**- ஜெயா நடேசன் -**

# ஜேர்மனிய சுகாதாரச் செய்திகள்...






01- யேர்மனியில 16 மில்லியன் மக்கள் காது கேளாமையால் (Hörverlust) (ஆங்கிலத்தில்- Hearing) பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் அரைவாசிப்பேர் வேலை செய்யும் வயதில் உள்ளனர். இந்த நாட்டில் வாழ்வோரில் 1.40.000 பேர் காது கேளாதவர்களாக உள்ளனர். ( மக்கள் தொகை 82 மில்லியன் )

02- செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் குறைவடையும் போது முதுமை மறதி நோய் ( Alzheiker ) (ஆங்கிலத்தில்-Alzheimers) வருவதற்கான ஆபத்து 267 வீதம் அதிகரிக்கிறது.

03- யேர்மனியில் வாழ்பவர்களில் 1.8 மில்லியன் வயதானோர் வாத அழர்ச்சி நோயாளிகளாகக் காணப்படுகிறார்கள்.

04- 2023ம் ஆண்டில் 1.42.924 பெண்களுக்கும் 90.613 ஆண்களுக்கும் செயற்கை இடுப்பு பொருத்தப்பட்டுள்ளது. இதே ஆண்டில் 1.02.938 பெண்களுக்கும் 69.073 ஆண்களுக்கும் செயற்கை முழங்கால் மூட்டு பொருத்தப்பட்டது.

05- 2023 சுகாதார அறிக்கையின்படி 2023ம் ஆண்டு யேர்மனியில் 25 வீத மக்கள் மருத்துவரால் வழங்கப்படும் முன் பரிசோதனைகள் எதையும் செய்யவில்லை. 60 வீத மக்கள் பரிசீலனை செய்துள்ளனர். 15 வீத மக்கள் அனைத்து முன் பரிசோதனைகளையும் தவறாமல் மேற்கொண்டனர்.

06- 73 வீதமான யேர்மன் மக்கள் தங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். இவர்கள் ஆரோக்கியமான உணவு மற்றும் ஊட்டச் சத்துகள் அடிக்கடி எடுத்துக் கொள்கிறார்கள்.

07- 72 வீதமான யேர்மனிய மக்கள் தங்கள் நாட்டின் சுகாதார நடைமுறைகளை நினைத்து திருப்தி அடைத்துள்ளனர்.

08- 70 கிலோ எடையள்ள ஒரு ஆணின் உடலில் 36 பில்லியன் செல்களும் 60 கிலோ எடையுள்ள ஒரு பெண்ணின் உடலில் சுமார் 28 பில்லியன் செல்களும் உள்ளன. (1 பில்லியன் = 1 000 000 000 000 )

09- ஒரு சாதாரண மனிதனின் மூளை சராசரியாக 1.3 கிலோ எடை கொண்டது.

10- கர்ப்பகால நீரழிவு நோயால் பாதிக்கப்பட்ட 60 வீதமான பெண்கள் பின் கவனிப்புகளில் அக்கறை காட்டாமையால் பின்நாளில் பல நோய்களுக்கு ஆளாகின்றார்கள்.


11- புரோஸ்டேட் (முன்னிற்குஞ்சுரப்பி) புற்றுநோயால் (Prostata krebs) (ஆங்கிலத்தில் - Prostate Cancer) பாதிக்கப்பட்ட ஆண்கள் 10 வருடங்கள் அல்லது அதற்கும் மேலும் வாழ்கிறார்கள் என சுகாதார அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
12- யேர்மனிய மக்கள் சராசரியாக ஒரு நாளைக்கு 9.2 மணித்தியாலங்கள் அமர்ந்திருக்கிறார்கள். 18 - 29 வயதினர் 10 மணித்தியாலங்களுக்கு மேல் உட்காந்திருந்து கணனி, மற்றும் வேலைகளில் பொழுதைக் கழிப்பார்கள். இதனால் சில வியாதிகள் ஏற்படுகின்றன.
13- ஒவ்வொரு ஆண்டும் யேர்மனியில் 61.400 பேர் பெருங்குடல் புற்று நோயால்(Darmkrebs) (ஆங்கிலத்தில்-intestinal Cancer) - பாதிக்கப் படுகிறார்கள். இந்நோயால் வருடாவருடம் சுமார் 23.500 மக்கள் இறக்கிறார்கள்.
14- மருத்துவர்களால் வழங்கப்படும் நோய்த்தடுப்புப் பரிசோதனைகளை ஒழுங்காகச் செய்திருந்தால் 70 - 80 வீத பெருங்குடல் புற்றுநோயாளிகளை நோயிலிருந்து காப்பாற்றலாம் என மருத்துவப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
15- யேர்மனியில் வாழும் மக்களில் வருடாவருடம் 7 மில்லியன் மக்கள் ஒளிக்குவியச்சிதைவு ( abtersdingtc Makubadegeneration ) (ஆங்கிலத்தில் - Age-relatedmacularde generation) என்னும் கண் நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.
16- யேர்மனியல் வாழும் சுமார் 12.000 பருமனான (நிறைகூடிய) குழந்தைகளுக்கு நீரழிவு நோய் - 2 வகை காணப்படுவதாக மருத்துவ அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
17- கோரோனா தொற்று நோய்க்கு முன்பே 03 - 17 வயதுப் பிள்ளைகளில் 15.4 வீதமானவர்கள் அதிக எடை கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள் என்றும் இதனால் அரசுக்கு மேலகிகச் செலவுகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது
18- நம் கண்கள் மூலம் 70 - 80 வீத தகவல்களை சுற்றுச்சூல்களிலிருந்து உணர்கின்றோம். ஆகவே எமது கண் ஒரு மிக முக்கியமான உணரும் உறுப்பாக விளங்குகின்றது.
19- சுவாசத்தை இடைநிறுத்தாமல் ( Atemaussetzer )(ஆங்கிலத்தில் - Breathing interruptions) தினமும் ஏழு முதல் எட்டு மணித்தியாலங்கள் நன்றாகத் தூங்கினால் இதயச் செயலிழப்பு அபாயம் 42 வீதம் குறையும்.
20- பல ஆண்டுகள் தூக்கப் (நித்திரை) பிரச்சனைகள் இருந்தால் 27 வீதமான மக்களுக்கு அதிகமாக மாரடைப்பு ( Herzinfarkt ) (ஆங்கிலத்தில் - heart attack) அல்லது பக்கவாதம் ( Schlagaunhall )(ஆங்கிலத்தில்- Stroke) ஏற்பட வாய்ப்பு உண்டு.

குறிப்பு:-
இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் அனைத்தும் யேர்மனிய மருத்துவ சஞ்சிகைகளில் வெளிவந்த குறிப்புக்களாகும்.

**டொச் மொழி மாற்றத்திற்கு உதவியவர் :- செல்வி சாமினா சிவதாசன் - (எசன்.) இவருக்கு எமது நன்றிகள்!..**

- ஆசிரியர் -

## 16ம் பக்க கணக்குப்புதிர் விடை...




## தவிடுபொடியாய் தகர்ந்த பொழுது---

முள்ளிவாய்க்கால் முற்றாகத்
தகர்ந்தது அழிவில் எம்மினம்
ஆறாத்துயரில் வீழ்ந்து துடித்தது
வெட்டிப் புதைத்தது
எண்ணிடும் வேளை
இதயமே கனமாய்
ஓலக்குரல்கள் ஓயாத ரணமாய்
ஆண்டுகள் பதினைந்து
அவலமாய் புகையுது
அன்றைய வதையே
கொடூரமாய் எரியுது
அடைக்கல வாழ்வையே
அழித்துப் புதைத்தனர்
கந்தகப் புகையால் காவு கொண்டனர்
கதறல் ஓலமே காதில் ஒலிக்குது
வாழ்வின் சுவடு வரட்சியாகுது
வதைபட்ட உயிர்கள்
வாழ்வில் துடிக்குது
கோர நினைவை கொல்லும் வதையை
விலத்திட முடியா விரக்தியில் வாழ்வு
பாறையாய் கனக்குது பாரத்தில்
வெடிக்குது உருக்குலைக்குது
வாழ்வா சாவா வரமாய் பெற்றோம்
உறவுகள் இழந்துவாழ்வது கொடுமை
உயிரே உனக்கேன் இன்னமும்
பிடிப்பு ஒன்றாய்
அழிந்தால் இல்லையே தவிப்பு
நாட்டிய விருட்சம் நலிந்து போக
வீரர்கள் கனவு விதையிட்ட ஈழம்
தேய்பிறையாகி தேசம் குமுற
சிங்களஅரசின் சித்திரவதையில்
சின்னா பின்னமாய்
சிதைந்த இனமாய் எத்தனை
காலம் எரிமலைக் குமுறல்
எண்ணற்ற உயிர்களின்
தியாகத்தின் தீபம்
தவிடுபொடியாய் தகர்ந்த பொழுது
தாங்கொணத் துயரில்
தவிக்குது உயிரு
ஆண்டிட்ட இனம் நாம்
அழிவில் துடிப்பதா
மீளவும் எழுந்திட வழிகள் சமைப்பதா
முள்ளிவாய்க்கால் முற்றுப்புள்ளியா
வெற்றித் தமிழா வீரர்கள் தோழா
சங்கே முழங்கி சரித்திரம் படைக்க
எழுவோம் ஒன்றாய் அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்கு!

- வசந்தா ஜெகதீசன் -

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| க | ம் | ப | ர் |
| ல் | ல் | ரு | கு |
| வி | பா | ப் | அ |
| க | ல் | பு | ல் |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | னா | தி | ப | தி | த் | சி |
| ப் | லா | ங் | டை | டா | ட் | ப |
| பா | ல் | க | ட் | ட் | ரி | வ |
| ன் | தி | ள் | அ | ர | ங் | கு |
| தே | கை | ன | ன் | பு | ல் | ர |
| யி | ரே | சி | பா | ப் | ப | ங் |
| லை | கை | த | டி | கொ | க் | கு |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்கிறன்..கோதாரிப்போன கொரோனா ஒழிந்து விட்டது என்று நம்பப்பட்டாலும் ஆங்காங்கே சில நாடுகளில் கோரோனாவைப் போல வேறு..வேறு வருத்தங்கள் வந்துகொண்டுதான் இருக்கிறது. அப்ப நீங்களும் கொஞ்சம் அவதானமாக இருங்கோ..இல்லை என்றால் மண்டையைப் போட வேண்டியது தான்.

நம்மட நாட்டில பொருளாதாரப் பிரச்சனையால் பெரும் நெருக்கடி. இதனால் நாட்டைவிட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு எப்ப ஓடலாம் என்று பல்லாயிரக் கணக்கானோர் படாத பாடுபடுகுதுகள் பாருங்கோ.. அது அப்படி இருக்கையில் தேர்தல் சூடுபிடித்து அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சி மன்றக் கதிரை களையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர்கண்டியளோ அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளா தாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இது கிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைக் கிழப்பி அரசைக் கலைக்கலாம் என கங்கணம் கட்டினாலும் ஒன்றுமே முடியாது தாம் நினைத்தபடிதான் நடக்கும் என அரசதரப்பு தெரிவித்த வண்ணமே உள்ளது. இப்படியாக ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் அழகான நாட்டில் இனவாதம், மதவாதம் தலைதூக்கி ஆடும்வரை ஒருவரும் ஒன்றுமே செய்யமுடியாது. புத்தர் உயிருடன் மீண்டு வந்தாலும் அதே கதிதான் பாருங்கோ..

சரி..சரி..அது அப்படிப் போக நம்மட பிரச்சனைகளும் கொரோனாவைப்போல பல..பல வடிவங்களில் இந்த மயிலனின் காதில் விழுந்தவண்ணமே உள்ளன பாருங்கோ. இந்த மயிலனின் மூளையில் நீண்ட நாட்களாகக் குடைந்துகொண்ட விடையம்தான் இந்தமுறை..

அதாவது வெளிநாட்டில் வாழும் அண்ணனுக்கும் ஊரில்வாழும் தம்பிக்குமிடையே நடந்த அக்கப்போர் பற்றி உங்களோடு கொஞ்சம் அலசுவம் எண்டு வந்திருக்கிறன். நடிகர் வடிவேலு ஒரு சினிமாப் படத்தில கூறியது பலருக்கு ஞாபகம் இருக்கலாம்.. மீண்டும் அதை உங்களுக்கு ஞாபகமூட்டலாம் என்று இந்த மயிலன் யோசிக்கிறான். பலருக்கு இது படிப்பனையாகவும் இருக்கும் பாருங்கோ...

அதாவது கிணறு காணாமல் போன விடையத்தை எங்காவது கண்டிருக்கிறீர்களா?.. இங்கே கிணறு மட்டுமல்ல.. வீடும் காணாமல் போயிருப்பதுடன் காணியும் அப்பு ஆச்சி நட்டு வைத்த பனை, தென்னை பலா, வாழை, தோடை பழமரங்களும் அழகான மருத்துவ செடிகொடிகளும் காணாமல் போன விடையத்தைத்தான் இந்த முறை உங்களோடு பகிரப்போறன். அளவுள்ளவர்கள் தொப்பியைப் போடுங்கோ?...

அண்ணன் - தம்பி பாசம் நேசம், ஒற்றுமை எல்லாத்துக்கும் ஊரில் பேர் போனவர்கள் மட்டுமல்ல உதாரண புருசர்கள் என எல்லோரும் கதைத்தனர். அப்படி வாழ்கையில் நாட்டுப் பிரச்சனை அதிகரிக்க கடன்பட்டு மனைவியின் தாலிக்கொடியை விற்று மனைவியுடன் வெளிநாடு வந்தவன்தான் அண்ணன்.

வெளிநாட்டு வாழ்கை ஆண்டுகள் பல ஓடின. இரு பிள்ளைகளுக்குத் தந்தை. சில ஆண்டுகளின் பின் ஊரிலுள்ள சகோரனுக்குத் தன் செலவில் திருமணம் செய்து வைத்தான் இந்த அண்ணன். அண்ணன் வெளிநாட்டில் ஓடி..ஓடி உழைப்பு. குளிர், பனி எனப்பாராமல் இரண்டு மூன்று வேலைகள். பணத்தைச் சேர்த்து ஊரில் வீடு ஒன்று கட்ட விரும்பினான். எல்லாவற்றிற்கும் பாசத் தம்பி இருக்கிறான்தானே ஏன் யோசிப்பான் என அடிக்கடி பெருந்தொகைப் பணத்தை அனுப்பிக் கொண்டே இருந்தான்.

தம்பிக்கு மித மிஞ்சிய பணம் வீடு கட்டுற வேலையைப் பார்த்து வந்ததுடன் நண்பர்களுடன் வெளிநாட்டுக் குடிவகைகளோடு வாழ்வு நகர்ந்தது. குடிகார நண்பர்களின் ஆலோசனைப்படி ஆடம்பரமாகப் புதிய வீடுகட்டப்பட்டது. அதற்காக அந்தக் காணியில் கிடந்த கிணற்றை மூடி வேறு ஒரு இடத்தில் குளாய்க்கிணறு தோண்டப்பட்டது. அப்பு - ஆச்சி கட்டிய பழைய வீடும் அழிக்கப்பட்டது. காணியில் இருந்த பயன்தரும், பழம்தரும் மரங்களும் மூலிகைச் செடிகொடிகள் அனைத்துமே இருந்த இடம் காணாமல் போயின. வளவு முழுவதும் சீமெந்து முற்றம் மணலே காணாமல் போனது. வெயில் காலத்தில் முற்றத்தில் கால் வைக்கமுடியுமா?.. மாலை நேரங்களில் முற்றத்தில் குந்தியிருந்து உறவுகளோடு கதைத்து மகிழ முடியுமா? அந்தளவுக்கு ஆடம்பர மோகம்...

சில ஆண்டுகளின் பின் அண்ணனும் மனைவி பிள்ளைகளும் தாம் ஆசையோடு செலவழித்துக் கட்டிய வீடு குடிபுகிர்தலுக்கு ஊருக்கு ஓடோடிச் சென்றனர். எவ்வளவு மகிழ்வு. தமது அழகான வீட்டைப் பார்த்து மகிழலாம். ஊராரோடும் உறவுகளோடும் உண்டு குடித்து மகிழலாம், தனது கடின உழைப்புக்குக் கிடைத்த பரிசு என்று எல்லாம் எண்ணிக்கொண்டு போன அண்ணன் குடும்பத்துக்கு அங்கே பேரிடியே காத்திருந்தது.

சிறுவயது தொடக்கம் தண்ணீர் அள்ளிக் குடித்து, குளித்து வளர்ந்த கிணற்றைக் காணவில்லை. இருந்த இடம் தெரியாமல் போனது. தாய், தந்தை, அப்பு, ஆச்சி, சகோதரங்களோடு ஒற்றுமையாக வாழ்ந்த அந்த பழையவீடும் இல்லை. எல்லாம்

வெறிச்சோடி அழகாகக் கட்டப்பட்ட வீடுதான் காணப்பட்டது. செடி கொடி, பூ மரங்கள் ஒன்றுமே இல்லை. அவை மட்டுமல்ல சமையலும் இல்லை எல்லாம் கடையில் வேண்டி உண்பதே வழக்கமாகிப் போய்விட்டது. ஊர் அரிசியில் தயாரிக்கப்பட்ட தோசை, இடியப்பம் , அப்பம், பிட்டு, பலகாரம் உண்ணலாம் என்று ஆவலாகப் போனவர்களுக்கு எல்லாம் பூச்சியமாகவே இருந்தன. எல்லாம் கடைச் சாப்பாடாய் போனது. பக்கரும் பேக்கரும், பக்கற்று உணவுகளும் ரின்களும் போத்தல்களும் குடிபானங்களாகின. அப்படி ஊரின் வாழ்க்கை முறை மாறியதற்கு வெளிநாட்டுக் காசு செய்யும் வேலை என்பதை அப்போதுதான் அண்ணன் உணர்ந்து கொண்டான்...

சில நாட்களின் பின் சரி..தம்பி காணிப் பத்திரத்தையும் வீடு கட்டிய செலவுக் கணக்கையும் கொண்டுவா என்றான் அண்ணன். ஒன்றுமில்லை என்றான் அன்புத் தம்பி.. என்னடா ஒன்றுமில்லை என்கிறாய்? என்று கோபப்பட்டான் பாச அண்ணன். இல்லை என்றால் இல்லைதான்.. காணியும் உன் பெயரில் இல்லை?.. வீடும் உனக்குச் சொந்தமில்லை?.. கணக்கும் காட்டமுடியாது?.. எல்லாம் எனக்கே சொந்தம் என்று குண்டைத் தூக்கிப் போட்டான். இதைக்கேட்ட அண்ணன் மயங்கி விழுந்தான். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று இரு நாட்களால் வீட்டுக்கு வந்தான்...

வந்தவனுக்கு கையும் ஓடவில்லை..காலும் ஓடவில்லை. பாசத் தம்பி, அன்புத் தம்பியின் இந்தச் செயலை யாருக்குச் சொல்லி அள..யாருக்கு முறையிடுவது.?.. அண்ணனிடம் ஏமாற்றி வெற்றுப் பேப்பரில் கையொப்பம் வேண்டி எல்லாச் சொத்துக்களையும் தன் பெருக்கு மாற்றி இப்ப ஐந்து வருடங்கள் ஆகிய விடையம் இப்போதான் வெளிவந்தது.

இந்த வீட்டில இருந்தால் மேடர் கேசிலும் வந்துவிடும் என்று எண்ணி தனியார் ஹொட்டல் ஒன்றில் குடும்பமாகச் சென்று தங்கி விட்டு வெறுங்கையோடு, எல்லாவற்றையும் இழந்த ஆண்டியாய் மீண்டும் வெளிநாடு வந்து சேர்ந்தான் ஏமார்ந்த சோணகிரி அண்ணன்.

பணம், சொத்து ஆசைக்கு முன் அண்ணன் என்னடா?..தம்பி என்னடா?..இவ்வளவு காலமும் சொந்த சுகங்களை இழந்து, மனைவி பிள்ளைகளைக் கவனிக்காமல் ஓடி..ஓடி உழைத்து என்னத்தைக் கண்டது. காசு..பணம்..என அலைந்து, உடலையும் வருத்தி உழைத்து எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிப் போனதே என இறுதியில் எல்லாரும் போவது போல கடவுளிடம் பழியைப் போடவேண்டியதாய் போய்விட்டதே...

இதனால் குடும்பத்திலும் சச்சரவு. மனைவி, பிள்ளைகளும் அவனை விட்டுப் பிரிந்தார்கள். அவன் குடிக்கு அடிமையாகி இப்போ கடும் நோயுடன் ஆஸ்பத்திரியில் பாருங்கோ. எல்லாம் வெளி நாட்டுப் பணம் செய்த வேலைதான்.. ஏமாளிகள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் இருந்துகொண்டுதான் இருப்பார்கள். அப்ப நீங்களும் ஏமாற்றுப்படாதீர்கள். ஆற்றில போட்டாலும் அளந்து போடுங்கோ. எல்லாரையும் நம்பாமல் உங்களை நீங்கள் நம்புங்கோ!...

# நட்பு !....

**(சிறுகதை)** **(கெங்கா ஸ்ரான்லி)**

அது ஒரு சிறிய கிராமம், என்றாலும் ஜனங்கள் குடிமனை கடைத்தெரு என்று எல்லாமே அங்கு இருக்கின்றது. ஆனால் பாடசாலை ஆரம்பப் பாடசாலை மட்டும் தான். உயர் கல்வி பயில பட்டினம் தான் போக வேண்டும். கிராம சேவகர் தபால் நிலையம் எல்லாம் இருக்கிறது. அந்த தபால் நிலையத்தில் கடிதம் கொடுக்கும்பியோன் ஆக வேலை செய்பவர் தான் சங்கர். அதனால் சங்கரைத் தெரியாதவர் அந்தக் கிராமத்தில இல்லை. சங்கருடைய மனைவி மதி

இவரகள் மகன் கண்ணன். மூவரும் தான் அந்தவீட்டில் வாழ்ந்து கொண்டு வந்தனர். கண்ணன் அக்கிராமத்து பள்ளியில் கல்வி கற்று வந்தான். சிறிய குடும்பம் என்றாலும் வாழ்க்கைமகிழ்ச்சியுடன் நகர்ந்தது.இவரகள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரு குடும்பம் புதிதாக குடியேறினர். அவர்களும் மூவர் தான் சிறிய குடும்பம், அவர் , மணியம் மனைவி சீதா மகன் பாபு. மணியம் தான் புதிதாக அந்த ஆரம்ப பள்ளிக்கு வந்த ஆசிரியர். பழகுவதற்கு நல்லவர். மற்றைய சட்டம்பி மார் போலன்றி, இனிமையாகப் பழகுவார், வந்து சில நாட்களிலேயே இரண்டு குடும்பமும் நன்றாகப் பழகி நண்பர்கள் ஆகிவிட்டனர். அப்படியே கண்ணனும் பாபுவும் கூட நல்ல நண்பர் ஆகினர். வாத்தியாரும் அக்கிராம மக்களுடன் நன்றாக் ஒன்றி விட்டார் என்றே சொல்லலாம்.

இப்படியே நாளும் பொழுதும் கழியபாபுவும் கண்ணனும் உயர கல்வு கற்பதற்காக நகரத்தில் இருக்கும் கல்லூரிக்குச் சென்றனர். அங்கும் இருவரும் ஒரே வகுப்பு அதனால் இணைபிரியாதிருந்தனர். இப்பவும் காலம் வேகமாக விரைய இவர்கள் படிப்பும் முடிய, கண்ணன் ஒரு தனியார் கம்பனியில் வேலைக்கு சேர்ந்தான். அது தூர இடம் என்ற படியால் அவன் அங்கேயே ஒரு அறை எடுத்து தங்கி வேலை செய்து வந்தான் . இதனால் நண்பனைப் பிரிய வேண்டி இருந்தது. அவன் வேலை செய்தது நகரத்தில், நகரம் என்றாலே செலவினங்கள் கூடத்தானே, அதுவும் பெரிய உத்தியோகம் என்னும் பொழுது அதற்கேற்ற உடை இப்படி பணம் அதிக செலவுதான்.

வேலைக் கேற்ற சம்பளம் என்ற படியால் தொற்ற வில்லை கண்ணனுக்கு. மாதங்கள் சென்றன. பாபுக்கு இன்னும் வேலை கிடைக்க வில்லை, நண்பனிடம் உதவி கேட்டிருந்தான் .கண்ணனுக்கும் அங்கு சிலரைத் தெரிந்திருந்த படியால் அவர்களிடம் சொன்ன போது அவர்கள் இப்படி இன்னுமொரு கொம்பனி இருக்கு அங்கு கேட்டுப் பார்க்கலாம் என்று சொன்னார். கண்ணனும் அங்கு கேட்ட போது ஒரு இடம் வெற்றிடமாக இருப்பதாகச் சொன்னார்கள் .

கண்ணனும் பாபுக்கு சொல்லி மனுக்கொடுத்தான். அவனை நேர்முகம்ப் பரீட்சைக்கு அழைத்து அதில் தேர்வாகி வேலையும் கிடைத்தது. நண்பர் இருவரும் ஒரே அறையில் தங்கினர். வாடகை, உணவு, எல்லாம் பாதியாக பிரித்து கட்டினர். அத்துடன் மகிழ்ச்சியாக நாட்கள் நகர்ந்தன.

இப்படி இருக்கும் போது வருடப் பிறப்பிற்கு லீவு விட்டார்கள். இருவரும் கிராமத்திற்கு சென்றனர். பெற்றாருக்கு பெரு மகிழ்ச்சி பாபுவின் தந்தை கண்ணனைத்தேடி வந்து நன்றி சொன்னார். தன் மகனுக்கு வேலை எடுத்துக் கொடுத்ததற்காக. அதற்கு கண்ணன் மாமா அவன் என் நண்பன் நான் செய்யாமல் யார் செய்வார் என்று சொன்னான்.

அதற்கு அவர் இப்படியே என்றும் இணைபிரியா நண்பர்களாக இருங்கள்என்றார் அவனும் ஓம் மாமா என்றான். இப்படியே லீவு நாள் முடிய கண்ணனின் அம்மா கண்ணா உனக்குத் திருமணம் செய்வதாக நானும் அப்பாவும் முடிவு செய்துள்ளோம், பெண்ணும் பார்த்து விட்டோம், நீயும் பார்த்து பிடித்தால் மேற்கொண்டு பேசி முடிக்கலாம் என்றாள் .

அதற்கு கண்ணன் கொஞ்சம் பொறுங்கோ கொஞ்ச நாள் போகட்டும் நானும் கையில் கொஞ்சம் காசு சேர்த்துவிட்டு பாரப்போம் என்றான். அம்மாவும் சரி என்று சொல்லி வழியனுப்பி வைத்தாள் . கண்ணனும் அதனது வேலைக்கு சென்றுவிட்டான். பிறகென்ன பட்டினம் வந்ததும் வேலை வீடு வெளியில் போவது புது சினேகிதர், என்று பொழுது போனது. பாபுவுக்கும் புதிய நண்பர் அவர்கள் இங்கு அவர் இவர்கள் அங்கு போகஇப்படியே சந்தோசமாக நாட்கள் சென்றன.

அடுத்த முறை லீவு நாள் வந்தது கண்ணனும் கிராமத்திற்கு சென்றான். அம்மா கேட்டபடி பெண்பார்க்கும் படலம் நடந்தது. இருபகுதிக்கும் பிடித்திருந்தது. பின் சம்பந்தம் கலந்தார்கள், திருமணத்திற்கு நாளும் குறித்தாயிற்று. பெண்ணின் பெயர் உஷா. உஷாவும் கண்ணனும் சந்தித்து கதைத்தனர். பார்க் பீச் என்று சுற்றினர் சந்தோசமாக இருந்தது. கண்ணனும் லீவு முடிந்துவேலைக்கு செல்லும் நாளும் வந்ததுமனமின்றி இருவரும் விடைபெற்றனர். கண்ணனும் போய் விட்டு கடிதம் போட்டான். இப்டியே கடித மூலம் பேசிக் கொண்டனர்.

பாபுவும் கண்ணனின் திருமணச் செய்தி கேட்டு சந்தோசப்பட்டான். மற்ற நண்பர்களும் பார்ட்டி வைக்கவேண்டும் என அடம்பிடித்தனர். சரி என்று வைத்தாயிற்று, எல்லோரும் திருமணத்திற்கு கிராமத்திற்கு வருவதாக்க் கூறினர். கண்ணனும் சரி என்று சொல்லி விட்டான் . இப்பொழுது பிரச்சனை வீடு கண்ணன் பாபுவிடம் வேறு வீடு பார்கச் சொல்லி விட்டான். அப்படியே பாபுவும் தன் வேலை இடத்திற்கு கிட்ட ஒரு வீடு பார்த்தான், அது எல்லாவற்றிற்கும் வசதியாக இருந்தது.

பாபுவிற்கும் கொஞ்சம் கவலைதான் இருந்தாலும், நண்பனுக்குத் திருமணம் மனைவி வந்து இருக்க இடம் வேண்டும் தானே என மனதை சமாதானப் படுத்திக் கொண்டான் . சரி நண்பா நான் வேறு இடம் பார்க்கிறேன் என்று சொன்னான். அப்படியே இன்னொரு நண்பன் மூலம் வேலைக்கு கிட்ட ஒரு அறை எடுத்து அங்கே தங்கினான். அவர் இறுதியில் இருவரும் ஒருவர் வீட்டில் சந்தித்துக் கொள்வர். திருமண நாளும் வந்தது வேலையிடத்து நண்பர் குழாம் வந்திறங்கினர் திருமண விழா சிறப்பாக நடந்தேறியது.

நண்பர்களும் அடுத்த நாள் வண்டி ஏறிப் போய்விட்டனர். பின் கண்ணனும் மனைவியும் ஒரு கிழமையின் பின்னரே பட்டணம் சென்றானர். அங்கு பாபுவும் நண்பர்களும் இவரகளை வரவேற்று மகிழவைத்தனர்.

இப்படியே காலமும் கடுகதியில் ஓடியது, பாபுவும் லீவு நாட்களில் கண்ணன் வீட்டிற்கு வருவான் , உஷா நன்றாக சமையல் செய்வாள் புகழ்ந்து தள்ள விடுவான். உஷாவும் சந்தோசப்படுவாள். கண்ணன் சொல்லு வான் தான் இல்லா விட்டாலும் உனது ஓய்வு நேரத்தில் வீட்டை வந்து சாப்பிடலாம் எனஅப்படியே நடக்கையில், உஷா பாபுவை அண்ணா என அழைப்பாள் அதனால் கண்ணனும் அவர்கள் சகோதரங்களாகப் பழகுகிறார்கள் என்று சந்தோசப் பட்டான் இவர்கள் பழக்கம் நாளடைவில் வேறு மாதிரி போனது, இதை பெரிதாக எடுக்கவில்லை கண்ணன் அவன் தன் நண்பனென விட்டுவிட்டான்.

இப்படி இருக்கையில் பாபுவும் உஷாவும் காதல் வயப்பட்டார்ள். கண்ணன் வேலைக்கு சென்றதும் பாபு உஷாவிடம் வருவான் இருவரும்உல்லாசமாக இருப்பார்கள். இருவரும் மகிழ்ச்சியாக இருப்பாரகள் . பாபு இப்போ கண்ணன் வீட்டில் நின்றால் வருவது குறைவு. ஏனென்றால் மனப் பயம் நண்பனுக்குத் துரோகம் செய்கின்றேனே என்று ஆனால் உஷா அப்படி நினைக்கவில்லை உல்லாசமாக இருந்தால் சரி என நினைப்பாள் . இப்படி இருக்கையில் ஒரு நாள் கண்ணன் உடம்பு சரியில்லை என்று லீவு போட்டு விட்டு வீட்டிற்கு வந்தான்,

வீட்டிற்குள் சிரிப்பொலி சத்தமாக்க் கேட்டது அப்போ அவன் நினைத்தான் உஷா தொலைக் காட்சி பார்க்கின்றாள் என. ஆனால் உள்ளே நுழைந்ததும் தொலைக்காட்சி வேலை செய்தது என்னவோ உண்மைதான், ஆனால் பாபுவும் உஷாவும் கட்டிலில் இருந்த நிலை வேறு, உஷா கண்ணன் இந்த நேரம் வருவான் என எதிர்பார்க்கவில்லை.அதனால் திகைத்து விட்டாள். பாபு எழுந்து செல்ல பேசாமல் அடி எடுத்து வைத்தான். கண்ணனுக்கு இரத்தம் கொதித்தது, துரோகி சிறுவயது முதல் நண்பனாகப் பழகிவிட்டு இப்ப என்வாழ்க்கையிலேயே விளையாடி விட்டாயே. நட்புக்கே களங்கத்தை உண்டு பண்ணி விட்டாயே, உஷா நேற்று வந்தவள் ஆனால் நீயோ எத்தனை வருட நட்பு உனது செய்கையால் நட்பு என்பதற்கு அர்த்தம் இல்லாமல் போய்விட்டதே!

பக்கத்து வீடு சொன்னார்கள் நீ அடிக்கடி நான் இல்லாத போது வந்து போவதாக ஆனால் நீ நண்பனென நம்பி அதைப் பெரிது படுத்த வில்லை இப்ப இருவருவும் சேர்ந்து எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டீர்களே, உஷவும் கொஞ்ச நாட்களாக என்மேல் அவ்வளவு ஈடுபாடு இல்லை அது ஏனென இப்ப தான் புரிந்தது.

பாபு அவனிடம் என்னை மன்னித்துவிடு நண்பா ஆமாம் மதி மயங்கி விட்டேன் அந்த மயக்கம் இப்படி நடக்க வைத்து விட்டது. எனக்கு வேலை வாங்கித் தந்து தங்க இடமும் தந்து உயர்த்தி விட்டவன்

நீ , நான் உனக்கு துரோகம் பண்ணி விட்டேன். என்னை மன்னித்து விடு நண்பா என்றான். கண்ணன் சீ இனியொரு முறை நண்பா என்று சொல்லாதே அந்தப் புனிதமான சொல்லை அசிங்கப் படுத்தாதே. என்றான் உஷா வந்து அவன் காலில் விழுந்து கதறினாள் . ஆனால் கண்ணன் அவளிடம் எதுவும் பேசவில்லை காரணம் நண்பனே இப்படி செய்து விட்டான் முந்தநாள் வந்தவள் எப்படி? என நினைத்துக் கொண்டான்.

கண்ணன் பாபுவிடம் உஷாவின் உடைமைகளை எடுத்துக்கொண்டு இருவரும் வெளியே போங்கள் . மீண்டும் ஒரு முறை என் முகத்தில் விழிக்காதீர்கள் என்றான். உஷா தயங்கினாள் கண்ணன் அவளது உடுப்புப் பெட்டியை எடுத்தெறிந்து எடுத்துக் கொண்டு வெளியே போ! என் கண்முன்னே நிற்காதே என்று கத்தினான். அவர்கள் இருவரும் பயந்து விட்டனர் கண்ணன் பரமசாது ஆனால் இப்படி அவன் நடந்து கொள்ள யார் காரணம் அவனது மனைவி நண்பன் தானே , எவ்வளவு பெரிய துரோகம், உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்துவிட்டனர். அவர்கள் இருவரும் வேறுவழியின்றி வெளியே சென்றனர்.

அவர்கள் போனதும் கண்ணன் குமுறிக் குமுறி அழுதான், யாரிடம் சொல்வது, யரிடம் கேட்பது, யாரைநம்புவது மனம் த்த்தழித்தது. நண்பனே இப்படி செய்தால் நட்புக்குத் தான் மதிப்பேது. இப்படியே நாட்கள் நகரந்தது. உஷா தனது பெற்றாருக்கு கடிதம் போட்டாள் கண்ணன் தன்னை விரட்டி விட்டதாகவும் பாபுதான் தன்னைப் பார்ப்பதாகவும் தன்னில் பிழை இல்லாதவாறு அப்படி எழுதி விட்டாள். இதை அவளுடைய பெற்றார் கண்ணனின் பெற்றாரிடம் கொண்டு போய்க் காட்டினர்.

அதைக்கேட்ட கண்ணனின் பெற்றார் உடனே கண்ணனிடம் வந்தனர், அங்கு வந்ததும் தான் உண்மை என்னவெனத் தெரிந்து மிகுந்த கவலைப் பட்டனர். மகனுக்கு ஆறுதல் சொல்லி விட்டு கொஞ்ச நாள் அவனுடன் இருந்து விட்டு ஊருக்குச் சென்றனர். போகும்போது வந்து கொஞ்ச நாள் எங்களுடன் தங்கலாம் என்று கேட்டனர் . கண்ணனும் பார்ப்போம் என்று சொல்லி வழி அனுப்பி வைத்தான்.

இக்கதை எப்படியோ கண்ணனின் சக தொழிலாளிகளுக்குத் தெரிந்து விட்டது, எல்லோரும் பாபுவைத்தான் வைதனர். சரி உஷ ாவிற்கு எங்கே போனது புத்தி. எனத் திட்டினர் . என்ன இருந்தாலும் உன் நண்பன் செய்தது பெரிய துரோகம் தான் . எவ்வளவு கால நட்பு இடையில் வந்தவளால் விட்டுப் போச்சு, விதிவிளையாட்டும் மாயை உலகில் முத்திப் போச்சு. அப்போது வானொலியில் கண்ணதாசன் பாடலொன்று ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா என்று முடிவில் நண்பனிடம் தோத்து விட்டேன் பாசத்தாலே, எனப்பாடிக்கொண்டிருந்தது, கண்ணனுக்காக பாடியதுபோல.நட்பென்பது நல்ல நட்பாக இருக்க வேண்டும், அதுதான் இறுதிவரை நிலைக்கும். அ∴திலார் இப்படி இடையில் முறியும். நல்ல நட்பைத் தேர்ந்தெடுத்து நல்லவராக வாழ வேண்டும் என மனதில் நினைத்தான் கண் ணன்....

(முற்றும்)



## நெல்லிக்காயின் அற்புதம்...

தேவையற்ற கொழுப்பினால் அவதிப்படுகின்றீர்களா? நெல்லிக்காய் செய்யும் அற்புதம்மனிதனுக்கு இயற்கை அளித்த மருத்துவ குணம் மிக்க ஒரு உணவு பொருள் தான் நெல்லிக்காய்.

நெல்லிக்காய்
ஏழைகளின் ஆப்பிள் என்றும் ஆயுளை வளர்க்கும் கனி என்று குறிப்பிடப்படும் நெல்லிக்காவில் அதிகமான அளவு வைட்டமின் சி சத்துக்கள் நிறைந்துள்ளது. கொஞ்சம் அதிக புளிப்பு, கொஞ்சமான இனிப்பு, எஞ்சிய துவர்ப்பு, சற்றே கசப்பு என்றிருக்கும் நெல்லிக்கனி இன்று பரவலாக எல்லோரது வீட்டிலும் பழங்கள் காய்களுடன் பயன்படுத்தப்படும் ராஜ கனியாக அழைக்கப்படுகின்றது.

சமைத்தாலும், வேக வைத்தாலும், காயவைத்தாலும், வெட்டி நறுக்கினாலும் மொத்த பயனையும் வீணாக்காமல் தரும் சத்து மிகுந்த கனி இந்த நெல்லிக்கனி.நெல்லியில் 80 வீதம் நீர்ச்சத்து நிறைந் திருக்கிறது. இதனுடன் புரதச்சத்து, மாவுச்சத்து, நார்ச்சத்து, வைட்டமின் இரும்புச்சத்து, பாஸ்பரம், கரோடின் பாலிபினால், வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் நிறைந்திருக்கிறது.

கொழுப்புகளை கரைக்கும் நெல்லிக்காய்
குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் மூளை வளர்ச்சிக்கும் உதவுகிறது, நம் உடலில் தோன்றும் நஞ்சுகளை வெளியேற்றி இளமையாக இருக்க வழி செய்கிறது. நெல்லிக்காயில் நார்ச்சத்துக்கள் அதிகம் இருப்பதால் நம் உடல் எடையை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்கிறது. உடல் எடையை சீக்கிரமாக குறைக்க விரும்புவார்கள் நெல்லிக்காய் ஜூஸ் செய்து சாப்பிடலாம் என்று கூறப்படுகிறது. தேவையற்ற கொழுப்பினால் அவதிப்படுகின்றீர்களா? நெல்லிக்காய் செய்யும் அற்புதம் | Good Health For Amla Benefits

# கல்லீரலின் செயற்பாடு



நாளாந்தம் நாம் உணவு உண்கிறோம். அந்த உணவு, எப்படி எமதுஉடலுக்குப் போஷாக்கு அளிக்கிறது என்று எண்ணிப் பார்த்திருக்கிறோமா? வருகிறது. அது கூழாகி முன் சிறுகுடலுக்கு வந்த உணவில் மீதமிருக்கும்மாச்சத்து, புரதம் ஆகிய இரண்டும் நொதிகளின் துணையுடன் சீரணமாகின்றன.முன் சிறுகுடலில் உணவு சீரணிக்கத் துணைபுரியும் முக்கிய செரித்தல் சுரப்பி "பேங்க்ரியாஸ்" என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கணையம். இது வயிற்றின் அடிமுனையின் கீழ் இருக்கிறது. இதன் நாளமும் கல்லீரல் நாளமும் இணைந்திருக்கின்றன.

கணையத்திலிருந்து செரிமானத்துக்கு உதவ கணைய நீர் சுரக்கும். இந்த நீர் மாச்சத்து, புரதம், கொழுப்பு ஆகியவை சீரணமாக உதவுகிறது. இந்த நீரில் " அமிலேஸ் டிரிப்சின்", "லிபேஸ்" ஆகிய நொதிகள் (என்சைம்கள்) உள்ளன. சீரணிக்க உதவ கணைய நீர் முன் சிறுகுடலுக்குச் செல்லும் உடலின் ஆற்றலுக்கு உறுதுணையாக விளங்க இன்சுலினையும் கணையம் சுரக்கிறது.

**கல்லீரலின் முக்கியத்துவம்**

நாம் உண்ணும் உணவு, சரியாக அரைக்கப்படாமல் வயிற்றுக்குள் வந்தாலோ அல்லது சத்துக் குறைவான பொருட்களை நாம் உண்டாலோ கல்லீரலின் சுமை அதிகரிக்கும். ரத்த உறைதலுக்குத் தேவைப்படும் விற்றமின் கேயை உற்பத்தி செய்வது கல்லீரல். மாச்சத்து, புரதச் சத்து, விற்றமின் ஏ, பி ஆகியவற்றை பதப்படுத்தி அது சேமித்து வைக்கிறது. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நச்சுப் பொருட்களை உடலிலிருந்து வெளியேற்றுகிறது. குறிப்பாக ரத்தத்தில் கலந்திருக்கும் அமோனியா என்ற நச்சுப் பொருளை யூரியா என்ற நச்சுத் தன்மை இல்லாத பொருளாக கல்லீரல் மாற்றுகிறது. இத்தகைய முக்கியமான பல பணிகளைச் செய்யும் கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டால் உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் குறையும். எனவே உடல் நலத்தில் கல்லீரல் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**கல்லீரல் பாதிப்பின் அறிகுறிகள்**

சோர்வு, பசியின்மை, பித்தக் குழாயில் அடைப்பு ஏற்படுவதால் உருவாகும் மஞ்சள்காமாலை, உடலின் எடை குறைவு, காயம் ஏற்பட்டால் ரத்தம் உறைதலுக்கு தாமதம், உடல் வலுமின்மை, கண் பார்வை குறைபாடு, கல்லீரல் சுருக்கம் காரணமாக ரத்த வாந்தி ஆகியவை கல்லீரல் பாதிப்பின் முக்கிய அறிகுறிகள்.

**கல்லீரலை எப்படிக் காப்பது?**

நன்கு காய்ச்சி, வடிகட்டிய நீரையே எப்போதும் குடிக்க வேண்டும். மலேரியா காய்ச்சல் ஏற்படாமல் தவிர்க்க கொசுத் தொல்லை இல்லாமல் பாரத்துக் கொள்ள வேண்டும். நெருப்புக் காய்ச்சல் ஏற்படாமல் இருக்க தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். வீதிகளில் விற்கப்படும் ஈ மொய்த்த பண்டங்களைச் சாப்பிடக்கூடாது. மஞ்சள் காமாலை வகைகளான ஹெபடைடிஸ் ஏ, ஹெபடைடிஸ் பி ஆகிய நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளும் வகையில் தடுப்பூசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். புகை மற்றும் மதுப்பழக்கத்தைக் கைவிட வேண்டும்.



# பீர்க்கங்காயின் அற்புதம்

உடல் எடையைக் குறைத்து, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கணுமா? பீரக்கங்காய் செய்யும் அற்புதம் நீர்ச்சத்து அதிகம் கொண்ட காய்களில் ஒன்றான பீரக்கங்காய் சாப்பிட்டால் கிடைக்கும் ஆரோக்கிய நன்மையை குறித்து இங்கு தெரிந்து கொள்வோம்.

பீரக்கங்காய்

பீரக்கங்காய் ஒரு சிறந்த ஊட்டச்சத்துக்களின் களஞ்சியம். அதில் வைட்டமின்கள், தாதுக்கள், நார்ச்சத்து மற்றும் ஆண்டி-ஆக்ஸிடன்ட்கள் அதிகம் உள்ளன. இதில் அதிக அளவு நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்து உள்ளதால் செரிமானத்தை மேம்படுத்தவும், மலச்சிக்கலை போக்கவும் செய்கின்றது.

உடல் எடையைக் குறைத்து, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கணுமா? பீரக்கங்காய் செய்யும் அற்புதம் பீரக்கங்காயில் கலோரிகள் குறைவாக உள்ளதால், நீண்ட நேரம் வயிறு நிரம்பிய உணர்வை ஏற்படுத்துவதுடன், உணவு உட்கொள்வதில் கட்டுப்பாடும் இருக்கும். உடல் எடை அதிகரிக்காமல் இருக்கும்.

இதில் இருக்கும் ஃபைபர் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதுடன், இதில் உள்ள இரும்புச்சத்து ரத்த சோகையை குறைக்க உதவுகின்றது. வைட்டமின் சி சத்துக்களைக் கொண்டுள்ளதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், இதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் தோல் மற்றும் முடி ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் செய்கின்றது.

பீரக்கங்காயில் உள்ள வைட்டமின் ஏ சத்துக்கள் கண் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், இதில் உள்ள பொட்டாசியம் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும் செய்கின்றது. புற்றுநோயை தடுப்பதுடன், பீரக்கங்காயில் உள்ள பீட்டா கரோட்டின் கல்லீரல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்த உதவுகின்றது.




Fußball-Europameister-
schaft 2024 (in German)

UEFA European Football
Championship - 2024

Tournament details...
Host country - Germany
Dates 14 June – 14 July
Teams - 24
play - 51
Opening Game - 14.06.2024 - München
Final - 14.07.2024 - Berlin

## ஐரோப்பா வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி - 2024

24 ஐரோப்பிய நாடுகள் பங்குகொள்ளும் 17வது போட்டியானது 14.06.2024 வெள்ளிக்கிழமை குதூகலமாக ஆரம்பித்து 14.07.2024 முடிவடையும். நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடைபெறும் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டியானது 1960ம் ஆண்டு ஆரம்பித்து 17 தடவையாக இந்த வருடம் யேர்மனியில் நடைபெறுகின்றது. ஒரு குழுவில் 4 நாடுகள் என 6 குழுக்களாக மொத்தம் 24 நாடுகள் பங்குகொள்ளும். இப்போட்டியில் மொத்தம் 51 போட்டிகள் இடம்பெறும். 10 அரங்குகளில் நடைபெறும்..

அரங்குகளையும் பார்வையாளர் தொகையையும் பார்ப்போம்...

| | | |
|---|---|---|
| 1- Berlin - 74.461 | 2- München - 70.076 | 3- Dortmund - 65.849 |
| 4- Stuttgart - 54.906 | 5- Gelsenkirchen - 54.740 | 6- Frankfurt - 54. 697 |
| 7- Hamburg - 52.245 | 8- Düsseldorf - 51.031 | 9- Köln - 49.827 |
| 10- Leipzig - 42.959 | | |

வெற்றி பெறும் நாட்டு அணிக்கு பரிசுப்பணமாக
1 வது வெற்றிஅணி - 10 மில்.யூரோ
2 வது வெற்றிஅணி - 07 மில்.யூரோ
3 வது " " - 05 " "
4 வது " " - 03.2 " "
5 - 16 " " - 02 " "
17- 24 " " - 01.5 " "



-ஐரோப்பாக்கிண்ண வரலாற்றில் ஆகக்கூடுதலாகப் பங்குபற்றிய நாடுகள் வரிசையில்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-யேர்மனி | 14 | தடவைகள் | 6-பிரான்ஸ் | -12 | தடவைகள் |
| 2-ரஷ்ஷியா | 12 | ” | 7-இங்கிலாந்து | -11 | ” |
| 3-ஸ்பெயின் | 12 | ” | 8-செக்குடியரசு | -11 | ” |
| 4-இத்தாலி | 11 | ” | 9-உக்ரைன் | -11 | ” |
| 5-நெதர்லாந்து | 11 | ” | 10-டென்மார்க் | -10 | ” |

-ஐரோப்பாகிண்ண வரலாற்றில் நடைபெற்ற நாடுகள் விபரம்..

| ஆண்டு | -நடைபெற்றநாடுகளும் | - வெற்றி பெற்ற நாடுகளும் |
|---|---|---|
| 1960- | பிரான்ஸ் | - ரஷ்ஷியா |
| 1964- | ஸ்பெயின் | - ஸ்பெயின் |
| 1968- | இத்தாலி | - இத்தாலி |
| 1972- | பெல்ஜியம் | - ஜேர்மனி |
| 1976- | யூகோஸ்லாவியா | - செக்கோஸ்லாவியா |
| 1980- | இத்தாலி | - ஜேர்மனி |
| 1984- | பிரான்ஸ் | - பிரான்ஸ் |
| 1988- | யேர்மனி | - நெதர்லாந்து |
| 1992- | சுவீடன் | - டென்மார்க் |
| 1996- | இங்கிலாந்து | - ஜேர்மனி |
| 2000- | பெல்ஜியம் - நெதர்லாந்து | - பிரான்ஸ் |
| 2004- | போத்துக்கல் | - கிறீஸ்லாந்து |
| 2008- | ஒஸ்திரியா - சுவீஸ்லாந்து | - ஸ்பெயின் |
| 2012- | போலந்து - உக்ரைன் | - ஸ்பெயின் |
| 2016- | பிரான்ஸ் | - போத்துக்கல் |
| 2020-2021 | (11) பதினொரு நாடுகளில் | - இத்தாலி |
| 2024 | ஜேர்மனி | - ??????? |

-அடுத்த ஐரோப்பாக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 2028 கோடைகாலத்தில் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் நடைபெறும்.

ஐரோப்பாக்கிண்ண வரலாற்றில் ஆகக்கூடுதலாக வெற்றிபெற்ற நாடுகள்..

| | | | |
|---|---|---|---|
| யேர்மனி | 3 | தடவைகள் | 1972, 1980, 1996 |
| ஸ்பெயின் | 3 | ” | 1964, 2008, 2012 |
| பிரான்ஸ் | 2 | ” | 1984, 2000 |
| இத்தாலி | 2 | ” | 1964, 2021 |

போத்துக்கல்-2016 கிறீஸ்லாந்து-2004 டென்மார்க்-1992 நெதர்லாந்து-1988 செக்கோஸ்லாவியா- 1 சோவித்யூனியன்-1960 என ஒவ்வொரு தடவையும் வெற்றி பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு குழுவிலும் போட்டியிடும் நாடுகள்

Group A
1 Germany
2 Scotland
3 Hungary
4 Switzerland

Group B
1 Spain
2 Croatia
3 Italy
4 Albania

Group C
1 Slovenia
2 Denmark
3 Serbia
4 England




Group D
1 Poland
2 Netherlands
3 Austria
4 France

Group E
1 Belgium
2 Slovakia
3 Romania
4 Ukraine

Group F
1 Turkey
2 Georgia
3 Portugal
4 Czech Republic

Quarter-finals

5 July 2024 - 18:00
Winner Match 39 - Match 45 - Winner Match 37 - stuttgart Arena, Stuttgart
5 July 2024 - 21:00
Winner Match 41 - Match 46 - Winner Match 42 - Volksparkstadion, Hamburg
6 July 2024 - 18:00
Winner Match 40 - Match 48 - Winner Match 38 -Düsseldorf Arena, Düsseldorf
6 July 2024 - 21:00
Winner Match 43 - Match 47 - Winner Match 44 - Olympiastadion, Berlin

........................................................................................................................

Semi-finals

9 July 2024 - 21:00 - Winner Match 45 - Match 49 - Winner Match 46
Fußball Arena München, Munich
10 July 2024 - 21:00 - Winner Match 47 - Match 50 - Winner Match 48
BVB Stadion Dortmund, Dortmund

........................................................................................................................

Final
14 July 2024 - 21:00
Winner Match 49 - Match 51 - Winner Match 50 - Olympiastadion, Berlin

## சிரி!... சிரி!.....சிரிப்பு!....

1- ஒருவர்:- உனக்கு மின்சாரம் தாக்கிய அனுபவம் உண்டா?..
மற்றவர்:- அது ஒன்றுமில்லை சம்சாரம் தாக்கிய அனுபவம் நிறைய உண்டு!..

2- கணவன்:- அடடே ரசம் ரொம்ப நல்லாயிருக்கே...எப்படி வச்சே?..
மனைவி:- யாருக்குத் தெரியும் அதை வச்சு ஒரு வாரமாச்சே!..

3- பிச்சைக்காரன்:- அம்மா...தாயே..உயிர்போகுது..பசி தாங்க முடியவில்லை?..
வீட்டுப் பெண்:- சாப்பாடு இன்னும் ஆகவில்லை..
பிச்சைக்காரன்:- அம்மா தாயே பக்கர், பீட்சா இருந்தாப் போடுங்க தாயோ!..

4- ஆசிரியர்:- பொங்கலுக்கும் இட்டலிக்கும் என்ன வித்தியாசம்?.
மாணவன்:- பொங்கலுக்கு லீவு விடுவார்கள்..இட்டலிக்கு லீவு விடமாட்டார்கள்!..

5- விவசாயி:- உங்க பாங்கில கால்நடைகளுக்கு லோன் தருவீர்களா?..
மனேஜர்:- நிட்சயம் தருவோம்..
விவசாயி:- அப்படி என்றால் நான் பக்கத்து ஊரிலிருந்து 18 கிலோமீட்டர் கால் நடையாக நடந்து வந்திருக்கிறேன் எனக்கு உடனே லோன் தேவை!..

6- மனைவியின் செயலால் ஆத்திரமடைந்த கணவன் மாமனாருக்கு ஒரு குறுஞ்செய்தி (SMS) அனுப்பினார்...
கணவன்:- உங்கள் தயாரிப்பு(மகள்) மரியாதைக்குரியவளாக இல்லை. எப்பொழுதும் என்னோடு சண்டை போடுகிறாள். உணவும் ஒழுங்காகச் செய்து தாறாளில்லை?...
மாமனார் பதில்:- எனது தயாரிப்பு (மகள்) விற்கப்பட்டுவிட்டது. உத்தரவாதம் காலாவதியாகிவிட்டது. ஆதலால் உற்பத்தியாளரான நான் பொறுப்பில்லை.மன்னிக்கவும்...

.............................................................................................................................

## 3ம் பக்கத் தொடர்ச்சி...

- அங்கிருந்த ஓலைச்சுவடிகளில் தமிழினத்தின் கலை கலாச்சாரம், நாகரீகம், பண்பாடு, பண்டைய ஈழத்தை ஆண்ட தமிழரசர்களின் வரலாறு என்பன எழுதப்பட்டிருந்தன.
- மேலும் சீர் வளர் சீர் ஆறுமுகநாவலர் அவர்களால் அங்கிருந்த ஓலைசுவடிகளின் மூலம்தான் சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுத்தார்
- மிக முக்கியமாக சீர் வளர் சீர் ஆறுமுகநாவலர் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு தற்கால தமிழில் எழுதப்பட்ட பல ஓலைசுவடிகள் அவற்றுள் அடங்கும்
- பண்டைய புவியியல் நிலவரைகள் (geo. maps)
- பண்டைய நிலவரை நூல்கள் (map books)
- அது மட்டுமா எமது அரசர்கள் ஈழதேசத்திற்காய் கட்டுவித்த குளங்கள், மேற்கொண்ட நீர்ப்பாசன முறைகள், வழங்கிய வயல் நிலங்ககள் , கோவில்களுக்கு ஆற்றிய பணிகளின் ஆவணங்கள் என்பன அங்கிருந்தன

# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 33



பெயர் - திருமதி கௌரி கண்ணன்
பிறப்பு - யாழ் சுன்னாகம் , 15.10.1978
தந்தை, தாய் - திரு திருமதி கிருஸ்ணமூர்த்தி பரமேஸ்வரி
கல்வி - ஆரம்ப பாடசாலை - சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
உயர்தரம் - யாழ் இந்து மகளீர் கல்லூரி,
யாழ் வேம்படி மகளீர் கல்லூரி
கொழும்பு ஜெயவர்த்துனபுர பல்கலைக்கழகம்
(Business Administration )
சுருக்கெழுத்து, தட்டச்சு, கணனி கல்வி.
சங்கீத கலாயோதி ( Ofaal )
திருமணம் - வேலாயுதம் கண்ணன்
புலப்பெயர்வு - 2000ம் ஆண்டு
பிள்ளைகள் - 2 ஆண்கள், 2 பெண்கள்
எழுத்துத்துறை - கட்டுரை, பாடல், கவிதை, திருமண வாழ்த்துப்பா
படைப்பு - கட்டுரை மஞ்சரி-1 2018ம் ஆண்டு

சிறு வயதிலிருந்தே இறைபணியுடனும் கலை கலாச்சாரங்களுடனும் விருப்புடன் செயற்பட்டு வந்துள்ளார். சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோவிலில் தொண்டர்சபைத் தலைவியாகச் செயற்பட்டதோடு பண்ணிசை பஜனை ஓதி பக்தி மயமாகவும் சரியைத் தொண்டுகள் செய்தும் ஆன்மீக வழியில் தொண்டுகளும் ஆற்றி வந்தார். மேடை நிகழ்வுகளிலும் திறமையாக ஆற்றுகைகளை மேற்கொண்டார்.







இவர் உயர்தரம் படிக்கும் போது தனது பாடசாலை வர்த்தக மாணவர் மன்றத்தின் பத்திராதிபராக செயற்பட்டு 1997 ஆம் ஆண்டு "வர்த்தகி " எனும் மலரை கணனி வடிவமைப்பிலான நூலாக வெளிவர முன்னின்று உழைத்துள்ளார். " கல்வியும் கலையும் நம் கண்கள் " என கல்வியைத் தொடர்ந்து ,உயர்தரம் சித்தியடைந்து , தொடர்ந்து ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக Business Administration துறையைத் தேர்ந்தெடுத்து இரு வருடங்கள் கற்றதோடு கணனித் துறையும் தட்டெழுத்து சுருக்கெழுத்து துறையும் கற்றுப் பூர்த்தியாக்கி வரும் காலப்பகுதியில் புலம்பெயர்ந்து யேர்மன் நாட்டிற்கு வந்தார்.

பேர்லின் வந்து இல்லறத்தில் வாழ்ந்து வரும் வேளையில் 4 குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்து , வளர்த்து, அவர்களும் உயர்கல்விகளைத் தொடர்ந்து வரும் அதே வேளையில் தாய்மொழி தமிழிலும் உயர்தரம் வரை கற்று கேம்பிரிட்ஜ பல்கலைக்கழக சான்றிதழ் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு தமது பிள்ளைகளையும் கலை கலாச்சாரம் தழுவித் தொண்டாற்ற வழிவகை செய்துள்ளார்.

இவர் ஜெர்மனிய மொழியைக் கற்று " எடிக்கா " என்னும் வணிகநிலையத்தில் ( Edeka Völker" Supermarkt) ஆறு வருடங்களாகக் " காசாளர் "பணியில் கடமையாற்றி வருகின்றார்.

பேர்லின் தமிழாலயத்தில் 14 வருடங்கள் தாய்மொழி தமிழைச் சிறப்பாக கற்பித்து வந்தவர். ஆண்டு 2 முதல் 12 ஆம் ஆண்டு திறம்பட தாய்மொழியைக் கற்பித்து மாணவர்கள் மனதில் இடம் பிடித்த ஆசிரியர்களில் இவரும் ஒருவர்.

இல்லப் பொறுப்பாளராகவும் கலைகளுக்கு உதவிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றி முப்பதுக்கும் மேற்பட்ட சொந்த ஆக்கத்திலான மேடை நிகழ்வுகள் விநோத உடைப்போட்டிகள், விளையாட்டுப் பயிற்சிகள் எனப் பல்வகையிலும் உற்சாகத்துடன் உழைத்துள்ளார்.

மாணவர்களுக்குத் தமிழ்த்திறன் போட்டிகளுக்குத் தேவையான கட்டுரைகள், கவிதைகள், பேச்சுகள்,நாடகங்கள் ,வில்லிசைகள் என்பவற்றை எழுதிக் கொடுத்து மாணவர்களின் தாய்மொழி வளர்ச்சிக்காய் அரும்பாடுபட்டுள்ளார்.

இவர் 2018 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கட்டுரை மஞ்சரி-1 நூலைத் தயாரித்து வெளியிட்டேன். நினைவுமலர்கள், தேவாரத்தொகுப்புகள் என்பற்றையும் வடிவமைத்து தயாரித்து வந்துள்ளார். இதைவிட பொது அமைப்பு நிகழ்வுகளிலும் மேடை நிகழ்வுகளை அரங்கேற்றுவதோடு, நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் அறிவிப்பாளராகவும், நூ ல் விமர்சகராகவும்,பேச்சாளராகவும், அறிக்கைப் பதிவாளராகவும்

பேர்லின் ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயத்தின் நிர்வாகசபையில் 2016 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை தொண்டாற்றி வருகின்றார். 2 வருடங்கள் கணக்குப் பரிசோதகராகவும் 6 வருடங்கள் செய்தித் தொடர்பாளராகவும் தொண்டாற்றி வருகின்றார். ஆலய பூஜைப் பிரசுரங்களை எழுதி வடிவமைத்து முகநூலூடாகவும் ,லங்காசிறி இணையமூடாகவும் வெளியிட்டு வருகின்றாா.

ஆலய விஷேட பூஜைகளை நிழற்படங்களாகவும், முகநூல் நேரலைக-ளாகவும் பதிவிட்டு , ஆலய வளர்ச்சிக்கும் மகிமைக்கும் அரும்பாடுபடுவதோடு, ஆலயத்தால் வழங்கும் ஆத்மசாந்திகளையும் தயாரித்தும் வழங்கி வருகி-றார். மேலும் மாணவர்களுக்கு புராணக்கதைகளை நாடகமாகவும், பல்லின மொழியாளர்கள் ஆலயத்திற்கு வரும் போது சமய வழிகாட்டல்களையும் (Führung) செய்து வருகிறார். இத்துடன் வருடாந்த பூஜை விபரங்களை ஏடாக தயாரித்து வெளியிட்டு வருகின்றார்.

பொது நிகழ்வுகளுக்கான வாழ்த்துகள், ஆசிகள், அந்திமக் கிரியைகளுகான அஞ்சலிகள் ,போன்றவற்றை எழுதி , வடிவமைத்து வழங்கி வருவதோடு, அந்திமக்கிரியை நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியும் தொண்டாற்றி வருகிறார்.

எமது பணியைப் பாராட்டி 2023ம் ஆண்டு உலகக்கோவில் நிறுவனத்தால் " கலைஞானச்செல்வி " எனும் பட்டமும் வழங்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இற்றை வரை பொதுத் தொண்டை விருப்பிச் செய்பவர்களில் ஒருவராக விளங்குகின்றார். பேர்லின் மக்கள் மத்தியில் எடுத்த மாத்திரத்தில் எந்த தலைப்பையும் எந்த வடிவத்திலும் எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு இற்றைவரை பேர்லின் ஸ்ரீ மயூரபதி முருகன் செய்தித் தொடர்பாளராகவும், சங்கீத ஆசிரியராகவும், தாயக அரசி யல் அமைப்பொன்றில் பேர்லின் பிரதிநிதியாகவும் செயற்பட்டு வருகிறார்.

" என்கடன் பணி செய்து கிடப்பதே " "மூச்சும் பேச்சும் சைவத்தமிழே" என வாழ்ந்து கொண்டிருக்கும் கௌரி கண்ணன் அவர்கின் பணிகள் தொடர்ந்து எண்ணங்கள் நிறைவேறி வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# உலகில் உணவுக்காக அதிகம் கொல்லப்படுவது கோழி...

ஒரு வருடத்தில் 10.000 கோடி விலங்குகள் கொல்லப்படுகின்றன.

உலகில் ஆண்டு ஒன்றில் சுமார் 10.000 கோடி விலங்குகள் பறவைகள் கொல்லப்படுவதாக " த எக்கனமிஸ்ட் " என்ற அமெரிக்காவின் முன்னணி செய்தி நிறுவனம் இது குறித்த ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி ஓர் ஆண்டில் உணவுக்காகக் கொல்லப்படும் உயிரினங்களைப் பார்ப்போம்..



1- கோழி - 1.900 கோடி
2- மாடு - 150 கோடி
3- ஆடு - 100 கோடி
4- பன்றி - 100 கோடி
5- குதிரை - 50 லட்சம்
6- ஒட்டகம் - 8 லட்சம்
7- எருமை - 1 லட்சம்
8- முதலை - 83 ஆயிரம்
9- ஆமை - 50 ஆயிரம்

- இவை போன்று நாய்கள், பூனைகள், உடும்பு, பாம்பு, குரங்கு போன்ற உயிரினங்களும் கோடிக்கணக்கில் வேட்டையாடப்பட்டு மனித உணவாகின்றன.
- பறவை இனங்களிலும் தீக்கோழி, வான்கோழி, காட்டுக்கோழி, கிளி, மயில், மைனா, புறா, வௌவால், குருவிகள், காட்டுப் பறவைகள் எனப்பல கோடி அடங்கும்.
- மீன் இனத்தைப் பொறுத்தளவில் பல கோடிக்கணக்கானவை வருடாவருடம் உணவுக்காகப் பிடிக்கப்படுகின்றன. குறிப்பாகச் சுறா மீன்தான் மிக அதிகமாக மனிதர்களால் வேட்டையாடப்படுகின்றன.
- உலகிலேயே மிக அளவிலான அசைவ உணவை எடுத்துக்கொள்ளும் நாட்டு மக்களாக சீனர்களே இருந்து வருகிறார்கள். உலக நகர்வில் 25 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கின்றது.
- ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது நாள் ஒன்றிற்கு 20 கோடிக்கும் அதிகமான கோழிகள் கொல்லப்படுகின்றன. அதன்படி ஒரு நிமிடத்தில் 1 லட்சத்து 40 ஆயிரம் கோழிகள் உயிர் விடுகின்றன.
- உலகின் மனிததொகை கூடிக்கொண்டு போக உயிரினங்களும் உணவுக்காக கொல்லப்படும் தொகையும் கூடிக்கொண்டு செல்கின்றன.
-சைவ உணவுகளைவிட மாமிச உணவுகளே மனிதருக்குக் கூடிய தீங்கு விளைவிப்பதாக மருத்துவ அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. ஆகவே மனிதர்கள் மாமிச உணவுகளைப் படிப்படியாகக் குறைத்து சைவ உணவுகளை உண்ணுபவர்களாக மாறும் பொழுது இப்படி வருடாவருடம் கோடிக்கணக்கான உயிரினங்களைக் காப்பாற்ற முடியும் என்பது நிஜமாகும். கோழிகளாகப் பிறப்பது பாவம் தான்... பசி, பட்டினி பாவ புண்ணியம் அறியப் போகின்றதா?...



( 28.10.1933 - 11.03.2024 )

## தென்மராட்சியின் கல்விமான் காலமானார்...

## கவிநாயகர் கந்தவனம் - நுணாவில் - குரும்பசிட்டி - கனடா...

கனடா நாட்டின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவரும் புகழ்பெற்ற கவிஞருமான திரு வி கந்தவனம் அவர்கள் 11.03.2024 அன்று தனது 90வது வயதில் கனடாவில் காலமானார்.

தமிழுக்கும் தமிழ் கவிதை உலகிலும் 50 ஆண்டுகளுக்கு மேல் எழுதி வந்தவரும் பல ஆயிரக்கணக்கான கவிஞர்களை உருவாக்கியதுடன் தாயகத்திலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான மேடைகளில் கவிபாடி, சொற்பொழிவு நிகழ்த்தி பல்லாயிரம் தமிழர்களின் உள்ளங்களில் நிலைகொண்டிருந்த இந்த மாபெரும் கவிஞரின் இழப்பானது. பேரிழப்பாகவே கருதலாம். இவர் பற்றிய குறிப்பைப் பார்ப்போம்...

சாவகச்சேரி - நுணாவில்தான் இவரது பிறப்பிடம். 28.10.1933ம் ஆண்டு பிறந்த இவரின் தாய் தந்தையர் சின்னம்மா- விநாயகர். சகோதரர்கள் இருவர். யாழ் குரும்பசிட்டியில் திருமணம் செய்தவர். வாரணன், வாணி என இரு பிள்ளைகள் ருத்திரா, துஷித்தா என மருமக்கள் நுணாவில் கணேச வித்தியாசாலை, சாவகச்சேரி றிபேக் கல்லூரி அகியவற்றில் கல்வி கற்று சென்னை கிறிஸ்தவக்கல்லூரி, கோவை கலைக்கல்லூரி அகியவற்றில் பட்டப் படிப்பை முடித்தார்.

மாத்தளை புனித தோமையர் கல்லூரி, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம் ஆகிவற்றில் ஆசிரியர் பணி. அளவெட்டி அருணோதயா கல்லூரியின் அதிபர் பதவியின் பின்னர் தென்னாபிரிக்காவில் உயர் கல்லூரி ஒன்றில் மானிடவியல் துறைத் தலைவராகப் பணிபுரிந்தார்.

பின்னர் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்தார்.அவரின்தமிழ்-ஆங்கில புலமை, புலன்களைப் புகழ வைக்கும் கவிப்புலத்தைக் கண்டதால் கனடா தேசத்தின் தேசியக் கீதத்தை தமிழில் மொழிபெயர்தார். அவரது இனிய தமிழ் வார்த்தைகளின் அணிவகுப்பை ஏற்ற தேசியக்கொடி கடந்த 25 வருடங்களாக மதிப்புடன் வானில் பறந்து ஒட்டுமொத்த தமிழ்ச் சமுகத்துக்கும் பெருமை சேர்த்தார்.

பெரும் கவிஞர், கட்டுரையாளர், இலக்கிவாதி, மேடைப்பேச்சாளர், பட்டிமன்றப் பேச்சாளர் என தமிழுக்கு அணிசேர்த்த அதீத ஆற்றல் பெற்றவர். இனிமையான எழுத்தாளர். மேடைக்கு கம்பீரத்தை ஊட்டி சபையோருக்குக் கௌரவம் சேர்க்கும் சுவாரசியமான பேச்சாளர். உயர்ந்த உள்ளம் கொண்ட உத்தமர். இத்தனை திறமைகள் கொண்ட பாவரசர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் ஒரு சிறந்த தமிழனாகவும் வாழ்ந்துகாட்டினார்.

அறிவால்..ஆற்றலால்...அனுபவத்தால் அவர் முதியவர். இலகுவாய்... இனிமையாய்...இதயத்தால் எழுதுவதில் அவர் இளையவர். 1954ம் ஆண்டு அவரது முதலாவது குறுநாவலான " ஒன்றரை ரூபாய் "வெளிவந்த பொழுது தமிழ் இலக்கிய உலகம் இவரை அடையாளம் கண்டுகொண்டது. தனது வாழ் நாளில் 80 நூல்களை எழுதியுள்ளார். இவரின் எழுத்து, கவிப்பணிகளைப் போற்றி 1993ம் ஆண்டு கனடிய மண்ணில் இவருக்கு மணி விழா கொண்டாடப்பட்டது.

ஆசிரியர், அதிபர், நடிகர், கவிஞர், எழுத்தாளர், கட்டுரையாளர், கவியரங்கு தலைவர், பட்டிமன்றத் தலைவர், சமயச் சொற்பொழிவாளர் எனப் பல்வேறு ஆற்றல் படைத்த இந்த மாபெரும் கலைஞனின் இழப்பானது தமிழுலகத்துக்குப் பேரிழப்பாகவே கருதலாம். கவிதை என்பது அவரது வாழ்வின் முகவரியாகும்....

கவிஞர் அவர்களோடு எனது தொடர்பு.. இவர் மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபராக 1975ம் ஆண்டளவில் இருந்தார். அப்போது நான் இளைஞன். இந்தப் பாடசாலையில் நிகழ்ந்த விழாக்களிலும் பிரதேசத்தில் நடைபெற்ற பல விழாக்களிலும் இவரின் கவி அரங்கு மற்றும் பட்டிமன்றங்களைக் கேட்டு ரசித்திருக்கிறேன். எனது சகோதரனுடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் படித்தவர் என்றபடியால் அவருடன் அன்று அறிமுகமானேன்.

பின்னர் 2000ம் ஆண்டளவில் யேர்மனியில் சந்தித்துக் கலந்துரையாடினேன். அவரிடம் பேட்டி எடுத்து எமது மண் சஞ்சிகையில் பிரசுரித்தேன். அவரின் கவிதைகள் பல ஆண்டுகளாக எமது மண் சஞ்சிகையை அலங்கரித்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றது. பல தடவைகள் தொலைபேசித் தொடர்பு. இறுதியாக 2019ம் ஆண்டு கனடா "உதயன் " பத்திரிகை விழாவில் சந்தித்து உரையாடியதுதான் மறக்கமுடியாத நாள் அது. அவரின் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், உறவுகள் நட்புக்கள் அனைவருக்கும் எமது ஆறுதலைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம். ஓம் சாந்தி!...ஓம் சாந்தி!...



## 107 வயதில் மூத்த தமிழ்க் குடிமகன் காலமானார்...

யாழ் - தென்மராச்சி சாவகச்சேரியில் வாழ்ந்தவர்...
75 பேரப்பிள்ளைகள் 25 பூட்டப்பிள்ளைகள்...
சாவகச்சேரி உதயசூரியன் பகுதியில் வாழ்ந்து வந்தவரும் வட பகுதியில் வயது கூடியவர் என்ற பெருமையில் வாழ்ந்தவரான பூச்சி வேலு முத்து என்பவர் தனது 107வது வயதில் கடந்த 08.03.2024 அன்று காலமானார்.
1917ம் ஆண்டு பிறந்த இவர் தனது 107வது வயது பிறந்தநாளையும் அண்மையில் கொண்டாடியிருக்கிறார். 10 பிள்ளைகள், 75 பேரப் பிள்ளைகள், 25 பூட்டப் பிள்ளைகள் 5 கொள்ளுப் பேரப்பிள்ளைகளோடு வாழ்து கொண்டிருக்கையில்தான் சிறிது காலம் நோய்ப்பட்டு இறைவனடி சேர்ந்திருக்கிறார்.
இப்படியாக 107 வயதுவரை வாழ்ந்த வரலாற்றை நோக்கினால் அன்றைய உணவு, உணவுப்பழக்கம், கடுமையான உழைப்பு, நல்ல பழக்க வழக்கம், கட்டுக்கொப்பான வாழ்க்கை முறை, மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை முறை எனப் பல நல்வழிப்படுத்தல்களால்தான் அன்றைய நம்மக்கள் நீண்டகாலம் வாழ்ந்து வழிகாட்டினார்கள்.
இன்று அத்தனையும் தலைகீழாகியது. வாழ்க்கை ஒரு போராட்டமாக மாறி, உணவும் உணவுப் பழக்கமும் மேலத்தேச உணவுகளுக்கு மாறி, பழைய தானிய உணவுகளை கைவிட்டோம். அதிவேக வாழ்க்கை முறையால் எல்லாம் அவசர ஓட்டம்மாகியது. உடல் உழைப்பு அருகிப்போனது. உடற்பருமன்கூடி பல வியாதிகளை வரவேற்றுக் கொண்டுள்ளோம். மன அழுத்தம், இரத்த அழுத்தம், நீரழிவு, புற்றுநோய் போன்ற உயிர்கொல்லி நோய்களைத் தேடிக்கொண்டுள்ளோம். இதனால் நமது ஆயுளும் குறைந்து வருவது கசப்பான உண்மையாகும்.
எனவே 107 வயதுவரை வாழ்ந்தவர் என்றால் அது இன்று மகத்தான சாதனைதான். இந்த முதியவரைப் போல நாமும் வாழ முயற்சிப்போம். இந்த முதியவருக்கு ஆழ்ந்த இரங்கல்.

""உணவே மருந்து....நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்""

80ம் பக்கத் தொடர்ச்சி......

இந்த அமைப்பை உருவாக்கிய நிறுவனரும் ஸ்தாபகத்தலைவராகவும் கடந்த 63 வருடங்கள் உழைத்த பெருமகன்தான் கலாநிதி ஆரியரத்தினா அவர்கள். காலி மாவட்டத்தில் பிறந்த இவர் காலி மஹிந்தக் கல்லூரி, வித்தியோதயா பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார். கொழும்பு நாலந்தாக் கல்லூரியில் ஆசிரியர் தொலை மேற்கொண்டிருக்கையில்தான் மக்கள் படும் துன்ப துயரங்களை அறிந்து வேதனைப்பட்டே சமூகத் தொண்டனாகப் பணியை ஆரம்பித்தார்.

சர்வோதய அமைப்பில் பணிபுரியும் காலங்களில் கலாநிதி ஆரியரத்னா ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பிலிப்பைன்ஸ ில் மானிடவியல் கலாநிதிப்பட்டமும் படித்துப் பெற்றுக் கொண்டார்.

ஆரம்பத்தில் சர்வோதய சிரமதானப் பணிகளைக் கிராமம் கிராமமாக பெரும் தொண்டர் படையணிகளைத்திரட்டி சமூகப்பணிகளை மேற்கொண்டார். புத்தபெருமானின் போதனைகளில் ஈர்க்கப்பட்ட இவர் ஆறு நிலைகளில் சர்வோதய இயக்கத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு கோட்பாட்டினையும் நடைமுறையினையும் உருவாக்கினார்.

இவரது பணிகளை தமிழ்ப்பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் வடகிழக்கில் பல்லாயிரம் எழை எளிய மக்களின் துயர்தடைப்பில் பெரும் பங்காற்றி இருக்கின்றார். பயிற்சி நிலையங்கள், சிறுவர் பாடசாலைகள், கல்வி நடவடிக்கைகள், அறவழி நிலையங்கள், சமூக முன்னேற்றுத்துக்கான பல திட்டங்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் துயர்தடைப்பில் பெரும் பங்காற்றியிருக்கின்றார்.

அவரின் பணியாக இன்றும் 50 ஆண்டுகள் கடந்து யாழ் புங்குடுதீவில் சர்வோதய அமைப்பின் வடபகுதி காரியாலயம் செயற்பட்டு வருவதுடன் வடக்கு கிழக்குப் பிரதேசங்களின் பல மக்கள் நலன் திட்டங்களை செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

சர்வோதய அமைப்பானது 63 ஆண்டுகள் இலங்கையில் மிகப்பெரிய அரச சார்பற்ற இயக்கமாகத் தனது சேவையைச் செய்து வருவதென்றால் அது அமரர் ஆரியரத்னாவின் மகிப்பெரிய பணி என்றே கூறலாம். அவர் ஆற்றிய அர்ப்பணிப்பான பணிகளுக்காகப் பல விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

1- 2007 - இலங்கை ஜனாதிபதியால் மிக உயரிய தேசிய விருதான "ஸ்ரீலங்காபிமானய" விருதைப் பெற்றார்.

2- 1969 - பிலிப்பைன்ஸ் நாட்டு விருதான மனித நல்வாழ்வு, அமைதிக்கான விருது "ரமோன் மெக்சேசே " விருது.

3- 1982 -பெல்ஜியம் சர்வதேச அபிவிருத்திக்கான "கிங் பவுண்டேயின் விருது.

4- 1992 - யப்பான் சமூகசேவைக்கான "நிவானோ பீஸ் பிரைஸ் " விருது

5- 1996 - இந்திய " மகாத்மாகாந்தி " அமைதி விருது போன்ற பல விருதுகளை உள்நாட்டியும் வெளிநாடுகளிலும் பெற்றார்.


ஆம் 63 வருடங்கள் என்பது எவ்வளவு பெரிய சாதனை. இலங்கைவாழ் பாமர மக்களின் விடிவிற்காக அரும்பாடுபட்டு உழைத்த இந்த மாமனிதன் பிறந்தது "" ஒரு சம்பவமாக இருந்தாலும் அவரது இறப்பு ஒரு சரித்திரமாகவே "" பதியப்படுகின்றது. மறைந்த மாமனிதரை நினைவுகொண்டு அஞ்சலிக்கின்றோம்!...

**ஆசிரியர் - மண் சஞ்சிகை**



# அபுதாபியில் முதல் இந்து கோயில் திறப்பு 14.02.2024....

திறந்து வைக்கிறார் இந்தியப் பிரதமர் மோடி...
அரபு நாடுகளின் வவரலாற்றில் முதல் பெரிய இந்துக் கோவில்...
ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் இந்து கோயிலாக சுவாமிநாராயண் மந்திர், அபுதாபியில் பிரமாண்டமாக கட்டி எழுப்பப்பட்டுள்ளது.
900 கோடி ரூபாய் செலவில் 7 கோபுரங்களுடன், நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளுடன் கலை நயத்துடன் இக்கோயில் இறுதி வடிவம் பெற்றுள்ளது.
இது அந்நாட்டில் உள்ள கலாசார பன்முகத்தன்மை மற்றும் சகிப்புத்தன்மையைக் குறிப்பது மட்டுமல்லாமல், இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.
அத்தோடு, அபுதாபியில் கட்டப்பட்டுள்ள இந்து கோவில் கும்பாபிஷேகத்துடன் 14.02.2024 புதன்கழமை திறக்கப்பட உள்ளதோடு திறப்பு விழாவில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் பல நாடுகளின் தலைவர்களும் பிரபலங்களும் பங்கேற்கவுள்ளனர். மேலும், பொதுமக்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதி முதல் கோயிலை பார்வையிடலாம் என அபுதாபி பிஏபிஎஸ் அமைப்பு அறிவித்துள்ளது.
இதற்காக அந்த அமைப்பின் இணையதளம் மற்றும் பெஸ்டிவல் ஆப் ஹார்மனி என்ற செயலி மூலம் முன்பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. துபாய் அபுதாபி ஷேக் ஜாயித் சாலையில் உள்ள அல் ரக்பா அருகே முரைக்கா பகுதியில் 55,000 சதுர அடி இடத்தில் இந்த கோயில் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
95 வீதத்திற்கும் அதிகமான இஸ்லாமிய மக்கள் வாழும் நாடு ஒன்றில் இந்துக் கோவில் கட்டப்பட்டிருப்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். இதனால் மத நல்லிணக்கம் மேலோங்க மேலும் வழிவகுக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பான விடையமாகும்.
அபுதாபி உட்பட அனைத்து அரபு நாடுகளையும் நோக்கினால் அனைத்து நாடுகளிலும் இந்தியர்கள்தான் மிக அதிகமாக தொகையினர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தியர்களின் கடும் உழைப்பினால்தான் அரபு நாடுகளின் பொருளாதாரம் வளர்ந்து வருவது முக்கிய காரணமாகும். இதே மாதிரியான பல கோவில்கள் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, மொரீஷியஸ், நேபாளம், இந்தோனிஷியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் பெரும் செலவில் கட்டடி வழிபாட்டிற்கு விடப்பட்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்....




# 13 வயது தமிழ் மாணவனின் நீந்தல் சாதனை...

செல்வன் ஹரிகரன் தன்வந்த் - திருகோணமலை...
பாக்குநீரிணையை நீந்திக் கடந்தார்...

திருகோணமலையைச் சேர்ந்த 13 வயது மாணவனான தன்வந்த் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். 01.03.2024 அன்று இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாா வரையான 32 கிலோமீட்டர் தூரத்தை 9 மணித்தியாலங்கள் 54 செக்கனில் அவர் நீந்திக் கடந்துள்ளார். இதன்மூலம் குறைந்த நேரத்தில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார். 01.03.2024 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் தனுஷ்கோடியில் நீந்த ஆரம்பித்த இவரின் நீச்சல்ல் பயணம் மதியம் 2 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தலைமன்னார் கரையை வந்தடைந்த செல்வன் தன்வந்தை யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதுவர் திரு செவிதி சாய்முரளியும் தூதரக அதிகாரிகள், மன்னார் பகுதி விளையாட்டு அதிகாரிகள், ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் வரவேற்றுப் பாராட்டி மாலைகள் அணிவித்து வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

செல்வன் தன்வந்த் திருகோணமலை இந்துக்கல்லூரியின் மாணவன் என்றபடியால் பெருந்தொகையான பாடசாலை மாவணர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இந்தச் சிறிய வயதில் விடாமுயற்சியும் பயிற்சியும், மன உறுதியும்தான் வெற்றி இலக்கை அடையக் காரணமாகும். செல்வனை நாமும் வாழ்த்தி மகிழ்கின்றோம்!..







## 2 வயது தமிழ்ச் சிறுவனின் உலக சாதனை....

## டுபாய் - அபுதாபியில் தமிழ்ச் சிறுவனின் சாதனை..

1- இலங்கை - வத்தளையைச் சேர்ந்த தமிழ்ச் சிறுவனான பாத்திமா - இபாஷா தம்பதிகளின் 2வயது மகனான முகமது சபான் 35 நாடுகளும் அதனுடைய நாணயங்களையும் (பணம்) 16 விநாடிகளில் கூறி உலகசாதனை படைத்திருக்கிறார்.

2- யாழ்-இளவாலை ஹென்சியரசர் பாடசாலையின் 16 வயது மாணவன் டுபாய்-அபுதாபியில் உதைபந்தாட்டத்தில் சாதனை படைத்திருக்கிறார். இளவாலை- சேந்தாங்குளம் பகுதியைச் சேர்ந்த பாக்கியநாதன் டெவிட் டானின்ஸன் என்ற 16 வயதுச் சிறுவன் டுபாய்-அபுதாபியில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

மேற்படி போட்டியில் கலந்துகொண்டு கீழே பந்தை விழவிடாமல் 1.000 தடவைகள் கட்டுப்படுத்தி 1வது இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

விளையாட்டிலோ அல்லது வேறு எதுவானாலும் விடாமுயற்சி, நம்பிக்கை, கடும் உழைப்பு போன்றவை இருத்தல் வேண்டும். சாதனைபுரிய வயது எந்தவகையிலும் தடை இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு ஒரு காரியத்தை துணிச்சலுடன் செய்வோமானால் அது கைகூடும். வெற்றிக்கனியைப் பறித்துவிடலாம் என்பதே உண்மை. ஆகவே நாம் ஒவ்வொருவரும் தேடலும் முயற்சியும் எப்போதும் கொண்டிருப்பது அவசியமான விடையமாகும்...





# உலகில் சில நாடுகளில் இந்துக்கள்

1- பாக்கிஸ்தான்: பாகிஸ்தானில் இஸ்லாத்திற்கு அடுத்தபடியாக இந்து மதம் இரண்டாவது பெரிய மதமாகும். இந்துக்கள் பாகிஸ்தானின் மக்கள்தொகையில் 2.14%. பாகிஸ்தான் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 4.4 மில்லியன் மக்கள் மட்டுமே உள்ளனர், இருப்பினும் பாகிஸ்தான் இந்து பாக்கிஸ்தானில் 8 மில்லியன் இந்துக்கள் வாழ்கின்றனர். நாட்டிலேயே உமர்கோட் மாவட்டத்தில் 52.2% இந்துக்கள் வசிக்கின்றனர்.

2- டிரினிடாட் மற்றும் டொபாகோ: இந்து மதம் இங்கு இரண்டாவது பெரிய மதமாகும். இந்து கலாச்சாரம் 1845 இல் டிரினிடாட் மற்றும் டொபாகோவிற்கு வந்தது என்று கூறப்படுகிறது. முக்கியமாக முதல் இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்களின் வருகை மட்டுமில்லாமல், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்துக்களாக இருந்தனர்.

3- மொரிஷியஸ்: இந்தியப் பெருங்கடலில் உள்ள சிறிய தீவு நாடான மொரிஷியஸ், பல்வேறு மதத்தை சார்ந்த மக்கள் இங்கு வாழ்கின்றனர். இங்கு இந்து சமயத்தை பின்பற்றும் மக்கள் மொத்த மக்கள்தொகையில் சுமார் 48.5% உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

4- நேபாளம்: இந்து மதம் நேபாளத்தின் முக்கிய மற்றும் மிகப்பெரிய மதமாகும். மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, நேபாளத்தில் இந்து மக்கள்தொகை சுமார் 23,677,744 என மதிப்பிடப்பட்டுள்ளது, இது அந்நாட்டின் மக்கள்தொகையில் குறைந்தது 81.19% ஆகும், இது உலகின் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு இந்துக்களின் அதிக சதவீதமாகும்.

5- இந்தோனேஷியா: இந்தோனேசியாவில் இந்து மதம் மூன்றாவது பெரிய மதமாகும், இது மொத்த மக்கள்தொகையில் 1.69% மற்றும் பாலியில் கிட்டத்தட்ட 87% மக்களால் பின்பற்றப்படுகிறது. இஸ்லாம் வருவதற்கு முன்பு இந்து மதம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் மதமாக இருந்தது, இன்று இந்தோனேசியாவின் ஆறு அதிகாரப்பூர்வ மதங்களில் ஒன்றாகும்.

6- பங்களாதேஷ்: பங்களாதேஷில் இந்து மதம் இரண்டாவது பெரிய மத இணைப்பாகும், 165.16 மில்லியன் மக்களில் சுமார் 13.1 மில்லியன் மக்கள் தங்களை இந்துக்களாக அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

7- இந்தியாவில் அதிகமாக இந்து மதத்தை பின்பற்றும் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இந்தியாவியில் மட்டுமல்லாமல் உலக நாடுகளிலும் இந்து மத கலாச்சாரம், சம்பிரதாயம் என வெவ்வேறு வடிவில் மக்கள் பின்பற்றுகிறார்கள். அந்த வகையில் இந்த நாடுகளில் அதிகமாக இந்து மக்கள் வாழ்கின்றனர் என கணக்கெடுப்பு சொல்கிறது.

8- ஸ்ரீலங்கா: இந்து மதம் இலங்கையின் பழமையான மதங்களில் ஒன்றாகும். இங்கு இருக்கும் இந்து சமய கோயில்கள் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே கட்டியவை. இலங்கை மக்கள்தொகையில் இந்துக்கள் 12.6% ஆக உள்ளனர்.

# வவுனியாவில் மேழிக்குமரனின் நூல்களின் வெளியீட்டு விழா..

(கலைவாணி ஏகானந்தராசா)




மேழிக்குமரன் என உலகெங்கும் அறிமுகமான திரு க. அருந்தவராசா என்னும் பொன்விழாக்கண்ட எழுத்தாளர், பன்முக ஆளுமைபடைத்த ஒரு படைப்பாளியாவர் ஐரோப்பாவில் யேர்மனியில் அவர் வாழ்ந்த காலத்தில் 6 நூல்களை எழுதி ஒரே மேடையில் வெளியீடு செய்தவரும் வவுனியா "அமுதசுரபி" அறக்கட்டளையின் தாபகரும் தலைவருமாக விளங்குபவரும் ஆவார்.

இவரின் இரண்டு நூல்களின் வெளியீட்டுவிழா வவுனியாவில் நடைபெற்ற பிரமாண்டமான இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணிக்கு வவுனியா நகரசபையின் கலாச்சார மண்டபம் கோலாகலமாக காட்சியளித்தது. ஒரு திருமணவீடுபோல் மண்டபம் அழகான சோடனைகளுடன் காட்சிதர சிறார்கள் முதல் பெரியவர்கள்வரை பட்டு உடைகளும் பூ மாலையுமாக கலாச்சார உடைகளுடன் மண்டபம் நிறைந்து காணப்பட்டனர்.

சரியாக 9 மணிக்கு கலாச்சார மண்டப நுழை வாயிலில் இருந்து விழாவின் கதா நாயகன் கலாநிதி. மேழிக்குமரன்.அருந்தவராஜா அவர்களையும்இ விழாவின் தலைவர் தமிழருவ சிவகுமாரன்இ பிரதம விருந்தினர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன்இ சிறப்பு விருந்தினர்கள் தோழர் சுரேஸ். பிரேமச்சந்திரன்இ திரு. உடுவை. தில்லைநடராஜா கௌரவ விருந்தினர்கள் திரு.க. பேர்ணாட்இ தோழர் சிவசக்தி ஆணந்தன்இ கவிஞர்.இரா.இராஜேஸ்வரன் அனைவரையும் மேளதாளத்துடன் விழா மண்டபத்துக்கு அழைத்துவந்து மாலை அணிவித்து கௌரவமாக மேடைக்கு அழைத்து செல்லப்பட்டமை மிக அற்புதமான காட்சியாக இருந்தது.

மேடையில் குத்துவிளக்கு ஏற்றும் வைபவம் நடைபெற்று பின் மேழிக்குமரனின் 70 ஆவது அகவை நிறைவையொட்டி 70 விருந்தினர்களை தேர்ந்து 70 விளக்குகள் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது. அடுத்து மேழிக்குமரன் அவர்களால் நடாத்தப்படும் ஐந்து பாடசாலைகளில் ஒன்றான வவுனியா சிதம்பரநகர் எழுச்சியின் கரங்கள் பெண்கள்வட்ட மாணவர்களின் வரவேற்பு நடனம் மிக அற்புதமாக அமைந்ததை மண்டபத்திலிருந்து எழுந்த கரகோசம் பறைசாற்றியது.

தமிழருவி சிவகுமார் அவர்களது தலைமைஉரை கொடுக்கப்பட்ட நேரத்தில் மிக கட்சிதமாக இடம்பெற்றது. முக்கியமாக இங்கு ஒருவரை குறிப்பிடவேண்டும். அதாவது மேழி 70 விழா நிகழ்ச்சித் தொகுப்பாளரைப்பற்றி குறிப்பிடாமல் நகர முடியாது. கவிஞர் இரா.இராஜேஸ்வரன் அவர்கள் நிகழ்ச்சித்தொகுப்பை கவிதை பாணியில் அத்துடன் மிக நேர்த்தியாக நகர்த்திச்சென்றார். ஆத்துடன் பாரபட்சமின்றி அனைவருக்குமே 10 நிமிடங்கள் நேரத்துக்கான அலாரம் வைத்திருந்தார் .இதனை யாருமே மீறாத தன்மை கற்றவர்க்கான பண்பாட்டை எடுத்துக்காட்டியது.

மேழி 70 விழாவில் மேழிக்குமரன் அவர்களின் இரு நூல்கள் வெளியீடு செய்துவைக்கப்பட்டது. "கொள்ளிக்காசு" (சிறுகதை தொகுப்பு) நூலை ந.பார்த்திபன் (ஓய்வுநிலை உப பீடாதிபதி வவுனியா)அவர்கள் அறிமுகம் செய்ய (மூத்த இலக்கியவாதி) வடகோவை வரதராஜன் முதல் பிரதியை பெற்றார். அடுத்து "அல்சைமர்" (மருத்துவநூல்) நூல் (ஆசிரிய ஆலோசகர் வவுனியா) நிறைமதி அவர்கள் அறிமுகம் செய்துவைக்க (வைத்தியர்) வேலுப்பிள்ளை. பரமநாதன் அவர்கள் முதல் பிரதியை பெற்றார்

நிகழ்ச்சிகளின் நடுவே மண்டபத்தில் இருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டதுடன் தாகசாந்தியும் செய்யப்பட்டது. தொடர்ந்த நிகழ்வான வவுனியா லலித கலாலய மாணவர்கள் கண்களுக்கு விருந்தளிக்கும் சிறப்பு நடனத்தை தந்து அவையோரை மகிழ்வித்தனர்.சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து நூல் நயவுரைகள் இடம்பெற்றன. இதில் மிக லாவகமாக ஒரு யுக்தி கையாளப்பட்டது. அதாவது ஒவ்வொரு பேச்சாளருக்கும் 10 நிமிடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டன.

"கொள்ளிக்காசு" நூலினை மூன்று பகுதிகளாகப் பிரித்து மூன்று எழுத்தாளர்கள் வெற்றிச்செல்வி, செம்மனச்செல்வி, நிருஜா ஆகிய மூவரும் மிக சிறப்பாக நயந்தனர். அதேபோல "அல்சைமர்" நூல் நயவுரையை எழுத்தாளர் மாயன், மருத்துவர் சரஸ்வதி.பிரபாகரன், செல்வி வனிதா. சேனாதிராஜா நயந்தனர். தொடர்ந்து வாழ்த்துரைகள் வழங்குவதற்கு ஒருவருக்கு மூன்று நிமிடங்கள் ஒதுக்கப்பட்டது. மேழிக்குமரனை வாழ்த்த எனக்கும் ஒரு சந்தர்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தேன்: அத்துடன் மேடையில் நூலாசிரியரிடம் நூலைப் பெறுவதற்கு சிலரை மட்டுமே அழைத்திருந்தனர். அதிலும் என்னை அழைத்ததில் மிகப் பெருமையடைந்தேன்.

இங்கு மிக முக்கியமாக என் மனதை தொட்ட ஒரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். அதாவது நூல்வெளியீட்டின்போது நூலாசிரியரின் வேண்டுகோளாக நூலைப் பெறவிரும்புவோர் நிர்ணயிக்கப்பட்ட விலையாக இரண்டு நூலுக்கும் சேர்த்து 500 ரூபா மட்டுமே செலுத்தும்படி கேட்கப்பட்டது. மேடையில் பெற்றுக்கொண்ட பிரமுகர்கள் தவிர்ந்த அனைவருக்கும் மண்டபத்தில் இருக்கையிலேயே நூல்கள் வழங்கப்பட்டன.

மண்டபம் நிறைந்திருந்த போதிலும் நிகழ்ச்சியின்போது அமைதி பேணப்பட்டது சிறப்பான அம்சமாகும். இறுதி நிகழ்வாக திரு அருந்தவராஜா அவர்களை பல பிரமுகர்கள் படைப்பாளிகள் கவிஞர்கள் வாழ்த்திப் பேசியதுடன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். குறிப்பிட்ட நேரத்தில் விழா ஆரம்பித்து குறிப்பிட்டநேரத்தில் சமூகமளித்த அனைவருக்கும் சைவ, அசைவ உணவுகள் வழங்கி நிறைவு பெற்றது .விழா ஏற்பாட்டாளர்களுக்கு மகுடம் சூட்டி பாராட்டப்படவேண்டிய விடயமாகும்!...

# தாயகச் செய்திகள் சில...

20.02.2024- 2023ம் ஆண்டில் 470 யானைகள் உயிரிழப்பு. இவற்றில் 200 யானைகள் மனிதர்கயால் கொல்லப்பட்டது. எனையவை நோய், விபத்து, இயற்கை மரணம் என வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்தது.

22.02.2024- நீர், மின்கட்டணம், வரி அதிகரிப்பால் சுமார் 1.000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

23.02.2024- நாட்டில் இதுவரை 92 லட்சம்பேருக்கு (மொத்த சனத்தொகையில் 40 சதவீதம்) கடவுச்சீட்டு வழங்கப்பட்டிருப்பதாக அரசு குறிப்பிட்டுள்ளது.

24.02.2024- நாடு முழுவதும் 40 ஆயிரத்துக்கும் அதிகமான போலி மருத்துவர்கள் உள்ளனர் என அரச வைத்தியர் சங்கள் அறிவித்துள்ளது.

26.02.2024- பொருளாதார நெருக்கடியால் கடந்த வருடத்தில் சுமார் 3 லட்சம்பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

29.02.2024- கடந்த ஆண்டில் மட்டும் 694 புதிய எயிட்ஸ் நோயாளிகள் (611 ஆ + 81 பெ) அடையாளம். மொத்தம் 4.100 பேராக உயர்ந்துள்ளது.

01.03.2024- இலங்கை விமானப்படை தனது 73வது ஆண்டை நிறைவுசெய்தது.

05.03.2024- 2022ல் 1.618, 2023ல் 1.639 சிறுவர் துஸ்பிரயோக மறைப்பாடுகள்.2024 தை, மாசி மாதங்களில் மட்டும் 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட 112 சிறுமிகள் கர்ப்பம் தரிப்பு. சுகாதார அமைச்சு தகவல். 2023ல் 1.497 சிறுவர் பாலியல் சம்பவங்களும் 2022ம் ஆண்டில் 1.232 சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

07.03.2024- நாடுமுழுவதும் 62 லட்சம் தெருநாய்கள் காணப்படுகிறது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

10.03.2024- இலங்கையில் 5 - 19 வயது கல்வி கற்கும் மாணவர்கள் சுமார் 4.10.000 பேருக்கு எடை குறைவு இருப்பதாக மருத்துவ அறிக்கை தெரிவிப்பு.

12.03.2024- யாழ் பல்கலைக் கழகத்தின் 50வது (பொன்விழா) பட்டமளிப்புவிழா 14.15,16ம் திகதிகளில் நடைபெற்றது. 2.873 பேர் பட்டம் பெற்றனர்.

14.03.2024- நாட்டில் காசநோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு 2023ல் 9.358 பேர் அடையாளம் காணப்பட்டனர். தினமும் 2 பேர் மரணம்.

15.03.2024- நாட்டில் புகையிலைப் பாவனையால் தினமும் 50 பேர்வரை மரணம். புகைப்பிடித்தலால் ஒரு நாளைக்கு 520 மில்லியன் ரூபா செலவாகின்றது என அரச அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

16.03.2024- கடந்த ஆண்டில் 1.64.000 சிறுநீரக நோயாளிகள் அடையாளம்.

17.03.2024- நிதி நெருக்கடியால் கடந்த ஆண்டு 400 வைத்தியர்கள், 2.528 தாதியர்கள் 159 பொறியியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

18.03.2024- இலங்கை தினகரன் பத்திரிகை தனது 92வது பிறந்தநாளைக் கொண்டாடியது.

19.03.2024- வடபகுதியில் மட்டும் வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகச் சொல்லி 254 கோடி மோசடி 139 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

20.03.2024- நாட்டில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவிகள், திருமணமான, திருமணமாகாத பெண்கள் என தினமும் 1.000 வரையிலான கருக்கலைப்பு இடம்பெறுவதாக பத்திரிகைச் செய்து ஒன்று குறிப்பிட்டுள்ளது.

21.03.2024- நாட்டு மக்களில் ஒருவர் வருடாந்தம் 13 கிலோ சீனியைப் பாவித்து வந்தார்கள். தற்போது 39 கிலோ பாவிக்கிறார்கள். இதனால் நீரழிவு, பற்சூத்தை, வாய்நோய்கள் அதிகரிப்பு அரச வைத்தியர் சங்கம் அறிவிப்பு.

25.03.2024- தரம் 5 வரையிலான பாடசாலை மாணவர்களுக்கான இலவச உணவு வழங்கும் திட்டம் 25.03.2024 தொடக்கம் அமுல். 17 லட்சம் மாணவர்கள் பயன் அரசுக்கு வருடாந்தம் 1.660 கோடி ரூபா செலவு.

26.03.2024- பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் 1.1.24 தொடக்கம் 10.03.24 வரை 1.077 முறைப்பாடுகள் பொலிஸ் அறிவிப்பு.

27.03.2024- யாழ்ப்பாணம் 19 பேர், மன்னார் 4பேர், வவுனியா 8பேர், முல்லைத்தீவு 8 பேர் கிளிநொச்சி 13 பேர் என மொத்தம் 52 கொலைச் சம்பவங்கள் 2023ம் ஆண்டில் நிகழ்ந்துள்ளன. பொலிஸ் அறிக்கை தெரிவிப்பு.

28.03.2024- இலங்கையில் ஒரு மாதம் ஒருவருக்கு ஏற்படும் அடிப்படைச் செலவு 17.014 ரூபா என அரசபுள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்தது.

29.03.2024- 2023 யூன் மாத இறுதிக் கணக்கெடுப்பின்படி நாட்டின் சனத்தொகை பல்வேறு காரணங்களால் வீழ்ச்சி கண்டுள்ளது. 2022ம் ஆண்டைவிட 1.44.395 பேரால் பிறப்பு குறைவடைந்துள்ளது.

31.03.2024- நாட்டில் 10 லட்சம் புதிய வாக்காளர்கள். இவர்களோடு மொத்த வாக்காளர் தொகை 1 கோடி 70 லட்சமாக உயர்ந்துள்ளது.

01.04.2024 - 01.01.2024 - 31.03.2024 வரை 3 மாதங்களில் 6.08.475 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் வந்துள்ளனர். இதனால் நாட்டுக்கு வருமானம் அதிகரிப்பு.

02.04.2024- நாட்டில் தற்போது 30.000 அதிகமான 4 - 15 வயது சிறுவர்கள் யாசகம் (பிச்சை) பெற்று வாழ்கிறார்கள் பேராதனைப் பல்கலைக் கழக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. தற்போது பிச்சை எடுப்போர் எண்ணிக்கை 57 லட்சம்பேரா உயர்ந்துள்ளது.

03.04.2023- காஸாவில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவ இலங்கை அரசு 1 மில்லியன் டொலர்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

04.04.2024- 2024 முதல் 3 மாதங்களில் 35.000 பெண்கள் 40.000 ஆண்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். யப்பான், கொரியா, குவைத், இஸ்ரேல், ருமேனியா நாடுகளுக்கே மிக அதிகமானோர் (வேலைவாய்ப்பு)சென்றுள்ளனர்.

06-04.2024- திடீர் வீதி விபத்துக்களால் நாளாந்தம் 312 - 35 பேர்வரை பலி. ஒரு வருடத்தில் சமாா 1.000 பேர்வரை இறப்பு சுகாதாரப்பகுதி தெரிவிப்பு.

09.04.2024- இலங்கையில் வருடாந்தம் சுமார் 800 பேர்வரை நீரில் மூழ்கி இறக்கிறார்கள். வடமாகாணத்தில் 50 பேர்வரை இறப்பு என சுகாதார பகுதியினர் தெரிவிப்பு.

10.04.2024- புதுவருடத்தையொட்டி 779 சிறைக்கைதிகள் அரசு விடுதலை.

11.04.2024- தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்டு 13 வருடங்கள் 9.375 விபத்துக்கள் 66 பேர் பலி. 637 பேர் ஊனமுற்றுள்ளனர் அரசு அறிவிப்பு.

12.04.2024- நாட்டில் வாழும் மக்களில் 30 வீதம்பேருக்கு நீரழிவு நோய் இருப்பதாக சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு.

18.04.2024- பல்வேறு காரணங்களால் 2023ல் 1.800 வைத்தியர்கள், 300 விசேட வைத்தியர்கள் 1.000 தாதியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

20.04.2024- நாட்டில் கடும் வறட்சி கடந்த 4 மாதங்களில் 3.646 குடும்பங்கள் 11.413 பேர் பாதிப்பு. அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் அறிவித்தது.

23.04.2024- வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி 1.1.2024 - 30.4.2024 வரை 1.371 முறைப்பாடுகள் 53 கோடி பணம் மீட்பு பொலிஸ்தரப்பு தெரிவிப்பு.

25.04.2024- ஆஸ்துமா (முட்டு) நோய் அதிகரிப்பு மொத்தச் சனத்தொகையில் 10 - 15 வீதமானோர் பாதிப்பு சுகாதாரப் பகுதி அறிவிப்பு.

26.04.2024- இந்த வருடம் முதல் 4 மாதங்களில் 21.055 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர் சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு.

27-04.024- நாட்டில் புகைபிடிப்போர் அதிகரிப்பு ஒரு நாளைக்கு 45 - 50 பேர்வரை இறப்பு. ஒரு நாள் புகைப்பிடிப்பால் 52 கோடி ருபாவை மக்கள் செலவு செய்கிறார்கள் என அரசு குறிப்பிட்டுள்ளது.

30.04.2024- ஈரான் ஜனாதிபதி இலங்கை விஜயம். ஈரானின் நிதி உதவியால் ”உமா ஓயா” நீர்ப்பாசன திட்டத்தைத் திறந்து வைத்தார்.

# உலகச் செய்திகள் சில...

20.02.2024- பபுவாநியூகினியா தீவில் ஏற்பட்ட கலவரங்களில் 64 பேர் பலி.

23.02.2024- ரஷ்ஷியா மீது மேலும் கூடுதல் பொருளாதார தடைகளை விதிக்க ஐரோப்பி ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

25.02.2024- உக்ரைன் - ரஷ்ஷியப் போர் 25.2.24ல் 2 வருடங்கள் நிறைவு 31.000 உக்ரையின் படையினர் இறப்பு.

26.02.2024- நேட்டொ அமைப்பு நாடுகளில் 32வது நாடாக சுவீடன்நாடு இணைந்துள்ளது.

28.02.2024- பாக்கிஸ்தானில் முதலாவது பெண் முதலமைச்சராக (முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரிப்பின் மகள்) தெரிவு செய்யப்பட்டுள்ளார். பஞ்சாப் மாநிலம்

01.03.2024- 29.02.2024ல் சவுதி அரேபியாவில் 5 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றம். ஜனவரி பெப்ரவரியில் 34 பேருக்கும் 2023ம் ஆண்டில் 170 பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

02.03.2024 உலகில் தற்போது 1 பில்லியன் மக்கள் உடற்பருமன் கூடியவர்கள் உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.

04.03.2024- மத்திய அமெரிக்கா ஹெய்டி நாட்டில் சிறை உடைப்பு 4.000 கைதிகள் தப்பி ஓட்டம். உள்நாட்டுக் கலவரம் 100 பேர்வரை பலி.

05.03.2024- 2023ம் ஆண்டில் 29.000 வெளிநாட்டவர்கள் சிறிய படகுகள்மூலம் அகதிகளாக இங்கிலாந்தை சென்றடைந்துள்ளனர்.

10.03.2024- காஸாப் போரால் உயிரிழந்த சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு 2019 - 2024 வரை 4 வருடங்களில் 12.193 சிறுவர்களும் 2023 அக்டொபர் முதல் 2024 பெப்ரவரி வரை 13.000 சிறுவர்களும் பலியாகியுள்ளனர். 2023 தொடக்கம் 15.03.2024ரை 31.272 பலஸ்தீனர்கள்பலி 73.024 பேர் படுகாயம். 2.3 மில்லியன் மக்கள் பாதிப்பு.

20.03.2024- உலகின் மகிழ்ச்சியான நாடு பட்டியலில் மீண்டும் பின்லாந்து தெரிவு (7வது தடவை) டென்மார் 2வது ஐஸ்லாந்து 3 இடத்திலும் உள்ளன.

22.003.2024- 2023ம் ஆண்டில் உலகின் மிக மோசமான மாசடைந்த தலைநகரா இந்தியா-புதுடில்லி தெரிவு. உலக சுற்றாடலஆ அமைப்பு அறிவித்துள்ளது.

23.03.2024- உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் பாராளுமன்ற பொதுத் தேர்தல் 19.04.2024 - 01.06.2024 வரை நடைபெறவுள்ளது.

24.03.2024- ரஷ்ஷிய ஜனாதிபதி தேர்தலில் (5வது முறை) 87 சதவீத வாக்குகளைப் பெற்று புடின் வெற்றி (71 வயது) 2030ம் ஆண்டுவரை இவர் பதவி வகிப்பார்.

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)


9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---



ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
Olirumvaalvu Organization - Thunukkai

மை.சிவராஜா,
பிரதம ஆசிரியர்,
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி.

நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினை மத்தியில் பணியாற்றி வருகிறது. தங்கள் மண் சஞ்சிகை குழுமத்தினருக்கு ஊடாக ஏற்பாடு செய்து வழங்கிய (செல்வன் சுலீசன் அவர்களின் நிதி அனுசரணையுடன்) 150 யூரோ (49571.41) நிதியினைப்பயன்படுத்தியமது துணுக்காய் பிரதேசத்தில் உள்ள முதியோர்கள்,விசேட தேவையுடைய மாணவர்களுக்கு விசேடஉணவுப்பரிசில்பொதிகள் வழங்கினைத்தோம். என்பதை தங்களிற்கு தெரிவித்துக்கொள்வதோடு இச்செயற்திட்டத்தை செயற்படுத்த நிதி அனுசரணை நல்குவதற்கு ஏற்பாடு செய்து வழங்கிய தங்களிற்கும் தங்கள் குழுமத்தினருக்கும் எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். தங்களது சேவை எம்மவர் மத்தியில் மேலும் கிடைத்தவண்ணமுள்ளமையினையிட்டு மிக்க மகிழ்வடைவதோடு பாராட்டி வாழ்த்தி நிற்கிறது ஒளிரும்வாழ்வு குடும்பம்.

நன்றி

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-01-2024 + 1.120-67

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen +100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)------------

\+ 580-00 + 580-00

--------------

+1.700-67

அன்பளிப்புகள்...
8- செல்வி ஸ்ரெவ்வானி மகாலிங்கம்- Oberhausen + 210-00
( பிறந்தநாள் அன்பளிப்பு )
9- திரு பசுபதி சௌந்தரராசா - Duisburg + 100-00
( பேரப்பிள்ளையின் பிறந்தநாள் அன்பளிப்பு )
10- திரு அன்ரனி வரதராசன் - Düsseldorf + 150-00
( மகளின் பிறந்தநாள் அன்பளிப்பு )
11- திருமதி சறோஜினிதேவி நாகராசா- Haren + 150-00
( பிறந்தநாள் அன்பளிப்பு )
12- திரு ச.சிவவினோபன் - Borken + 250-00
13- திரு கிறிஸ்ரி அமலதாசன் - London + 100-00
14- திரு எஸ் சிவஞானம் - London + 155-00
(பேரன் றொக்ஸன் லியோ பிறந்த அன்பளிப்பு)............................................

1115-00 - 1115-00

----------------

\+ 2.815-67

முற்பக்கப்படி + 2.815-67

அன்பளிப்புகள்..

15- திருமதி புவனேஸ்வரி சிறீஸ்கந்தராசா-Duisburg
(தந்தையார் நினைவு அன்பளிப்பு) + 50-00

16- திருமதி மேரி விஜயகுமார் - Stuttgart + 200-00
(கல்வி மேம்பாட்டுஉதவி-பங்குனி-சித்திரை)

17- திருமதி மங்கை சிவராசன் - Stuttgart + 200-00
(கல்வி மேம்பாட்டுஉதவி-பங்குனி-சித்திரை)

18- திருமதி பிங்கலை செந்திலன்-Kitzingen + 400-00
தந்தையார் சின்ன இராஜேஸ்வரனின் .....................
30 வது ஆண்டு நினைவு நிதி உதவி) + 850-00 + 850-00

..............................................

+ 3.665-67

**அனுப்பியது...**

| முல்லைத்தீவு மாவட்டம்.. | ரூபா | யூரோ |
|---|---|---|
| 1)"ஒளிரும் வாழ்வகம்" மல்லாவி துணுக்காய் | | |
| 11.04.2024 - (திருமதி சறோஜினிதேவி) | 45.223-80 | - 150-00 |
| 2)"ஒளிரும் வாழ்வகம்" புதுக்குடியிருப்பு | | |
| 20.03.2024 - (சௌந்தரராசா) | 30.257-68 | - 100-00 |
| 06.04.2024 - (சிவவினோபன்) | 77.907-97 | - 250-00 |
| 25.04.2024 - அமல் + சிவஞானம் | 78.242-18 | - 255-00 |
| 3)"நல்லாயன் சிறுவர் இல்லம்" மாங்குளம் | | |
| 26.03.2024 - (ஸ்ரெவ்வானி) | 65.727-45 | - 210-00 |
| 25.04.2024 - மேரி + மங்கை | 1.24.092-80 | - 400-00 |
| 4)"அருளகம்" சிறுவர் இல்லம் வவுனியா | | |
| 20.03.2024 - கலைவாணி- பிருந்தாவனி | 1.54.559-48 | - 480-00 |
| 5)"செபமாலை" இரக்கத்தின் இல்லம் | | |
| தலைமன்னார்.09.04.2024 (அ.வரதன்) | 45.696-90 | - 150-00 |
| 6)"திருஞான சம்பந்தர் " குருகுலம் | | |
| களுவாஞ்சிக்குடி - 25.04.2024(அனிதா) | 1.49.371-42 | - 480-00 |
| 7) மலையகம் - கல்வி அபிவிருத்தி | | |
| றம்பொடை - நுவரெலியா மாவட்டம் | 1.24.355-77 | - 400-00 |
| (பிங்கலை செந்திலன்) | | .................... |
| | | - 2.875-00 |

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி

01.03.2024 - 31.03.2024 - 20-49
01.04.2024 - 30.04.2024 - 23-29 ............................- 43-78

-------------

- 2.918-78 - 2.918-78

---------------

30.04.2024 மீதி கையிருப்பு + 746-89

----------------

# ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்
# Olirum Vaalvu- Puthukudiyiruppu Division

உடையார் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

Reg No:- MU/PKI/DS/VSSO/25

18-04-2023

பிரதம ஆசிரியர்

மண் சஞ்சிகை

ஜேர்மனி

அன்புடையீர்

## மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கான மாதாந்த சுகாதாரப் பொருட்கள் உதவிகோரல்

மேற்படி விடயம் தொடர்பாக 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒளிரும் வாழ்வு புதுக்குடியிருப்பு அமைப்பானது மாற்றுத்திறனாளிகளுக்காக மட்டுமன்றி பெண்தலைமைக்குடும்பங்கள், முதாளர்கள், மாணவர்கள் என அனைவருக்காகவும் பல செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது. அந்தவகையில் எமது ஆரம்பகாலம் தொடக்கம் தாங்கள் ஆற்றிவரும் அரும் பணிக்கு எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

மேலும் எமது பராமரிப்பில் மன நிலை உடல் நிலை பாதிக்கப்பட்ட மற்றும் எழுந்து நடக்க முடியாத நிலையில் 20 பிள்ளைகள் உள்ளார்கள் இப்பிள்ளைகளில் பலர் நாளாந்தம் பம்பஸ் பயன்படுத்துபவர்களாவர், அத்துடன் பெண்பிள்ளைகள் பலர் வயது வந்தவர்களாக உள்ளார்கள் அவர்கள் நப்கின் வகைகளும் பயன்படுத்துபவர்களாக உள்ளார்கள்.

இவர்களுடைய பெற்றோர்கள் மிகவும் வறுமைப்பட்டவர்களாவர் நாளாந்த கூலிவேலைகளுக்குச் சென்றே தமது நாளாந்தச் செலவினங்களைச் சமாளித்துவருகின்றார்கள் எனவே இப்பிள்ளைகளின் சுகாதார நலனுக்காய் பம்பஸ் மற்றும் நப்கின் வகையினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய உதவிகளை வழங்கி உதவுமாறு தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளைகள் விபரம்

பம்பஸ் பயன்படுத்துபவர்கள்– 15

நப்கின் பயன்படுத்துபவர்கள் – 10

நன்றி

இ.அம்பிகைபாலன்

தலைவர்- ஒளிரும்வாழ்வு

# ஒளிரும் வாழ்வு-புதுக்குடியிருப்பு பிரதேசம்
# Olirum Vaalvu- Puthukudiyiruppu Division

உடையாயர் கட்டு
கிழக்கு, உடையார் கட்டு
புதுக்குடியிருப்பு

Udaiyarkaddu east
Udaiyarkaddu
Puthukudiyiruppu

Reg No:- MU/PKI/DS/VSSO/25

18-04-2023








அம்மாவின் சேலைகள் தொட்டில்கள் ஆனது வாழும் நாளெல்லாம் கடவுள் நம்மிடம் தந்தான் பாதுகாக்கத்தான் பக்குவமாக்கத்தான்..........

இந்து அன்பகம் சிறுவர் அபிவிருத்தி நிலையம்
Hindu Anpakam Children Development Center
හින්දු අන්පකම් ළමා සංවර්ධන මධ්‍යස්ථානය

இறந்தவர்களது குழந்தைகளை இரும்பவர்கள் காப்போம்
පඩුරුසම්පන්නකගේ ගලපෙනා පමන කඩරමුබලරුද්
Parentless Children Pity Rescue, Protect Them

பதிவு இல: NP/30/23/04/02
NEP/05/V/55/111
Reg.No: HA/04/V/24

E-mail: hinduanupakam@gmail.com
2ம் கட்டை, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா. தொ.இல: +94 024-2223683
2nd Mile post, Mannar Rd, Veppankulam, Vavuniya. T.P : +94 024-2223683

**President**
K.Jeyarany

**Vice President**
K.Uthayakumar

**Secretary**
S.Niranjana

**Treasurer**
S.Basugy

**Asst. Secretary**
N.Dilshanth

**Asst. Treasurer**
K.Sasikaran

**Board of Members**
G.Sriskantharajah
K.Kanesarajiah
S.Raveendran
S.Rathimalar
V.Rajalaxmi
K.Niththiyananthan
S.Jayaruban
S.Vasanthan
T.Lankathevi

**Auditor**
T.Amalan

**Bank/Ac/details**
032020254291
Hatton National Bank
Vavuniya.

**Contact:**
024 222 3683
077 6143628

**E-mail:**
hinduanpakam@gmail.com

2024.03.20

திரு வைரமுத்து சிவராஜா அவர்கள்,
பிரதம ஆசிரியர்,
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
ஜேர்மனி

நன்றி கூறல்.

மேற்படி எமது சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் பராமரித்து வரும் சிறுமிகளின் பராமரிப்புச் செலவிற்காக தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட (500 யூரோ) ரூபா 164549.18 (ஒரு லட்சத்து அறுபத்து நாலாயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்பது ரூபா பதினெட்டு சதம்) வங்கியூடாகப் பெற்றுக் கொண்டோம். இதற்கு நாங்களும் எமது இல்லச்சிறார்களும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் தங்களது சேவை மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல ஸ்ரீபத்திரகாளி அம்பாளை வேண்டுகின்றோம்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

கு.ஜெயராணி
தலைவர்
இந்து அன்பகம்
சிறுவர் அபிவிருத்தி நிலையம்
வேப்பங்குளம், வவுனியா.

**Good Shepherd Child Development center,**
**Mullai Road, Mankulam**
**Srilanka.**
E-mail – mankulamcdc@gmail.com
Tel. No. – 0212060077/+94775924582
Date: 24.04.2024

மாங்குளம் நல்லாயன் இல்லத்தினால் அரவணைக்கப்படும் சிறார்களின் கல்விப்பாதையின் தூண்களாக பயணித்து வரும் மண்சஞ்சிகையின் உறவுகள் ஒவ்வொருவருக்கும் இறையாசீர் கூறி அன்புடன் வரைவது.

உங்களின் தாரா உள்ளத்தின் நிதி அனுசரணையினால் எம் சிறார்களுக்கு கல்வி அறிவூட்ட எமக்கு பலமாக இருந்து வரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்றோம். 28.02.2024 திருமதி மேரி விஜயகுமார் மற்றும் திருமதி மங்கையற்கரசி சிவராசன் ஆகியோர் மண் சஞ்சிகை அமைப்பின் ஊடாக அனுப்பிவைத்த ரூபா 130,926.22 சதம் (400 Euro) எம் கரம் கிடைத்தது. இந்நிதியானது பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புகளில் (கணிதம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களை) கற்பிக்கும் ஆசிரியர்களின் மாசி, பங்குனி, சித்திரை மாதங்களின் கொடுப்பனவிற்காக பயன்படுத்தினோம் என்பதை அறியத்தருகின்றோம்.

உண்மையில் உங்களின் இப்பெரும் உதவி எமக்கு ஆறுதலாக உள்ளது. பல சிரமங்களின் மத்தியில் பிள்ளைகளின் வளர்ச்சிக்காக நீங்கள் நிதி சேமிக்கின்றீர்கள் என்பதை நாமறிவோம். உங்களின் அயராத ஒத்துழைப்பினால் பல பிள்ளைகள் தமது ஆற்றல்கள் திறமைகளை இனம் கண்டு தமது கல்விப்பாதையில் முன்னேறிச் செல்கின்றார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் செய்து வருகின்ற இரக்கத்தின் அன்பு செயல் பலருக்கு மகிழ்வையும் அர்த்தமுள்ள வாழ்வினை வாழ வழி சமைத்துள்ளது என்பதை எமது உளக்கண்களால் காண முடியும்.

இந்நாட்களில் எமது பிள்ளைகள் பாடசாலை மட்டங்களிலான விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றார்கள் அதுபோல் கல்வியிலும் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள். மேலும் பல புதிய பிள்ளைகள் இல்லத்தில் இணைந்துள்ளனர். தாரா உள்ளத்தினால் செய்கின்ற உதவிகளுக்கு நிச்சயம் இறைவன் நிறைவான வரங்களை அள்ளித்தருவார் என்றும் உங்களின் ஆசீரும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் எம்மை வந்து சேரும் என்ற நம்பிக்கையுடன் நன்றியுடன் இணைந்த ஆசீரை கூறி விடைபெறுகின்றோம்.

நன்றி

இப்படிக்கு,
உங்கள் உதவியை என்றும் மறவாத,

Sister In Charge
Good Shepherd Children's Home
Mankulam.



சர்வோதய நிறுவனத்தின் ஸ்தாபகரும்

ஸ்ரீ லங்காஹபிமான்ய

## கலாநிதி ஏ. டி. ஆரியரத்ன

( 05.11.1931 - 16.04.2024 )

63 வருடங்கள் ஓயாது உழைத்த மாமனிதர்....
மனிதநேயப் பெருந்தகை மறைந்தார் 16.04.2024...
ஒரு நாள் அவரிடம் கல்வி கற்ற அனுபவம் எனக்கு உண்டு...

இலங்கை சர்வோதய அமைப்பின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான கலாநிதி ஏ.ரி ஆரியரத்னா முதிர்ச்சி, உடல்நலக்குறைவால் 16.04.2024 அன்று தனது 92வது வயதில் காலமான செய்தி மதம், குலம், மொழி, நிற வேறுபாடுகளைக் கடந்து மனிதநேயத்தை விரும்பி வாழ்ந்துவரும் அவரது அபிமானிகளுக்கு அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பண்பாளன், அமைதியானவர், செயல்வீரர், ஆசான் அப்படிப்பட்ட அந்த மாமனிதனிடம் நான் ஒரு நாள் பயிற்சி பெற்றதை இன்றும் நினைத்துப்பார்த்து மகிழ்கின்றேன்... ஆம் 1972ம் ஆண்டு நான் ஒரு இளைஞன். துணுக்காய் டி.ஆர்.ஓ பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கையில் (D.R.O - Division) நானும் இன்னொருவரும் தெரிவுசெய்யப்பட்டு யாழ்-அச்சுவேலியிலுள்ள யாழ் மாவட்ட கிராமிய அபிவிருத்திப் பாடசாலையில் (Jaffna District Rural Developament Training SchooL ) ஒருமாத காலம் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப்பட்டோம்.

அங்கு பயிற்சியில் இருந்த போது ஒரு நாள் இலங்கை சர்வோதய தலைவர் திரு ஆரியரத்னா, வடபகுதி சர்வோதயத் தலைவர் தொண்டர் திருநாவுக்கரசு (புங்குடுதீவு) அடுத்தது பொதுத்தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த இரண்டு யோர்மனியர்கள் உட்பட ஒரு குழுவினர் எமக்குப் பயிற்சி அளிக்க வந்து ஒரு நாள் முழுவதும் அவர்களோடு பயிற்சிபெற்று உண்டு குடித்து மகிழ்ந்த சம்பவம் இன்றும் பசுமையான நினைவாக என்மனதில் உண்டு....

இலங்கையில் சர்வோதய இயக்கமானது இன, மொழி, மதங்களைக் கடந்து அனைவருக்கும் விழிப்புணாவை ஊட்டும் நோக்கில் சிந்தனை, உழைப்பு, பகிர்தல், உதவுதல் என்னும் எண்ணக் கருவை அடிப்படையாகக்கொண்டு இயங்கிவரும் அமைப்பாகும். 1958ம் ஆண்டுமுதல் இந்த அமைப்பு மனிதநேய உதவிகளை, மேற்கொண்டுவரும் சிறந்த சமூகசேவை அமைப்பாகும்.

( மிகுதி 61ம் பக்கம் )










மண் சஞ்சிகையின் வாசகர் செல்வி ஸ்ரெவ்வானி மகாலிங்கம் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் மாங்குளம் ''நல்லாயன் சிறுவர் இல்லப்'' பிள்ளைகளுக்கும் உணவு வழங்கல் 03.04.2024









மண் சஞ்சிகையின் வாசகர் திருமதி சறோஜினிதேவி நாகராசா அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் மல்லாவி-துணுக்காயிலுள்ள ''ஒளிரும் வாழ்வக'' பிள்ளைகளுக்கும் முதியோருக்கும் உணவு வழங்கல் 13.04.2024

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 225




World May Day

## அனைத்துலக தொழிலாளர் தின வாழ்த்துகள்

(01-05-2024)


| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |